534

# வரலாறு

# தரம் 11

புதிய பாடத்திட்டம் 2016

சிறுகுறிப்பேடு











இராஜ். சுப்ரமணியம்

பூபாலசிங்கம் புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
| --- | --- |
| Class No: | |
| Acc No | 534 |

Arasady Public Librar,
Municipal Council
Batticaloa.

534

# வரலாறு

## புதிய பாடத்திட்டம் 2016

## (பாகம் - 02)

# தரம் - 11

## வினாவிடைகள்

## கணிப்பீடுகள்

## வரலாற்று விளக்கப்படங்கள்

Class No: 900
Acc No 534

பூபாலசிங்கம் புத்தகசாலை
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.எண் : 0112422321, 0112435713
மின்னஞ்சல்
Poobalasingham202@gmail.com

Arasady Public Library
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | அலகு 05 / பிரித்தானியரின் கீழ் இலங்கையில் சமூக மாற்றங்கள் | 01 - 12 |
| 02. | அலகு 06 / இலங்கை சுதந்திரமடைதல். | 13 - 42 |
| 03. | அலகு 07 / உலகில் இடம்பெற்ற பிரதான புரட்சிகள் | 43 - 61 |
| 04. | அலகு 08 / உலக மகா யுத்தங்களும் இணக்கப்பாடுகளும். | 62 - 90 |

**கணிப்பீட்டுப் பயிற்சிகள்.**

| | | |
|---|---|---|
| 01. | அலகு 05 / பிரித்தானியரின் கீழ் இலங்கையில் சமூக மாற்றங்கள் | 91 - 95 |
| 02. | அலகு 06 / இலங்கை சுதந்திரமடைதல். | 96 - 102 |
| 03. | அலகு 07 / உலகில் இடம்பெற்ற பிரதான புரட்சிகள் | 103 - 107 |
| 04. | அலகு 08 / உலக மகா யுத்தங்களும் இணக்கப்பாடுகளும். | 108 - 117 |
| 09. | கணிப்பீட்டுப் பயிற்சிகளுக்கான விடைகள். | 118 - 119 |
| 10. | வரலாற்று விளக்கப்படங்களும் குறிப்புக்களும். | 120 - 134 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 05
## பிரித்தானியரின் கீழ் இலங்கையில் சமூக மாற்றங்கள்

**01. ஆங்கிலேயர் இலங்கை வருகைக்கு முன்னர் இலங்கையின் பொருளாதார நிலை பற்றிக் குறிப்பிடுக.**

- ➢. பாரம்பரிய பொருளாதார முறைமை.
- ➢. பண்டமாற்று முறையிலான பொருளாதாரம்.
- ➢. போர்த்துக்கேயர் வர்த்தகத்திற்கு முதலிடம் வழங்கியமையால் விவசாயம் நலிவுற்றமை.
- ➢. சுயதேவைப் பொருளாதார முறைமை வீழ்ச்சியுற்று அரிசி இறக்குமதி செய்யப்பட்டமை.
- ➢. ஒல்லாந்தர் காலத்தில் கறுவா, மிளகு முதலிய ஏற்றுமதிப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டமை.
- ➢. ஒல்லாந்தர் சிறு கைத்தொழில்களை ஆரம்பித்ததுடன் சம்பளத்திற்கு உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் உருவானது.
- ➢. மத்திய மலைநாட்டில் மரபு வழி, சமூகப் பொருளாதார முறை பாரிய மாற்றங்களின்றி தொடர்ந்து நீடித்தது.

**02. பிரித்தானியரின் வருகையின் போது இலங்கையில் நிலவிய பொருளாதார முறை பற்றிக் குறிப்பிடுக.**

- ➢. மரபு ரீதியான பொருளாதார கட்டமைப்புக் கொண்ட சமூக முறை நிலவியது.
- ➢. சுயதேவைப் பூர்த்தியடைந்த கிராமியப் பொருளாதார முறை காணப்பட்டது.
- ➢. கூலிக்காக வேலை செய்யும் முறைக்குப் பதிலாக உழைக்கும் உழைப்பை பரிமாற்றும் "அத்தம்" முறை காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிராம சபைகள் மூலம், பொது வழக்குகள், சிறு பிரச்சனைகள் என்பன தீர்க்கப்பட்டன.
- 1815ம் ஆண்டிற்குப் பின்னர் கட்டாய அரச சேவை, அரச நிலத்தை அனுபவிப்பது போன்ற முறைகள் மூலம் அரசுக்குத் தேவையான உழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது.

**03. இராஜ காரிய முறை என்றால் என்ன?**

நாட்டு மக்கள் அனைவரும் தாம் பயன்படுத்துகின்ற மானிய நிலம் தொடர்பில் நாட்டு மன்னனுக்கு இலவசமாகச் செய்யும் சேவையே இராஜகாரிய முறையாகும்.

**04. இரு வகையான இராஜகாரிய முறைகளைக் குறிப்பிடுக.**

- **நிலத்தை அனுபவிக்கும் இராஜகாரிய முறை**
  அரசன் தனக்குத் தேவையான சேவைகளை வழங்கும் அதிகாரிகளுக்கு நிலத்தை வழங்கி வந்தான். அவ்வதிகாரிகள் நிலங்களில் விவசாயம் செய்வதற்காக அவற்றை மக்களுக்குப் பகிர்ந்தளித்தனர். இந்நிலங்களில் பயிரிடுவதற்கான வரியாக தமது உழைப்பை சாதாரண மக்கள் வழங்குவதே இம் முறையாகும்.
- **கட்டாய அரச சேவை**
  அனைவரும் ஆண்டில் குறிப்பிட்ட சில தினங்களுக்கு வயது வந்த ஆண்கள் எந்த விதமான கொடுப்பனவுகளுமின்றி அரசனுக்கு செய்ய வேண்டிய சேவை முறையாகும்.

**05. கோல்புறுக் ஆணைக்குழுவின் சீர்திருத்தங்களை எழுதுக.**

- தனியார் துறையினரை முதலீடுகளில் ஈடுபடுத்து -வதற்கான ஊக்குவிப்பை ஏற்படுத்தியது.
- அரச காணி விற்பனைக் கொள்கை மூலம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தமக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான நிலத்தை விலை கொடுத்து வாங்கச் சிபாரிசு செய்தது.

- இராஜகாரிய முறையை நீக்கியது.
- வர்த்தகத்தின் அரச ஏகபோக உரிமையை நீக்கி தனியார் துறையும் வர்த்தகத்தில் ஈடுபட இடமளித்தது.
- ஏல விற்பனை வரியினை நீக்கி வரி அறவிடலில் சமத்துவத்தை ஏற்படுத்தியது.
- நாட்டில் சேமிப்பு ஒன்றை ஆரம்பிக்கச் சிபாரிசு செய்தது.
- 1840ம் ஆண்டு தரிசு நிலச் சட்டத்தினூடாக பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையாளருக்கு காணிகளைப் பெற்றுக் கொடுத்தது.

**06. கோப்பிப் பயிர்ச் செய்கையின் ஆரம்ப நிலைகளைத்** தருக.

- 1822ல் ஜோர்ஜ் பேர்ட் என்பவரால் கம்பளை சிங்ஹப்பிட்டி எனும் இடத்தில் முதல் முதலில் கோப்பித் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1824ல் எட்வேட் பாண்ஸினால் கன்னொருவவில் தனியார் கோப்பித் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1825ம் ஆண்டு ஆளுநர் எட்வேட் பாண்ஸினால் கோப்பிக்கு விதிக்கப்பட்டிருந்த தீர்வை அகற்றப்பட்டது.
- 1830ம் ஆண்டளவில் காலி மாவட்டத்தின் உடுகம பகுதியிலும், தும்பறைப் பள்ளத்தாக்கிலும், கம்பளை, பேராதனை பிரதேசத்தைச் சூழவும் கோப்பித் தோட்டங்கள் அமைக்கப்பட்டன.

**07. கோப்பிச்செய்கை விருத்திக்குச் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை விளக்குக.**

- 1833ம் ஆண்டு கோல்புறுக் சீர்திருத்தத்தின் பின்னர் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவில் கோப்பித் தோட்டங்களில் முதலீடு செய்தமை.
- ஐரோப்பிய சந்தையில் கோப்பிக்கான கேள்வி அதிகரித்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பிரான்ஸ், பெல்ஜியம் நாடுகளில் கோப்பி குடிக்கும் பழக்கம் அதிகரித்தமை.

ஆ. பிரித்தானியாவில் 1833ல் கோப்பிக்கான தீர்வை வரி குறைக்கப்பட்டமை.

ஆ. மேந்கிந்திய தீவுகளில் கோப்பிப் பயிர்ச் செய்கை அழிவுற்றமை.

➢. கோப்பிச் செய்கை மூலம் அதிக இலாபம் பெற முடிந்தமை.

➢. தென்னிந்திய தொழிலாளர்களைக் குறைந்த கூலிக்குப் பெற்றுக் கொள்ள முடிந்தமை.

➢. இப்பயிர்ச்செய்கைக்கு ஏற்ற மண் மற்றும் பொருத்தமான காலநிலை காணப்பட்டமை.

➢. ஆளுநர் எட்வேட் பாண்ஸின் ஏற்றுமதி வரிக் குறைப்பு, தொழிலாளர்களை அரச சேவையி - லிருந்து விடுவித்தமை.

➢. தீர்வை வரியை நீக்கியமை.

➢. 1840ல தரிசு நிலச்சட்ட மூலம் அதிகளவு நிலங்கள் கோப்பிப் பயிர்ச்செய்கைக்கு கிடைத்தமை.

➢. உற்பத்தியாளர் சங்கம் உருவாகியமை.

**08. கோப்பிச் செய்கையின் வீழ்ச்சிக்கான காரணங்களைத் தருக.**

➢. 1844ம் ஆண்டின் பின்னர் பிரித்தானியர் பின்பற்றிய சுதந்திர வர்த்தகக் கொள்கைகளின் காரணமாக பிரித்தானிய சந்தையில் இலங்கைக் கோப்பி கடும் போட்டிக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டமை.

➢. 1848ல் ஏற்பட்ட உலகப் பொருளாதார வீழ்ச்சி இலங்கைக் கோப்பிச் செய்கையைப் பாதித்தமை.

➢. தரிசு நிலச் சட்டத்தின் கீழ் காணிகளை இழந்த விவசாயிகள் கோப்பிச் செய்கையில் அக்கறை செலுத்தவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கண்டிச் சிங்களவர் கௌரவங் கருதி கோப்பித் தோட்டங்களில் வேலை செய்ய மறுத்தனர்.
- பிரதியீட்டுப் பயிர்களான கொக்கோ, சிங்கோனா முதலானவை அறிமுகப்படுத்தப்பட்டன. இவை கோப்பியை விட விலை குறைந்ததாக விளங்கின.
- 1869ல் ஏற்பட்ட ஹெமீலியா வெஸ்டாக்ஸ் என்னும் இலைவெளிறல் நோய் கோப்பிச் செய்கையை முற்றாகப் பாதித்தது.

**09. தேயிலைப் பயிர்ச்செய்கையின் ஆரம்ப நிலை, வளர்ச்சி பற்றி எழுதுக.**

- 1839ம் ஆண்டளவில் பேராதனைப் பூந்தோட்டம், ஹக்கலை தாவரப்பூந்தோட்டம், நுவரெலியா அரச மாளிகைத் தோட்டம் போன்றவற்றில் முதலில் பயிரிடப்பட்டது.
- 1867ம் ஆண்டளவில் ஜேம்ஸ் ரெயிலர் என்பவர் லூல்கந்துர என்னுமிடத்தில் சில ஏக்கர் பரப்பளவில் தேயிலைச் செய்கை மேற் கொண்டார்.
- 1875ல் 500 ஏக்கர் வரை பரம்பலடைந்து, 1894ம் ஆண்டளவில் 400,000 ஏக்கரில் பயிரிடப்பட்டது.
- இலங்கையின் உலர்வலயம் தவிர்ந்த 6000 அடி வரையான உயரமான பகுதிகளில் பயிரிட முடிந்தது.
- மத்திய ஊவா, சப்ரகமுவ மாகாணங்களிலும் பின்னர் தென்மாகாணம், மேல் மாகாணம் ஆகிய பகுதிகளிலும் பயிரிடப்பட்டன.
- 1930ம் ஆண்டளவில் மத்திய, பகுதியில் பாரிய அளவிலான தொழிற்சாலைகள், 1200 தேயிலைத் தோட்டங்கள் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. **தேயிலைப் பயிர்ச்செய்கை வளர்ச்சியுற்ற - தற்கான காரணங்களைத் தருக.**

- ➢. உலக சந்தையில் இலங்கைத் தேயிலைக்கு சிறந்த கேள்வி நிலவியமை.
- ➢. உலர் வலயம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் இப்பயிர் செய்கைக்கு உகந்ததாகக் காணப்பட்டமை.
- ➢. நவீன பசளைகள் கிருமி நாசினிகள் பயன் படுத்தப்பட்டன.
- ➢. இயந்திர சாதனங்களுடன் தொழிற்சாலைகள் விருத்தியடைந்தமை, தரமான தேயிலை உற்பத்தி செய்யப்பட்டமை.
- ➢. கொழும்புத் துறைமுகம் விருத்தி செய்யப் பட்டமை.
- ➢. பெரும் தெருக்கள், புகையிரத வீதிகள் போன்றன அமைக்கப்பட்டு போக்குவரத்துத் துறை வளர்ச்சி -யடைந்தமை.
- ➢. சீனத் தேயிலையின் கேள்வி குறைவடைந்தமை. (இலண்டன் உலகசந்தை)

11. **தெங்குப்பயிர்ச் செய்கையின் முக்கியத்து வத்தினை விளக்குக.**

- ➢. பண்டைய காலம் தொட்டு வீட்டுத் தோட்டப் பயிராகப் பயிரிடப்பட்டு வந்தமை.
- ➢. 1850ம் ஆண்டளவில் கோப்பியின் விலை வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து தென்னைப் பயிர்ச் செய்கையில் கவனம் செலுத்தப்பட்டது.
- ➢. ஐரோப்பியரை விட இலங்கையர் தென்னை பயிரிடுவதில் அதிகளவில் ஈடுபாடு காட்டினர். 1880ல் தென்னைத்தோட்ட உரிமையாளர்கள் 65 வீதமானோர் இலங்கையராக இருந்தனர்.
- ➢. 1971ல் தென்னை 27% நிலத்திலும், 1990ல் 41% நிலத்திலும் செய்கை பண்ணப்பட்டது.
- ➢. 1920ல் பிலிப்பைன்ஸ் உலக தெங்குப் பொருள் சந்தையில் பிரவேசிக்கும் வரை கொப்பரா ஏற்றுமதியில் இலங்கையே முதலிடம் வகித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. உற்பத்தியில் 50% க்கு மேல் உள்நாட்டில் நுகரப்படுவதால், அது பெருந்தோட்டப் பயிர்களைப போன்று முற்றும் முழுதாக ஏற்றுமதி நோக்கம் கொண்டிருக்கவில்லை.
- ➢. இப் பயிர்ச்செய்கை கரையோர தாழ் நாட்டுச் சிங்களவர் கைகளிலேயே பெருமளவு காணப்பட்டது.
- ➢. இப்பயிர்ச்செய்கை காரணமாக கரையோரப் போக்குவரத்தும் விருத்தி அடைந்தன.
- ➢. லுணுவில என்னுமிடத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

**12. இறப்பர் பயிர்ச்செய்கையின் விருத்திக்கான காரணங்களைத் தருக.**

- ➢. 1877ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் இறப்பர் பயிர் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ➢. ஆரம்பத்தில் களுத்துறை மாவட்டத்தில் மாத்திரம் பயிரிடப்பட்டது.
- ➢. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மோட்டார் வாகனத் தொழில் அபிவிருத்தியுடன் இறப்பருக்கான கேள்வி அதிகரித்தது.
- ➢. இலங்கைக்கு பொருத்தமான இறப்பர் இனம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
- ➢. சிறந்த தொழில்நுட்ப முறைகள் அறிமுகப்படுத்தப -பட்டமை.
- ➢. தேயிலை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி.
- ➢. களுத்துறை மாவட்டத்தில் முதலில் பயிரிடப் பட்டதைத் தொடர்ந்து பிறகாலத்தில் சப்ரகமுவ, மேல், தென், மத்திய மாகாணங்களிலும பரவலடைந்தது.
- ➢. 1920ம் ஆண்டுகளில் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் 30% இறப்பர் பெற்றுக் கொண்டது.
- ➢. அகலவத்தையில் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டு இறப்பர் அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. **பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப் பட்டமையால் இலங்கையில் ஏற்பட்ட சாதகமான விளைவுகளைத் தருக.**

- ➢. ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதாரம் விருத்தியடைந்தது.
- ➢. இலங்கை தேசிய வருமானம் அதிகரித்தது.
- ➢. போக்குவரத்து, தொடர்பாடல் முறைகள் விருத்தி கண்டன.
- ➢. புதிய தொழில்வாய்ப்புக்கள் பெருகின. (எழுதுவினைஞர், வங்கியாளர், களஞ்சிய கட்டுப் பாட்டாளர்.)

14. **பெருந்தோட்டத்துறையினால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளைத் தருக.**

- ➢. கிராமியப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியுற்று வாழ்வாதாரப் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியது.
- ➢. கண்டி மக்கள் தமது பாரம்பரிய நிலங்களை இழந்தனர். வாழ்க்கைத் தரம் குன்றியது.
- ➢. குறைந்த கூலிக்கு வேலை செய்யும் கூட்டத்தினர் உருவாகியமை.
- ➢. இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் வருகை அதிகரித்தமை.
- ➢. இலங்கையின் கலாசாரம் அழிவுற்றமை.

15. **இலங்கையில் மத்திய தர வகுப்பினரின் தோற்றம் பற்றி விளக்குக.**

- ➢. கோல்புறுக் சீர்திருத்தத்தின் மூலம் இலங்கையில் முதலாளித்துவ பொருளாதார முறைமை ஆரம்பமானது. இதன் காரணமாக மரபு ரீதியிலான வருமான மார்க்கத்திற்குப் பதிலாக புதிய வருமான மார்க்கங்கள் உருவாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இப்புதிய மார்க்கங்களினூடாக பணம் சம்பாதித்த செல்வந்தர்கள் உருவாகியமை.
- இச்செல்வந்தர்கள் தமது பிள்ளைகளுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உயர் கல்வி பெறுவதற்காகச் செலவிட்டனர்.
- இவர்களே மத்திய தர வகுப்பினராக உருவாகினர்.
- புதிய தொழில் வாய்ப்புக்கள் தோன்றியமை.

  பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சடடத்தரணிகள், வைததியர்கள், பொறியியளாலர்கள், நில அளவையாளர்கள், எழுதுவினைஞர்கள், சிவில் சேவையாளர்கள் எனும் புதிய தொழில் வாய்ப்புக்கள் தோன்றின.
- ஆங்கிலக் கல்வி மூலம் மேற்படி தொழில் வாய்ப்புக்களைப் பெற்று உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவித்து சமூக அந்தஸ்தையும் பெற்றுக் கொண்ட வகுப்பினர் உருவாகினர்.
- மேலும் ஆங்கிலக் கல்வி மூலம் அரச தொழில்களைப் பெற்றுக் கெண்ட கல்விகற்ற வகுப்பொன்று உருவானது.
- இவ்விரு வகுப்பினரும் பொருளாதார ரீதியில் பொதுமக்கள் மத்தியில் வேறுபட்டு திகழ்ந்தமை -யால் அவர்கள் மத்திய தர வகுப்பினர் என அழைக்கப்பட்டனர்.

**16. இலங்கையில் தொழிலாளர் வர்க்கம் பற்றி எழுதுக.**

- பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் பெருந் தோட்டங்களில் வேலை செய்வதற்கு தொழிலாளர் கூட்டம் தேவைப்பட்டது. தென்னிந்தியாவிலிருந்து குறைந்த கூலிக்கு தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கில் வரவழைக்கப்பட்டனர். இதன் மூலம் பெருந்தோட்டப் பகுதியில் தொழிலாளர் வகுப்பொன்று உருவானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. புதிய பொருளாதர நடவடிக்கைகள் காரணமாக கண்டி, காலி, கொழும்பு போன்ற மாநகரங்களில் பொருட்களை ஏற்றி, இறக்கல், துணிகளைச் சலவை செய்தல், போக்குவரத்துப் பாதைகள் நிர்மாணம் செய்தல், கை வண்டிகள் மூலம் பொருட்களைக் கொண்டு செல்லல் முதலிய தேவைக்கு தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். இதன் மூலமாக நகர்ப்புறங்களிலும் சுதேச தொழிலாளர் வகுப்பொன்று உருவானது.

**17. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், நகர்ப்புறத் தொழிலாளர்கள் ஆகியோர் எதிர்கொண்ட பிரச்சினைகளைத் தருக. (ஆரம்ப காலத்தில்)**

➢. மிகக் குறைந்த சம்பளமே வழங்கப்பட்டது.

➢. வேலை செய்யும் நேரம் வரையறுக்கப்பட்டமை.

➢: தொழிலாளர்களுக்கான காப்புறுதி, நட்ட ஈடு வழங்கும் முறைகள் இல்லாமை.

➢. தொழிலாளர் நலன்புரி நடவடிக்கைகள் காணப் படாமை. (இதன் காரணமாக தொழிற்சங்கங்கள் உருவாக்கம், வேலை நிறுத்தப் போராட்டம் என்பன தோன்றின.)

**18. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற வேலை நிறுத்தங்களைக் குறிப்பிடுக.**

➢. கொழும்பு அச்சகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் - 1893

➢. சலவைத் தொழிலாளர் வேலை நுறுத்தம - 1896

➢. கை வண்டிக்காரர் வேலை நிறுத்தம் - 1906

➢. புகையிரத நிலைய ஊழியா வேலை நுறுத்தம் - 1912

➢. துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் - 1920

➢. 20,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் - 1923 (A.E. குணசிங்கா தலைமை)

➢. ராக்ஸி ஓட்டுபவர்கள் வேலைநிறுத்தம் - 1924

➢. டிராம் வண்டி தொழிலாளர் வேலைநிறுத்தம் - 1929

➢. வெள்ளவத்தை நெசவாளா வேலைநிறுத்தம் - 1932



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தொழிலாளர் நலன் பேணிகள் பற்றிக் குறிப்பிடுக.

**A.E. குணசிங்க.**

- ➢. நகர்ப்புறத் தொழிலாளர் நலனுக்காகப் பாடு -பட்டவர் ஆவார்.
- ➢. 1922ம் ஆண்டு இவர் தலைமையில் இலங்கைத் தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டது.
- ➢. தொழிலாளர் உரிமைப் போராட்டங்கள் நடத்துதல், சமபள உயர்வு, தொழில்நிலை உயர்தல் தொடர்பாக போராடுதல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டிருந்தார்.

**கோ. நடேச ஐயர்.**

- ➢. தோட்டத்தொழிலாளர் மத்தியில் தொழிற் சங்கங்களை அமைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டவராவார்.

**கொல்வின் R.D. சில்வா**

- ➢. 1933ம் ஆண்டு வெள்ளவத்தை நெசவாளர் சங்கத்தின் 14,000 தொழிலாளர் வரை பங்குபற்றி வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்தவராவார்.

20. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட கலாசார மாற்றங்களைக் குறிப்பிடுக.

- ➢. ஆங்கில மொழி மூலமான மேலைத்தேயக் கலாசாரம் இலங்கையில் பரவியது.
- ➢. பெருந்தோட்டத்துறை வளர்ச்சி காரணமாக அதிகாரிகளாக ஐரோப்பியர் இலங்கை வந்தனர். இவர்களின் விடுமுறை கால விடுதிகள், இரவுக் களியாட்ட விடுதி காரணமாகவும் அக்கலாசாரம் பரவியது.
- ➢. மேலைத்தேய ஆடையணிகள், பழக்க வழக்கங்கள் வாழ்த்து வணக்கம் தெரிவிக்கும் முறைகள், கட்டிடக கலை அம்சங்கள், உணவு, பானவகைகள் என்பன போன்ற அம்சங்களும் எமது கலாசாரத்தில் கலந்து கொண்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. பிரித்தானியர் ஆட்சியின் காரணமாக ஏற்பட்ட சாதக, பாதக மாற்றங்களைக் குறிப்பிடுக.

சாதக மாற்றங்கள் (அனுகூலங்கள்)

➢. சர்வதேச மொழியான ஆங்கில மொழி அறிவு நாட்டினுள் பரவியது.
➢. சுதேச மக்களுக்கு ஆங்கிலம் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அத்துடன் உயர்தொழில் வாய்ப்புக் -களையும் பெற்றுக் கொடுத்தது,
➢. போக்குவரத்துத் துறை வளர்ச்சியடைந்தது.
➢. தொடர்பாடல் துறை வளர்ச்சியடைந்தது.
➢. ஏற்றுமதிக்கான பெருந்தோட்டப் பயிர் அறிமுகம்.
➢. கைத்தொழிற் புரட்சியின் நன்மைகள் பெற்றுக் கொண்டமை.
➢. பாராளுமன்ற ஆட்சிமுறை இலங்கைக்குக் கிடைத்தது.
➢. புதிய தொழில் வாய்ப்புக்கள் அறிமுகமானது.
➢. இலங்கையின் தேசிய வருமானம் அதிகரித்தது.

பாதகமான மாற்றங்கள் (பிரதி கூலங்கள்)

➢. இலங்கை பிரித்தானியரின் சுரண்டலுக்குட்பட்டது.
➢. வாழ்வாதாரப் பொருளாதரம் அழிவுற்றமை.
➢. மேலைத்தேய கலாசாரத்தின் பரவல் காரணமாக உள்நாட்டுக் கலாசாரம் சீர்கெட்டமை.
➢. மதுப்பாவனை நாடெங்கும் பரவியமை.
➢. மரபு ரீதியான தன்னிறைவுப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமை.
➢. தேசிய ரீதியிலான அறிவும், ஆற்றலும் மழுங்கடிக்கப்பட்டன.
➢. கம்சபா என்னும் பயன்மிக்க கிராம சபைகள் இல்லாதொழித்தமை.
➢. இலங்கைப் பொருளாதாரம் பிற நாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
➢. நாட்டு மக்கன பாரம்பரிய நிலங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 06
## இலங்கை சுதந்திரமடைதல்.

01. **சோல்பரி யாப்பின் அறிமுகத்தைத் தருக.**

- ➢. 1944ம் ஆண்டு டிசம்பர் மாதம் சோல்பரிப் பிரபு தலைமையில் விசாரணைக் குழு இலங்கைக்கு வருகை தந்தது.
- ➢. சோல்பரி அரசியல் யாப்பு 1947 தொடக்கம் 1972 முதலாவது குடியரசு அரசியல் யாப்பு அமுலுக்கு வரும் வரை நடைமுறையில் இருந்தது.

02. **சோல்பரி யாப்பின் முக்கியமான அம்சங்களை எழுதுக.**

- ➢. ஆளுநர் பதவிக்குப் பதிலாக ஆளுநர் நாயகம் பதவி உருவாக்கப்பட்டது.
- ➢. ஆளுநர் நாயகம் பதவி பெயரளவு நிறைவேற்றுப் பதவியாக இருந்ததுடன், இங்கிலாந்து முடியின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.
- ➢. பிரதிநிதி சபை, மூதவை எனும் இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் உருவாக்கப்பட்டமை.
- ➢. பிரதமர் தலைமையிலான அமைச்சரவை ஒன்று உருவாக்கப்பட்டமை.
- ➢. மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவும், பிரதம நீதியரசர் தலைமையிலான நீதிச் சேவை ஆணைக்குழுவும் உருவாக்கப்பட்டமை.
- ➢. உயர் நீதிமன்றம் உள்ளிட்ட நீதிமன்றத் தொகுதி ஒன்று உருவாக்கப்பட்டமை.
- ➢. சிறுபான்மையினரின் நிலவுடமைகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. **சோலபரி யாப்பின் கீழ் ஆளுநர் நாயகத்தின் சட்ட, நிர்வாக, நீதித்துறை அதிகாரங்கள் என்பவற்றை எழுதுக.**

- **சட்டததுறை :**
  பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல், பிரதிநிதிகள் சபைக்கான நியமன உறுப்பினர்களை நியமித்தல்.

- **நிர்வாகத் துறை**
  முப்படைத் தளபதிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் நியமித்தல், அரசு பொது இலச்சினையை வைத்திருத்தல்.

- **நீதித்துறை**
  பிரதம நீதியரசர், உயர் நீதி அரசர்களை நியமித்தல்.

04. **சோல்பரி யாப்பின் கீழ் பாராளுமன்றக் கட்டமைப்பைத் தருக.**

- பாராளுமன்றம் பிரதிநிதிகள் சபை, மூதவை (செனற் சபை) எனப்படும் இரு சபைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டது.

- பிரதி நிதிகள் சபையில் 101 அங்கத்தவர்கள் இடம் பெற்றனர். 95 பேர் தேர்தல் தொகுதி அடிப்படையிலும், 6 பேர்ஆளுநர் நாயகத்தினாலும் நியமிக்கப்பட்டனர். இச்சபையின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

- மூதவையில் (செனற்சபை) 30 அங்கத்துவர்கள் நியமிக்கப்பட்டனர். 15 பிரதிகள் பிரதிநிதிகள சபையாலும், 15 பேர் ஆளுநர் நாயகத்தாலும் நியமிக்கப்பட்டனர். இரு சபைகளைக் கொண்டிருந்த போதிலும் மக்கள் பிரதிநிதிகள் சபை பாராளு -மன்றமாகக் கருதப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. பிரதமர் தலைமையிலான அமைச்சரவை.

- பிரதிநிதிகள் சபைகள் பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஆதரவைப் பெற்ற ஒருவர் ஆளுநர் நாயகத்தால் பிரதமராக நியமிக்கப் -படுவார்.
- நிறைவேற்று அதிகாரம் கொண்டதாக அமைச்சரவை விளங்கியது.
- பிரதமரின் கீழ் பதுகாப்பு அமைச்சு வெளிநாட்டு விவகாரங்களுக்கான அமைச்சு செயற்பட்டது.
- அமைச்சரவை கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப் பட்டது.

**05. சோல்பரி யாப்பின் கீழ் அமைந்த நீதித்துறைச் செயற்பாடுகளைப் பற்றித் தருக.**

➢. உயர் நீதிமன்றம் உட்பட நீதி மன்றத் தொகுதி ஒன்றால் நீதித்துறையின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

➢. மேலும் நீதிச் செயற்பாடுகள் மேன் முறையீட்டு நீதி மன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதி மன்றம், கிராமிய நீதி மன்றம் என்பனவற்றாலும் நீதிமன்ற நீதிபதிகள் செயற்பட்டனர்.

➢. ஆளுநர் நாயகத்தால் பிரதம நீதிபதியும், உயர் நீதிமன்ற நீதிபதியும் நியமிக்கப்பட்டனர்.

➢. பிரதம நீதிபதியின் தலைமையில் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நீதிமன்றங்களுடன் தொடர்பான நீதிபதிகளின் நிர்வாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Class No: 900
Acc No 534



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

06. சோல்பரி யாப்பினால் ஏற்பட்ட அனுகூலங்களைத் தருக.

- ➢. இலங்கையின் பிரித்தானிய பாராளுமன்ற ஆட்சி முறை அறிமுகமானது.
- ➢. கட்சி அரசியல் வளர்ச்சிக்கு உதவியது.
- ➢. சிறுபான்மையினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.
- ➢. பொதுச்சேவை, நீதித்துறை சுதந்திரம் ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டதன் மூலம் பாதுகாக்கப் -பட்டது.

07. சோல்பரி யாப்பின் குறைபாடுகளைத் தருக.

- ➢. பிரித்தானிய முடியின் பிரதிநிதியாக ஆளுநர் நாயகம் விளங்கியமை.
- ➢. இலங்கை மக்களின் தேவைக்கேற்ப அமையவில்லை.
- ➢. பிரித்தானிய மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன் முறையீடு செய்யும் உரிமை காணப்பட்டமை.
- ➢. பிரித்தானியா இலங்கை மீது சிறப்புரிமை கொண்டிருந்தமை இலங்கையின் இறைமைக்கு தடையாக இருந்தது.
- ➢. அடிப்படை உரிமைகள் பற்றி யாப்பில் இடம் பெறவில்லை.
- ➢. மூதவை (செனற்சபை) ஒரு சுமையாக மாறியமை. எதிர்பார்த்த நோக்கத்தை அதனூடாக செயற்படுத்த முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. இலங்கையில் உருவான முக்கிய அரசியல் கட்சிகள் பற்றிக் குறிப்பிடுக.

| ஆண்டு | கட்சி | உருவாக்கியவர் |
|---|---|---|
| 1935 | இலங்கை சமசமாஜக் கட்சி | கலாநிதி. N.M. பெரேரா |
| 1943 | இலங்கை கம்பியூனிஸ்ட் கட்சி | எஸ்.ஏ. விக்கிரமசிங்க |
| 1943 | போல்சவிக் லெனிஸ்ட் கட்சி | கொல்வின் R.D. சில்வா |
| 1946 | ஐக்கிய தேசிய கட்சி | D.S. சேனநாயகா |
| 1949 | இலங்கை தமிழ் அரசுக் கட்சி | எஸ்.ஜே.வி. செல்வநாயகம் |
| 1950 | இலங்கைத் தொழிலாளர் கட்சி | தொண்டமான் |
| 1951 | ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி | S.W.R.D. பண்டாரநாயகா |

09. அரசியல் கட்சிகளின் முக்கியத்துவத்தைத் தருக.

- ➢. அரசியல்வாதிகளுக்கும், பொது மக்களுககும் இடையில் உறவைக் கட்டியெழுப்ப அரசியல் கட்சிமுறை அவசியமாகின்றது.
- ➢. ஜனநாயகத்தின் அடிப்படையாக விளங்குவது அரசியல் கட்சியாகும்.
- ➢. மக்களின் அரசியல் அறிவை வளர்க்க அரசியல் கட்சிகள் உதவும்.
- ➢. பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்கும்.
- ➢. உறுதியான அரசாங்கத்தினை உருவாக்க உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளை எதிர்க்க உதவும்.

➢. அமைச்சரவையைக் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட உதவும்.

10. **இலங்கையிலுள்ள முக்கிய அரசியல் கட்சிகளை விளக்குக.**

1) **இலங்கை சமசமாஜக் கட்சி (1935)**

➢. இலங்கையின் பழமைவாய்ந்த அரசியல் கட்சி -யாகவும், முதலாவது இடதுசாரிக் கட்சியாகவும் விளங்குகின்றது.

➢. இடது சாரிச் சிந்தனையின் கீழ் இந்நாட்டை செயற் -படுத்துவதே இதன் நோக்கமாகவிருந்தது.

➢. பிரித்தானியரின் ஆட்சியின் போது அந்நாட்டில் கல்வி கற்றுத் திரும்பிய இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

(கலாநிதி N.M. பெரேரா, கலாநிதி கொல்வின், ஆர்.டி.சில்வா, பிலிப் குணவர்த்தன போன்ற தலைவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.)

2) **இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (1943)**

➢. இலங்கை சமாசமாஜக் கட்சியிலிருந்த பிரிந்து சென்ற ஒரு பகுதியினரால் உருவாக்க பட்டது.

➢. 1940ல் ஐக்கிய சோசலிசக் கட்சியா உருவெடுத்து இலங்கை கம்பியூனிஸ கட்சியாக மாற்றமடைந்தது.

➢. 1943ல் எஸ்.ஏ. விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

(பொருளாதார சமத்துவம், வருமான வித்தியாசங்களைக் குறைத்தல், சோஷலிச சமூகமொன்றை உருவாக்குதல், தேசிய மயமாக்கல் போன்ற கொள்கைகளே இவ்விரு கட்சிகளின் நோக்கங்களாக இருந்தன.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) ஐக்கிய தேசியக் கட்சி

- 1946ம் ஆண்டில் D.S. சேனநாயகா அவர்களால் இக்கட்சி தோற்றுவிக்கப்பட்டது.
- ஆரம்பத்தில் இலங்கைத் தேசிய சங்கம், சிங்கள மகா சபை என்பனவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்தன.
- கலப்புப் பொருளாதாரம், அடிப்படைச் சுதந்திரங்கள் பேணுதல், தனியார் முதலீடு, பொதுநல சேவைகள், பொதுச் சுதந்திரம் போன்ற கொள்கைகளை முன்வைத்தது.
- 1947ம் ஆண்டுத் தேர்தலில் 42 ஸ்தானங்களைப் பெற்று மற்றைய குழுக்களின ஆதரவுடன் ஆட்சி அமைத்தது.
- 1952ம் ஆண்டுத் தேர்தலில் 54 தொகுதிகளை வென்று ஆட்சி அமைத்தது.

4) ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி

- 1951 ஆம் ஆண்டு S.W.R.D. பண்டார நாயக்கா அவர்களால் இக்கட்சி ஆரம்பிக்கப் பட்டது.
- ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி இக்கட்சியை ஆரம்பித்தார்.
- இக்கட்சிக்கு சுயமொழி அறிஞர்கள், புத்த பிக்குகள், தேசியவாதிகளின் ஆதரவை இக்கட்சி பெற்றிருந்தது.
- 1956 பொதுத் தேர்தலில் 51 தொகுதிகளில் வென்று அரசமைத்தது.

**11. 1956ம் ஆண்டு பொதுத் தேர்தல் பற்றி விளக்குக.**

- ஐக்கிய தேசியக்கட்சி தனித்துப்போட்டியிட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது புரட்சிகர சமசமாஜக்கட்சி (பிலிப் குணவர்த்தன), பாஷா பெரமுன (விஜயானந்த), தஹநாயகா, ஆர்.ஏ.ஈரிய கொல்ல தலைமையிலான சுயேட்சைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகளும் இணைந்து ஐக்கிய முன்னணி எனும் பெயரிலான கூட்டணியின் கீழ் போட்டியிட்டது.

- இத்தேர்தலின் போது பிக்குகள், சுதேச வைத்தியர்கள் ஆசிரியர்கள் விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் ஆதரவு கிடைத்தமை ஐக்கிய முன்னணியின் வெற்றிக்கு வழிவகுத்தது.
- மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் S.W.R.D. பண்டாரநாயகா அவர்கள் 1956ல் இலங்கையின் பிரதமரானார்.

**12. 1956 பொதுத்தேர்தலில் பொது ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றமைக்குரிய காரணங்களைத் தருக.**

- ஐக்கியதேசியக் கட்சி தனித்துப் போட்டியிட்டமை.
- ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியானது புரட்சிகர சமசமாஜக் கட்சி, பாஷாபெரமுன மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் பலரை ஒன்று சேர்த்து போட்டியிட்டமை.
- சமசமாஜக் கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகளுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டமை.
- பிக்குகள், சுதேச வைத்தியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் ஆதரவு மக்கள் ஐக்கிய முன்னணிக்கு கிடைத்தமை.
- தேர்தல் மேடைகளில் சிங்களத்தை அரசாங்க மொழியாக மாற்றுதல் பிரதான தொனிப் பொருளாக விளங்கியமை.

**13. மக்கள் ஐக்கிய முன்னணி மேற்கொண்ட கொள்கைகள், சீர்திருத்தங்கள் என்பனவற்றைக் குறிப்பிட்டு எழுதுக.**

- சிங்களம் அரசகரும மொழியாக மாற்றியமை.
- பிரித்தானியாவுடன் 1947ல் செய்து கொள்ளப்பட்ட பாதுகாப்பு, வெளிநாட்டு விவகார பாதுகாப்பு ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. வல்லரசுகளின் அணியிலிருந்து விலகி நடுநிலைமையான வெளிநாட்டுக் கொள்கை யொன்றைக் கடைப்பிடித்தமை. (அணி சேராக் கொள்கை)
- ➢. தேசிய மயமாக்கல் செயற்பாட்டுக்கு அமைவாக துறைமுகம், போக்குவரத்து முதலானவை அரசுடமை -யாக்கப்பட்டன.
- ➢. தேசிய விவசாயத்தையும், கைத்தொழிலையும் முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- ➢. உயர் கல்வித் துறையின் விருத்திக்காக வித்தியோதய வித்தியாலங்காரப் பிரிவெனாக்கள் பல்கலைக் கழகங்களாகத் தரமுயர்த்தப்பட்டமை.
- ➢. இலங்கை ஒரு குடியரசாக வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டு அதற்காகப் பாராளுமன்றத்தில் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டமை.

**14. 1972ம் ஆண்டு புதிய யாப்பு உருவாக்கப் பட்டமைக்கான காரணிகள் யாவை?**

- ➢. சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட சுதந்திரம் பூரண சுதந்திரம் அல்ல எனக் கருதப்பட்டமை.
- ➢. பிரித்தானிய முடியின் பிரதிநிதியாக மகா தேசாதிபதி செயற்பட்டமை.
- ➢. பிரித்தானிய மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கே மேன்முறையீடு செய்ய வேண்டியிருந்தமை.
- ➢. இலங்கையின் ஆட்சி நடவடிக்கைகளில் பிரித்தானியா தொடர்ந்தும் தலையிட்டு வந்தனர்.
- ➢. சோல்பரி யாப்பு வரையப்பட்ட போது இலங்கை -யர்கள் அதில் இடம்பெறாமை.
- ➢. 1970ம் ஆண்டு பொதுத் தேர்தலில் புதிய அரசியல் யாப்பை வரைய அங்கீகாரம் பெற்றமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. 1972ம் ஆண்டு குடியரசு அரசியல் யாப்பின் நோக்கங்கள் யாவை?

- இலங்கைத் தன்னாதிக்கமும் இறைமையும் கொண்ட குடியரசாகுதல்.
- சோசலி ஜனநாயக சமூகமொன்றைக் கட்டி - யெழுப்புவதற்கு யாப்பு ரீதியான கட்டமைப்பை ஏற்படுத்தல்.
- நாட்டு மக்களின் சுதந்திரம் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை -களை மேற்கொள்ளல்.

16. 1972ம் ஆண்டு அரசியல் யாப்பின் முக்கிய விடயங்களைத் தருக.

- இதுவரை லங்கா எனப்பட்ட இந்நாடு ஸ்ரீ லங்கா என அழைக்கப்பட்டது.
- பிரித்தானியப் பேரரசுடன் கொண்டிருந்த சகல விதமான அரசியல் யாப்பு ரீதியான தொடர்புகளை முடிவுக்குக் கொண்டு வரல்.
- இலங்கை ஒரு தன்னாதிக்கமுள்ள குடியரசு என்பதனை யாப்பின் மூலம் ஏற்றுக் கொள்ளப்படல்.
- இறைமையதிகாரம் வலியுறுத்தப்படல்.
- மனித உரிமைகளைப் பாதுகாத்தல் முதன் முதலில் இடம்பெற்றது.
- தேசியஅரசுப்பேரவை அமைக்கப்பட்டது.
- ஆளுநர் நாயகத்திற்குப் பதிலாக ஜனாதிபதி நியமிக்கப்பட்டார்.
- சிங்கள மொழி அரச கரும மொழியாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.
- பௌத்த சமயம் முக்கியமான இடத்தை வகிப்பதுடன் ஏனைய மதங்களுக்குமுரிய அந்தஸ்து வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. 1972ம் ஆண்டு யாப்பின் ஜனாதிபதி பற்றி எழுதுக.

- ஆளுனர் என்ற பதவிக்குப் பதிலாக ஜனாதிபதி என்ற பதவி ஏற்பட்டது.
- ஜனாதிபதி நாம நிர்வாகியாகவே (பெயரளவு ஜனாதிபதி) விளங்கினார்.
- பிரதமரின் ஆலோசனைப்படியே நியமிக்கப்படுவார்.
- பதவிக் காலம் 4 வருடங்களாகும்.
- அக்காலத்தில் ஆளுநர் நாயகமாக பதவி வகித்து வந்த வில்லியம் கோபல்லாவ அவர்கள் முதலாவது பெயரளவு ஜனாதிபதியாக நியமிக்கப் பட்டார்.

## 18. 1972ம்ஆண்டு யாப்பில் தேசிய அரசுப் பேரவை பற்றி எழுதுக.

- பாராளுமன்றம் என அழைக்கப்பட்ட சட்ட சபைக்கு பதிலாக ஓரங்க சட்டசபையாக தேசிய அரசுப்பேரவை அமைக்கப்ட்டது.
- தேசிய அரசுப்பேரவையே அரச அதிகாரத்தின் மிக உயர்ந்த கருவியாகும்.
- மக்களின் சட்ட அதிகாரம், நிர்வாக அதிகாரம், நீதி அதிகாரம் என்பனவற்றைக் கொண்டு விளங்கியது,
- இதனது பதவிக்காலம் 6 ஆண்டுகளாகும்.
- இதனது அங்கத்தவர் தொகை வரையறுக்கப் படவில்லை.

## 19. 1972 ஆம் ஆண்டு யாப்பின்படி அடிப்படை மனித உரிமைகள் பற்றிக் குறிப்பிடுக.

- 1972ம் ஆண்டு அரசியல் யாப்பின் 6ம் அத்தியாயத்தில் 18வது சரத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- சட்டத்தை அனுபவித்தல், செயற்படுத்தல், பாதுகாப்பு பெறல், அனைவருக்கும் பொதுவானதாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- ➢. சட்டத்தின் மூலமாக அன்றி தனி நபர் ஒருவரின் உயிருக்கும், சுதந்திரத்திற்கும், பாதுகாப்பிற்கும் இடைஞ்சல் புரியக் கூடாது.
- ➢. அனைத்துக் குடிமக்களும் சிந்திக்கும் சுதந்திரமும், மனசாட்சிப்படி நடக்கும் சுதந்திரத்திற்கும் உரிமையுண்டு.
- ➢. குடிமக்கள் அமைதியாக ஒன்று கூடலுக்கும், தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் சுதந்திரமுணடு.

**20. 1972ம் ஆண்டு யாப்பின்படி பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை பற்றிக் குறிப்பிடுக.**

- ➢. நிறைவேற்று அதிகாரத்தைச் செயற்படுத்துவது அமைச்சரவையாகும்.
- ➢. அமைச்சரவைத் தலைவர் பிரதமர் ஆவார்.
- ➢. பொதுத்தேர்தலில் அதிக ஆசனங்கள் பெற்ற கட்சியின் தலைவரே பிரதமராக நியமனம் பெறுவார்.
- ➢. அமைச்சர்களை நியமிப்பது அவர்களைப் பதவியி -லிருந்து நீக்குவது என்பன பிரதமருக்குரியதான அதிகாரங்களாகும்.
- ➢. நிறைவேற்றுத்துறை சட்டங்களை இயற்றும், நடைமுறைப்படுத்தும் துறையாக அமைச்சரவை விளங்கும்.
- ➢. பிரதமரின ஆலோசனைப்படி நாம நிர்வாகியான, ஜனாதிபதியே அமைச்சர்களை நியமனம் செய்வார்.

**21. 1972ம் ஆண்டு யாப்பில் கீழான நீதிமன்றம் பற்றி விளக்குக.**

- ➢. நீதிமன்றத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டது. (உச்ச நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம், அரசியல் யாப்பு நீதி மனறம்)
- ➢. உச்ச நீதிமன்றம், மேல்நீதிமன்றம் என்பன பிரதான இரண்டு நிறுவனங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. மாவட்ட நீதிமன்றங்கள் அம்மாவட்டத்தின் குடியியல் வழக்குகளைக் கையாண்டன.
- ➢. நீதவான் நீதி மன்றம் குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரங்களைக் கொண்டி -ருந்தது.
- ➢. அரசியல் யாப்பு நீதிமன்றம் யாப்பு தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், தேசிய அரசுப் பேரவையில சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்கள் யாப்பிற்குப் பொருத்தமானதா எனப் பரிசீலிக்கும் மன்றமாக விளங்கியது.

**22. சோல்பரி யாப்பையும் 1977ம் ஆண்டு குடியரசு யாப்பினையும் ஒப்பிடுக.**

| சோல்பரி யாப்பு | குடியரசு யாப்பு |
|---|---|
| ➢ இரு சபை பாராளுமன்றம் | ➢. ஒரு சபையுள்ள தேசிய அரசு பேரவை |
| ➢. மகாதேசாதிபதி பிரதமரின் ஆலோசனையின் பெயரில் செயற்படல் | ➢. ஜனாதிபதி பிரதமரின் விருப்பபபடி செயற்படல் |
| ➢. சிறுபான்மையினருக்கான பாதுகாப்புக்கள் | ➢. அடிப்படை மனித உரிமைகள் |
| ➢. பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 5 ஆண்டுகள் | ➢. தேசிய அரசுப் பேரவையின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் |
| ➢. சாதாரண நீதி மன்றங்கள் சட்டங்களை மறுசீராய்வு செய்தல் | ➢. அரசியல் யாப்பு நீதி மன்றம் தேசிய அரசுப்பேரவைக்கு ஆலோசனைகளை வழங்கல். |
| ➢. இலங்கை பிரித்தானிய அரசிடம் தங்கியிருந்தமை. | ➢. சுதந்திரம், இறைமை, தன்னாதிக்கம் கொண்ட குடியரசானமை. |
| ➢. நதிச் சேவை ஆணைக்குழு | ➢. நதிச்சேவை ஆலோசனைச் சபை நீதிச் சேவை ஒழுக்காற்று சபை |
| ➢. பொதுச் சேவை ஆணைக்குழு | ➢. பொதுச்சேவை ஆலோசனை சபை பொதுச்சேவை ஒழுக்காற்றுச் சபை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. 2ம் குடியரசு யாப்பு / 1978ம் ஆண்டு குடியரசு யாப்பின் முக்கிய பண்புகள் / அம்சங்களைக் குறிப்பிடுக.

- மக்களிடம் இறைமை எனப்படும் உயர் அதிகாரம் வழங்கப்பட்டது.
- மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றம் உருவாக்கப்பட்டது.
- நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டமை.
- அடிப்படை உரிமைப் பாதுகாப்புக்கள் இடம் பெற்றமை.
- ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை ஏற்படுத்தப்பட்டது.
- ஓம்புட்ஸ்மன் பதவி ஏற்படுத்தப்பட்டது.
- நீதிமன்றக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. நாட்டின் முதன்மையானதும், இறுதியுமான அதிகாரம் உயர் நீதி மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

24. **1978ம் ஆண்டு யாப்பின்படி ஜனாதிபதியின் அதிகாரங்கள் கடமைகள் என்பனவற்றை விளக்குக.**

- ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள்.
  - அமைச்சரவையின் தலைவராகக் கடமை ஆற்றுதல்.
  - அமைச்சரவைக் கூட்டங்களை வழி நடத்துதல்.
  - பிரதமர் உட்பட அமைச்சர்களை நியமித்தல்.
  - அமைச்சரவைக்குத் திணைக்களங்களைப் பகிர்ந்தளித்தல்.
  - யுத்தம், சமாதானத்தைப் பிரகடனப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. 1978ம் ஆண்டு யாப்பின் கீழ் ஜனாதிபதியின் நீதித்துறை தொடர்பான அதிகாரங்களைத் தருக.

- ➢. பிரதம நீதியரசர், உயர் நீதிபதிகள், நீதிமன்ற மேன்முறையீட்டு நீதியரசர்களை நியமித்தல்.
- ➢. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமித்தல்
- ➢. நீதி மன்றத்தில் தீர்வு வழங்கப்பட்ட ஒருவருக்கு நிபந்தனையுடன் அல்லது நிபந்தனையின்றி மன்னிப்பை வழங்குதல் அல்லது தண்டனையைக் குறைத்தல்.
- ➢. மரணதண்டனைத் தீர்ப்பை சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று மாற்றியமைத்தல்.

26. 1978ம் ஆண்டு குடியரசு ஜனாதிபதியால் வழங்கப்படும் நியமனங்கள் பற்றிக் குறிப்பிடுக.

- ➢. அரச தூதுவர்கள், ஆணைக்குழுத் தலைவர்களை நியமித்தல்.
- ➢. முப்படைத்தலைவர், பொலிஸ் மா அதிபரை நியமித்தல்.
- ➢. நீதிச்சேவை ஆணைக்குழு, பிரதம நீதியரசர், மேன்முறையீட்டு நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல்.
- ➢. சட்டமா அதிபர், ஜனாதிபதி ஆணைக்குழுவில் தலைவர்களை நியமித்தல்.
- ➢. மாகாண ஆளுநர்களை நியமித்தல்.
- ➢. பல்கலைக்கழக நிதி ஒதுக்கீட்டு ஆணைக்குழு, பல்கலைக்கழக வேந்தர்கள், துணை வேந்தர்கள் ஆகியோரை நியமித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. 1978ம் யாப்பின் பிரகாரம் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் எவை?

- ➢. சட்டத்தைப் பிறப்பித்தல்.
- ➢. நீதியைக் கையாளுதல்.
- ➢. வரவு செலவுத்திட்டத்தை அனுமதித்தல்.
- ➢. அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல்.

28. **1978ம் ஆண்டு பாராளுமன்றத்தின் அமைப்பினைத் தருக.**

பாராளுமன்றம் (225)

| | |
|---|---|
| மாவட்ட அடிப்படையில் விகிதாசார முறைப்படி வாக்குகளால தெரிவு செய்தல் | தேசியப் பட்டியல் தெரிவு |
| **196** | **29** |

29. **1978ம் ஆண்டு குடியரசு யாப்பில் உள்ளடக்கப் பட்டுள்ள அடிப்படை உரிமைகள் எவை?**

- ➢. சட்டத்தின் முன் அனைவரையும் சமமாக மதித்தல்.
- ➢. பேச்சு சுதந்திரம், கருத்துக்களை வெளியிடும் உரிமை.
- ➢. கொடூரமான தண்டனைகளிலிருந்து விடுபடும் உரிமை.
- ➢. விரும்புகின்ற கொள்கைகளை, சமயத்தை பின்பற்றும் உரிமை.
- ➢. விரும்பிய இடத்திற்குச் செல்வதற்கும், வசிப்பதற்கு -மான உரிமை.
- ➢. விரும்பிய தொழில் புரியும் உரிமை.
- ➢. சொத்துச் சேகரிக்கும் உரிமை.
- ➢. அமைதியான முறையில் ஒன்று கூடும் உரிமை.
- ➢. காரணமின்றி கைது செய்யப்படாதிருக்கும் உரிமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. 1972ல் குடியரசு யாப்பினையும், 1978 ஜனநாயக சோஷலிசக் குடியரசு அரசியல யாப்பினையும் ஒப்பிடுக.

| 1972 குடியரசு யாப்பு | 1978 ஜனநாயக சோஷலிசக் குடியரசு யாப்பு |
|---|---|
| ➢. தேசிய அரசுப் பேரவை | ➢. பாராளுமன்றம். |
| ➢. பெயரளவில் ஜனாதிபதி | ➢. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி |
| ➢. தொகுதிவாரித் தேர்தல் முறை | ➢. விகிதாசாரப் பிரதி நிதித்துவ முறை |
| ➢. அடிப்படை உரிமைகள் சில சில அம்சங்கள் மட்டும் முதலில் இடம் பெறல். | ➢. பரந்தளவில் அடிப்படை உரிமைகள் இடம் பெறல் |
| ➢. மக்கள் இறைமை தேசிய அரசுப் பேரவை மூலம் இடம்பெறல் | ➢. மக்கள் இறைமை பாராளுமன்றம் ஜனாதிபதி, உயர்நீதி மன்றம் மூலம் செயற்படல். |
| ➢. அரச சேவைகள், ஆலோசனைச் சபை, அரசசேவைகள் ஒழுக்காற்றுச் சபை. | ➢. பொதுச் சேவை ஆணைக்குழு |
| ➢. நீதிச் சேவைகள், ஆலோசனைச் சபை | ➢. நீதிச் சேவை ஆணைக்குழு |
| ➢. ஒழுக்காற்றுச்சபை யாப்பு நீதிமன்றம் | ➢. நீக்கம் |
| ➢. நடைமுறையில் இருக்கவில்லை | ➢. ஒம்புட்ஸ்மன் |
| ➢. நடைமுறையில் இருக்கவில்லை | ➢. மக்கள் தீர்ப்பு. |

31. 1978ம் ஆண்டு யாப்பில் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகச் செயற்-படுத்தப்பட்டுள்ள ஏற்பாடுகளைத் தருக.

➢. நீதிபதியின் தீர்ப்புக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது.

➢. நீதிபதி ஒருவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டு-மெனில் பாராளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

➢. நீதிச்சேவை ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் 65 வயது வரையும், மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் 63 வயது வரையும் பதவி வகிக்கலாம் என யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

➢. நீதிபதிகளினதும், நீதிச்சேவை ஆணைக் குழுவினதும் சம்பளங்கள் திரட்டு நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டும்.

➢. வழக்கு விசாரணைகள் பகிரங்கமாக நீதிமன்றத்தில நடாத்தப்பட வேண்டும் என்பதும் சிறந்த ஏற்பாடாகும்.

**32. 1978ம் ஆண்டு யாப்பின் ஜனாதிபதித் தேர்தல் முறை பற்றி எழுதுக.**

➢. நாடு முழுவதிலும் ஒரே தேர்தல் தொகுதியாகக் கணிக்கப்பட்டு அளிக்கப்பட்ட வாக்குகளில் அறுதிப் பெரும்பான்மையை அதாவது 50% க்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் அபேட்சகரே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.

➢. ஆறுவருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும்.

➢. எந்த ஒரு வேட்பாளரும் 50% க்கு மேல் பெறாதவிடத்து கூடுதலான வாக்குகளைப் பெற்ற இரு வேட்பாளர்களைத் தவிர ஏனையோர் விலக்கப்படுவர்.

➢. நீக்கப்பட்ட வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளிலிருந்து இரண்டாம் விருப்புத் தெரிவாகப் போட்டியில் நிற்கும் வேட்பாளருக்குரிய வாக்குகள் எண்ணப் -பட்டு பதியப்படும்.

➢. மீண்டும் 50% க்கு மேல் பெறாவிட்டால் மூன்றாம் விருப்பு வாக்குகள் கணிக்கப்படும். இறுதியில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்படுவர்.

➢. இரண்டு வேட்பாளர்களும் சமமான வாக்குகளைப் பெற்றால் திருவுளச் சீட்டெடுப்பின் மூலம் யார் ஜனாதிபதி எனத் தீர்மானிப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. விகிதாராசார பிரதிநிதித்துவ முறை பற்றி எழுதுக.

➢. பாராளுமன்றம், மாகாணசபை, உள்ளூர் ஆட்சிச் சபை என்பனவற்றிற்கான அங்கத்தவர்கள் விகிதாசார முறைப்படி தெரிவு செய்யப்படுவர்.

➢. அங்கத்தவர்கள் ஒரு குழுவாகப் போட்டியிடுவர். ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுக்கும் தெரிவாகும் பிரதிநிதிகளின் தொகை தேர்தலுக்கு முன்பே அறிவிக்கப்படும்.

➢. வாக்காளர்கள் வாக்கினைப் பிரயோகிக்கும் போது கட்சிக்கு ஒரு வாக்கையும், தேர்தலில் போட்டியிடும் அங்கத்தவருக்கு ஒரு விருப்பு வாக்கும் வழங்க வேண்டும்.

➢. இவ்வாறு மூவருக்கு விருப்பு வாக்கு வழங்கலாம்.

➢. இதில் ஒரு கட்சி பெற்ற மொத்த வாக்குகளுக்கமைய கட்சிக்கான அங்கத்தவர் தொகை தீர்மானிக்கப் படுவதுடன் அங்கத்தவர் பெற்ற விருப்புவாக்கிற்கு அமைய வெற்றி வாய்ப்புக்கள் தீர்மானிக்கப்படும்.

34. விகிதாசாரப் பிரதி நிதித்துவ முறையின் நன்மை, குறைபாடுகளை ஆராய்க.

நன்மைகள்

➢. கூடிய ஜனநாயகத் தன்மையுடையது.

➢. சிறிய கட்சிகள் பிரதிநிதித்துவம் பெறும் வாய்ப்பு ஏற்படும்.

➢. மாவட்ட ரீதியில் கணிசமாகச் செறிந்து வாழும் மக்கள் தனக்கென பிரதிநிதியைப் பெறமுடியும்.

➢. கட்சிச் சர்வதிகாரம் இல்லாமல் போகும். கூட்டரசாங்கம் உருவாகும் வாய்ப்பு அதிகம்.

➢. இடைத்தேர்தல் இல்லாதிருப்பதனால் தேர்தல் செலவு மீதப்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைபாடுகள்.

- ➢. சிக்கலான தேர்தல் முறை, சாதாரண வாக்காளர்களினால விளங்கிக் கொள்ளமுடியாமை.
- ➢. இடைத்தேர்தல் இல்லாமையினால் கட்சி பற்றிய அபிப்பிராயத்தை அறிய முடியாத நிலை.
- ➢. பிரதிநிதிகளுக்கும், வாக்காளர்களுக்குமிடையில் தொடர்பு இல்லை.
- ➢. நிலையான அரசாங்கத்தை அமைக்க முடியாமை.
- ➢. தேர்தல் தொகுதிக்கென அங்கத்தவர் இல்லாமை.
- ➢. செலவு கூடிய தேர்தல் முறை.
- ➢. ஒரு கட்சிக்குள்ளேயே பிரதிநிதித்துவ போட்டி நிலவுதல்.

**35. பொதுசன அபிப்பிராயத் தேர்தல் பற்றிக் குறிப்பிடுக.**

- ➢. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்தில் நேரடியாக மக்கள் ஆணையைப் பெறும் முறையாகும்.
- ➢. இதன்படி குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பாக தமது விருப்பை மக்கள் "ஆம்" அல்லது "இல்லை" எனத் தீர்மானிக்கலாம்.
- ➢. மக்களின் அடிப்படை உரிமைகளையும், மக்களுடைய ஜனநாயகத்தையும் இம்முறை வலுப்படுத்துகின்றது.
- ➢. மக்கள் யாப்பு நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்குபற்றுவதற்கான வாய்ப்பாக உள்ளது.

  (1982ல் பொது அபிப்பிராயத் தேர்தல் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. நிறைவேற்று ஜனாதிபதி J.R. ஜெயவர்த்தன அவர்களால் நடாத்தப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியாகக் கடமையாற்றியவர்கள். | இலங்கை ஆளுநா் நாயகம் பதவி வகித்தவா்கள் |
|---|---|
| ➢. திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனா | ➢. சேர். ஹென்றிமொங் -மேசன் மூர் (1947 - 1949) |
| ➢. திரு. ஆர். பிரேமதாஸ | ➢. சோல்பரிப் பிரபு (1949 - 1954) |
| ➢. திரு. டி.பி.விஜயதுங்கா | ➢. சோல்பரிப் பிரபு (1954 - 1962) |
| ➢. திருமதி. சந்திரிக்கா குமாரதுங்க | ➢. வில்லியம் கோபல்லாவ (1962 - 1972) |
| ➢. திரு. மகிந்த இராஜபக்ஷ | — |
| ➢. திரு. மைத்திரிபால சிறிசேன | — |

**36. இலங்கையில் சுதந்திரத்தின் பின்னரான விவசாய அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றி எழுதுக.**

➢. நெல் உற்பத்தியைப் பெருக்குதல்.

- நெல்லுக்கான உத்தரவாத விலை அறிமுகப் படுத்தப்பட்டமை. (1948 - 8/=, 1952 - 12/=, 1977 - 40/=)
- நெல் ஆராய்ச்சி நிலையங்கள் உருவாக்கப் பட்டமை.

  (பத்தலகொட, மகாஇலுப்பள்ளம)
- புதிய நெல் இனங்கள அறிமுகப்படுததப்பட்டது.
- விவசாய சேவை மத்திய நிலையங்கள் ஆரம்பித்தல்.
- விவசாயிகளுக்கு கடனுதவிகளை அரசாங்க வங்கிகள் மூலமாகப் பெற்றுக் கொடுத்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. புதிய விவசாய நீர்ப்பாசனத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை.
(1948 - கல்லோயா அபிவிருத்தித் திட்டம், 1956 - உடவளவைத் திட்டம், 1970 - மகாவலி அபிவிருத்தித்திட்டம்.)

**37. D.S. சேனநாயக்கா அவர்கள் உலர் வலயத்தில் விவசாயக் குடியேற்றங்கள் உருவாக்கியமைக்கான காரணங்களைத தருக.**

➢. ஈரவலயத்தில் பெருகிச் செல்லும் சனத்தொகை நெருக்கடிக்கு தீர்வு காணப்படல்.

➢. உணவு உற்பத்தியைப் பெருக்குதல்.

➢. வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்.

➢. உலர் வலயத்தில் உள்ள புராதன குளங்கள், கால்வாய்கள் என்பனவற்றை புனரமைத்து அங்குள்ள நிலங்களை அபிவிருத்திக்குப் பயன் படுத்தல்.

➢. ஈரவலயத்தில் காணப்படும் நிலப்பற்றாக்குறைக்கு பரிகாரம் காணப்படல்.

➢. நில உரிமையுள்ள திருப்திகரமான வாழ்க்கை மேற்கொள்ளும் விவசாயப் பரம்பரையை உருவாகுதல்.

**38. உலர்வலய விவசாயக் குடியேற்றங்களை அமைக்கும் போது அரசாங்கம் எதிர்நோக்கிய சவால்களைத் தருக.**

➢. ஈரவலயத்திலிருந்து மக்களைத் தெரிவு செய்து நிலங்களை வழங்கி வீடமைத்து குடியேற்ற வேண்டிய நிலை.

➢. நீண்ட காலமாகக் காடாகிக் கிடந்த நிலத்தை விவசாயத்திற்கு ஏற்றதாக மாற்றியமைத்தல்.

➢. அறுவடைகளைப் பெற்றுக்கொள்ளும் வரை நிதி உதவி செய்ய வேண்டியிருந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. அம்மக்களுடைய சுகாதாரம், கல்வி உட்பட ஏனைய வசதிகளை மேம்படையச் செய்ய வேண்டிய நிலை.
- ➢. உற்பத்திகளைச் சந்தைப்படுத்த தாபனங்களைத் தோற்றுவித்தமை.

**39. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்-களைக் குறிப்பிடுக.**

- ➢. உலர்வலயக் காணிகளைக் கூடிய பயன்பாட்டுடன் பயிர்ச்செய்கை நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான நிரந்தர நீர் வசதிகளை வழங்கல்.
- ➢. அதிகரித்துச் செல்லும் தேவைகளைப் பூர்த்தி செய்ய மின் உற்பத்தியினை வழங்கல்.
- ➢. நீர் வளத்தின் மூலம் குடியேற்றத்திட்டங்களை உருவாக்கி பயிர்ச்செய்கையை பரவலடையச் செய்தல.
- ➢. விவசாயத்துறைத் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- ➢. வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தல்.
- ➢. நன்னீர் மீன் வளர்ப்பை விருத்தியடையச் செய்தல்.

**40. மகாவலி அபிவிருத்தித் திட்டம் எவ்வாறு துரித மகாவலி அபிவிருத்தித் திட்டமாக உருவானது என்பதை எழுதுக.**

- ➢. மகாவலி அபிவிருத்தித் திட்டம் முதற்கட்டமாக 30 வருடங்களில் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டது. பொல்கொல்லையில் அணைக்கட்டு அமைத்து சுது கங்கைக்கு நீர்வழங்கி போவததன நீர்த்தேக்கத்தின் ஊடாக உலா வலயங்களுக்கு நீர் வழங்கத் திட்டமிடப்பட்டிருந்தது.
- ➢. 1977ல் பதவிக்கு வந்த J.R. ஜெயவர்த்தனா தலைமையிலான அரசாங்கம் இத்திட்டத்தை 6 ஆண்டுகளில் பூர்த்தி செய்யத் திட்டமிட்டுத் துரித மகாவலித்திட்டத்தை உருவாக்கியது. 1979ல் மகாவலி அதிகாரசபை நிறுவப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கங்களைப் பற்றி விளக்குக.

1. **விக்டோரியா நீர்த்தேக்கம்.**
   - பொல்கொல்லை நீர்த்தேக்கத்திற்கு சற்று தொலைவில் அணைக்கட்டு ஒன்று நிர்மாணிக்கப் -பட்டு இந்நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டது.
   - மின்னுற்பத்தியே இதனது பிரதான நோக்கமாகும்.
   - இதற்கான நிதியுதவியை பிரித்தானிய அரசு வழங்கியது.

2. **கொத்மலை நீர்த்தேக்கம்.**
   - மகாவலிகங்கையின் கிளை நதியான கொத்மலை ஓயாவில் கடதொர எனும் இடத்தில் அணை ஒன்றை அமைத்து கொத்மலை நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டது.
   - இங்கு நிலத்துக்கு கீழ் மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
   - இதற்கான நிதி உதவியை சுவீடன் அரசு வழங்கியுள்ளது.

3. **ரந்தெனிகல நீர்த்தேக்கம்.**
   - விக்டோரியா நீர்த்தேக்கத்தின் கீழ்ப்பகுதியில் மினிப்பே அணைக்கட்டிற்கு மேற்புறமாக இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டது.
   - மின்னுற்பத்தியும், நீர்ப்பாசனமும் இதன் நோக்கங்களாகும். இதற்கான நிதியுதவியை மேற்கு ஜேர்மனி வழங்கியது.
   - மகாவலித்திட்டத்தில் அமைந்த பாரிய நீர்த்தேக்கம் இதுவேயாகும்.

42. மகாவலித் திட்டத்தினால் ஏற்பட்ட நன்மைகளைத் தருக.

- இலங்கையின் மொத்தப் பயிர்ச்செய்கையில் 16% மகாவலித்திட்டத்தில் அமைந்துள்ளது.
- இலங்கையின் மின்வலுவில் 50% வரை அங்கிருந்து பெறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நாட்டின் நெல்லுற்பத்தியில் 20%ஐ வழங்கி வருகின்றது.
- விவசாயக் குடும்பங்கள் பல குடியேற்றப்பட்டுள்ளன.
- புதிய புகலரணங்கள் உருவாகியுள்ளன. (வஸ்கொமுவ, சோமாவதி, மதுரு ஓயா)
- புதிய நகர்கள் உருவாகியுள்ளன. (தெகியத்த, கண்டி, திகனை)

**43. வர்த்தக விவசாய அபிவிருத்திக்காக சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கை -களைத் தருக.**

- 1972ம் ஆண்டு நிலச்சீர்த்திருத்தச் சட்டம் மூலம், நபர் ஒருவர் வைத்திருக்கக் கூடிய நிலத்தின் அளவு 10 ஹெக்டயர் (25 ஏக்கர்) வயல் நிலமும், 20 ஹெக்டேயர் காணி நிலமும் என உச்ச எல்லையாக வரையறுக்கப்பட்டது.
- 1975ல் நிலச்சீர்திருத்ததின் மூலம் வர்த்தகப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த கம்பனிகளுக்கு உடமையாக இருந்த காணிகள் பொதுவுடமை -யாக்கப்பட்டது.
- 62% அரச துறைக்குச் சொந்தமானது.
- இவற்றை நிர்வகிக்க பல தாபனங்கள் உருவாக்கப் பட்டன.
    1. 1975 - அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்
    2. 1976 - மலைநாட்டுத் தோட்ட அபிவிருத்தி சபை
    3. 1976 - மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை
- 1952ல் சீன - இலங்கை இருதரப்பு ஒப்பந்தம் மூலம் இலங்கையில் இறப்பருக்கான நிரந்தரமான சந்தை ஒன்று கிடைக்கப்பெற்றது.
- 1977ம் ஆண்டு உருவான அரசாங்கத்தால் இறப்பர் மீள் நடுகைக்கும், புதிய நடுகைக்கும் உதவி புரியும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1951ல் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டது.
- 1971 தென்னை அபிவிருத்தி அதிகார சபை உருவாக்கப்பட்டது.
- 1976ல் ஸ்ரீ லங்கா தேயிலைச் சபை நிறுவப்பட்டது.
- 1995ல் இறப்பர் வளர்ச்சி அமைச்சு அமைக்கப்படடது.

**44. சுதந்திரத்தின் பின்னர் சிறு ஏற்றுமதிப் பயிர்களை அபிவிருத்தி அடையச் செய்ய இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தருக.**

- 1968ல் தேயிலைப் பயிர் செய்யும் சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- 1972ம் ஆண்டு மாத்தளைப் பிரதேசத்தில் சிறு ஏற்றுமதிப பயிர்களுக்கான ஆய்வகம் நிறுவப்பட்டது.
- பின்னர் குண்ட சாலை, தெல் பிட்டிய, நாரம்மல போன்ற இடங்களிலும் ஆய்வகங்கள் நிறுவப்பட்டன.
- சிறு ஏற்றுமதிப்பயிர்களை மேம்படுத்தும் நோக்கில் "சிறு ஏற்றுமதி பயிர்த்திணைக்களம்" உருவாக்கப்பட்டது.
- சிறு ஏற்றுமதிப் பயிர்களாக கோப்பி, கொக்கோ, ஏலம், சாதிக்காய், கராம்பு, மிளகு, சிங்கோனா, கறுவா முதலியன அபிவிருத்தி செய்யப்பட்டன.

**45. சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் கைத்தொழில வளர்ச்சிக்கு அரசு எடுத்த நடவடிக்கைகளைத் தருக.**

- 1952ம் ஆண்டு உலக வங்கித் தூதுக்குழுவின் ஆலோசனையின் பேரில் கைத்தொழில் அபிவிருத்தியின் அவசியத்தை அரசு உணர்ந்தது.
- 1959ல் ஏக்கலையிலும், 1960ல் இரத்மலானையிலும் கைத்தொழில் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- 1961ல் மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டதுடன் சிறு கைத்தொழிலாளருக்கு கடன் வசதி செய்து கொடுக்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. 1966ல் உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்திகளின் தரத்தை நிர்ணயிப்பதற்காக தர நிர்ணய சபை ஆரம்பிக்கப்பட்டது.
- ➢. 1968ல் அறிமுகப்படுத்தப்பட்ட அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் முறை மூலம் ஏற்றுமதிக்கான கைத்தொழில் துறை ஊக்குவிக்கப்பட்டது.
- ➢. 1970-77 காலப்பகுதியில் கைத்தொழில் துறையில் அரச தலையீடு அதிகமாகக் காணப்பட்டது. இதன் மூலமாக குடிசைக் கைத்தொழில்கள் வளர்ச்சி கண்டன.
- ➢. 1977ம் ஆண்டின் பின்னர் ஏற்றுமதிக் கைத்தொழிலை வளர்ப்பதற்கு வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதோடு தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதற்கான கொள்கை ஏற்படுத்தப்பட்டது.
- ➢. 1978ல் பாரிய கொழும்பு பொருளாதர ஆணைக்குழு அமைக்கப்பட்டது.
- ➢. சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைக்கப்பட்டன. (உ + ம் : கட்டுநாயக்கா, பியகம, கொக்கல)
- ➢. சுதந்திரம் பெற்ற பின்னரான 30 ஆண்டுகளில் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்கின்ற அதிகளவிலான கைத்தொழில்கள் உருவாக்கப்பட்டன.

  (உ +ம் : சீமெந்து, இரும்புருக்கு, ஒட்டுப்பலகை, சீனி)

**46. சுதந்திரத்திற்குப் பின்னர் கல்வித்துறையை அபிவிருத்தி செய்ய இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தருக.**

- ➢. C.W.W.கன்னங்கரா அவர்களின் ஆலோசனைப்படி பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- ➢. அரசாங்கப் பாடசாலைகள் நிறுவப்பட்டமை.
- ➢. கல்வி அபிவிருத்திக்கு அதிகளவு பணத்தினை ஒதுக்கியமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடத்திட்டத்தை விருத்தியமை யச் செய்து ஆசிரிய பயிற்சி நடவடிக்கைகள் நவீனமயப்படுத்தப்பட்டன.
- விஞ்ஞான ஆய்வுகூட, நூல் நிலைய வசதிகள விரிவாக்கப்பட்டன.
- இலவச பகலுணவு, வைத்திய சேவை என்பன வழங்கப்பட்டன.
- சலுகை முறையிலான போக்குவரத்துக் கட்டணங்கள், இலவசப்பாட நூல், சீருடை என்பன மாணவர்களுக்கு அளிக்கப்பட்டன.
- கல்வி நிர்வாக நடவடிக்கைகள் காலத்திற்குப் பொருத்தமானதாக மாற்றியமைக்கப்பட்டது.
- தொழில்நுட்பக் கல்வித்தாபனங்கள் உருவாக்கப்பட்டன.
- வித்தியோதயப் பிரிவெனாவும், வித்தியாலங்காரப் பிரிவெனாவும் முறையே ஸ்ரீஜெயவர்த்தனபுர, களனி பல்கலைக்கழகங்களாகத் தரமுயர்த்தப்பட்டன.

**47. சுதந்திரத்தின் பின்னரான சுகாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடுக.**

- நகர்ப்புறங்களைப் போன்று கிராமப் பிரதேசங்களிலும் சுகாதார சேவை விரிவுபடுத்தப்பட்டது.
- 1947ல் யானைக்கால் நோய் ஒழிப்புத்திட்டம்.
- 1949ல் காச நோய்த்தடுப்பு மருந்தான பி.சி.ஜி. அறிமுகம்.
- 1962ல் போலியோ சொட்டு மருந்து அறிமுகம்.
- 1965ல் பெரியம்மை நோய் ஒழிப்பு
- டெங்குக் காய்ச்சல் நோய் ஒழிப்பு நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டது.
- 1969ல் கர்ப்பிணித் தாய்மாருக்கான ஏற்புவலி தடை மருந்து அறிமுகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. 1972ல் குடும்ப சுகாதாரப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் தாய், சேய் நலன், குடும்பத்திட்டம், சுகாதாரக் கல்வி போன்றனவும் வளர்ச்சி கண்டது.

**48. பிரித்தானியர் காலத்திலேயே பெருந்தெருக்கள், புகையிரத வீதிகள், துறைமுகங்கள் என்பன வளர்ச்சியடைந்து காணப்பட்ட போதிலும், சுதந்திரத்தின் பின்னரான போக்கு / வளர்ச்சியைக் குறிப்பிடுக.**

➢. புகையிர சேவை விருத்தி கண்டது.
   - நிலக்கரி என்ஜின்களுக்குப் பதிலாக டீசல் என்ஜின்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.
   - நகரங்களுக்கிடையிலான கடுகதி புகையிரத சேவை அறிமுகம்.

➢. உல்லாசப் பிரயாணிகளுக்காக சொகுசு ஆசன வசதி, காட்சிகாண் கூட வசதி ஆரம்பிக்கப்பட்டமை.

➢. புகையிரத பஸ் ஒன்றிணைந்த சேவை ஆரம்பிக்கப்பட்டமை.

➢. புகையிரதப் பாதைகளில் நவீன சமிக்ஞைத் தொகுதிகள் அமைக்கப்பட்டமை.

➢. 1956 முதல் யாழ்தேவி, உடரட்ட மெனிகே, பொடிமெனிகே, ருகுணுகுமாரி போன்ற சேவைகள் தூர இடங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டன.

**49. "துறைமுக விருத்தி நடவடிக்கைகளைத் தருக.**

➢. கொழும்புத் துறைமுகம் உலகில் முக்கிய துறைமுகங்களில் ஒன்றாக விளங்கும் வண்ணம் அபிவிருத்தி செய்யப்பட்டது.

➢. 1950 - 55 காலப்பகுதிகளில் கப்பல் நங்கூரத் தளங்கள், எலிசபத், பண்டாரநாயக்கா, விஜய இறங்கு துறைகள் அபிவிருத்தி செய்யயப்பட்டமை.

➢. 1958ம் ஆண்டு கொழும்புத் துறைமுகம் அரசமயமானது.

➢. 1970ல் துறைமுக அதிகார சபை உருவாக்கபட்டது.

➢. 1977ல் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் மேலும் அபிவிருத்தி அடைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. தொடர்பாடல் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கை -களைத் தருக.

- 1948ல் தபால் விநியோகத்திற்கு வாகன சேவை அறிமுகம் செய்யப்பட்டது.
- 1949ல் வானொலித் திணைக்களம் ஆரம்பிக்கப் பட்டது.
- 1949ல் கொழும்பு - யாழ்ப்பாணம் விமானம் மூலம் தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1963ல் ரெலெக்ஸ் சேவை அறிமுகப்படுத்தப் பட்டது.
- 1966ல் நேரடி தொலைபேசி சேவை ஆரம்பிக்கப் -பட்டது.
- 1967ல் இலங்கை ஒலிபரப்புத் தாபனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1976ல் செய்மதிப் பரிமாற்று நிலையம் அமைக்கப்பட்டது.
- 1977ல் முகவர் அஞ்சல் நிலையங்கள் அமைக்கப் பட்டன.
- 1979ல் பிராந்திய வானொலி ஒலிபரப்பு அறிமுகப் படுத்தப்பட்டது.
- 1980 FM நவீன அலைவரிசை சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

51. ஏனைய நலன்புரி நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

- கிராமப்புறங்களில் பாதைகள் விஸ்தரிக்கப்பட்டமை.
- நீர், மின்சாரம், செய்தித் தொடர்பு போன்றன கிராமப்புறங்களுக்கு கிடைக்கப்பெறச் செய்தது.
- அரசினால் உணவு, மானியம் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.
- கிராமப்புறங்களில் அரசு வீடமைப்புத்திட்டங்களை மேற்கொண்டது.
- நகர்ப்புறங்களில் மாடிவீட்டுத் திட்டத் தொகுதிகளை மேற்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 07
## உலகில் இடம்பெற்ற பிரதான புரட்சிகள்

**01. புரட்சி என்னும் சொல் எதனைக் குறிக்கின்றது?**

ஒரு துறையில் குறுகிய காலத்தில் ஏற்படும் மாற்றம் புரட்சி எனப்பட்டது.

உதாரணமாக பின்வருமாறு குறிப்பிடலாம்.

➢. பொருளாதார நோக்குடைய கைத்தொழில் துறையில் ஏற்பட்ட மாற்றம் கைத்தொழில் புரட்சி எனப்பட்டது.

➢. கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக மார்ட்டின் லூதரினால் மேற்கொள்ளப்பட்ட புரட்சி மதப்புரட்சி எனப்பட்டது.

➢. மனிதன் தனது உரிமைகளை வென்றெடுக்க அமெரிக்க சுதந்திரப் போராட்டம், இரஷ்யப் புரட்சி, பிரான்சியப் புரட்சி என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

**02. மனிதன் உரிமைகளை வென்றெடுக்க உருவான புரட்சிகளின் நோக்கங்கள், கோஷங்கள் / சுலோகங்கள் என்பவற்றைக் குறிப்பிடுக.**

➢. **அமெரிக்க சுதந்திரப்போர்.**

நோக்கம் : பிரித்தானிய சாம்ராச்சியத்தில் இருந்து சுதந்திரம் பெறல்

கோஷம் : "பிரதிநிதித்துவமின்றேல் வரியும் இல்லை"

➢. **பிரான்சியப் புரட்சி.**

நோக்கம் : பூர்பன் வம்ச முடியாட்சிக்கு எதிரான புரட்சி

கோஷம் : "சுதந்திரம், சமத்துவம், சகோத - ரத்துவம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. இரஷ்யப் புரட்சி.

நோக்கம் : சார் மன்னர்களின் சர்வாதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வரல்.

கோஷம் : "சமாதானம், நிலம், பாண்"

03. அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்த ஐரோப்பிய நாடுகளைத் தருக.

போர்த்துக்கல், பிரான்ஸ், ஒல்லாந்து, ஸ்பானியா, இங்கிலாந்து

04. அமெரிக்காவின் பூர்வீகக் குடிகள் யாவர்?

செவ்விந்தியர், மாயன்கள், அஸ்டேக்கியர், இன்கா

05. ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவில் குடியேற்றங்-களை அமைக்கச் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் எவை?

➢. வர்த்தகத்தின் பொருட்டு பிற பிரதேசங்களில் நிலங்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம் வாழ்வைச் சிறப்பானதாக்கிக் கொள்ள மக்கள் விரும்பியமை.

➢. ஐரோப்பிய நாடுகளில் கத்தோலிக்க புரட்டாஸ்தந்து மதத்தவருக்கிடையே நிலவிய சமயப் புரட்சியின் விளைவாக மோதல்கள் இடம் பெற்றமையால் இன்னல் பட்ட மக்கள் சமய சுதந்திரத்தை நாடி அமெரிக்காவிற்குச் சென்றமை.

➢. ஐரோப்பிய நாடுகள் தமது சமயத்தை பாதுகாக்கவும், பரப்புவதற்கும் பெரும்முயற்சி எடுத்ததுடன் புதிய பிரதேசத்தில் (அமெரிக்காவில்) உரோமன கத்தோலிக்க மதத்தைப் பரப்ப விரும்பியமை.

➢. புகழையும், செல்வத்தையும் அதிகரிக்கும் நோக்குடன் ஐரோப்பிய நாடுகளின் ஆட்சியாளர்கள் புதிய இடங்களைக் கண்டு பிடிப்பதற்கு வழங்கிய ஒத்துழைபபு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஸ்பானியா | - | பேர்டினன் இஸபெல்லா |
| பிரான்ஸ் | - | 4ம் ஹென்றி |
| போர்த்துக்கல் | - | கடலோடி ஹென்றி |
| இங்கிலாந்து | - | 7ம் ஹென்றி, 8ம் ஹென்றி, எலிசபெத். |

**06 அமெரிக்காவில் ஐரோப்பிய நாடுகளின் முக்கிய குடியேற்றங்களைத் தருக.**

- ➢. ஸ்பானியா - பேரு, பனாமா, மெக்சிக்கோ
- ➢. போர்த்துக்கல் - பிரேசில்
- ➢. பிரான்ஸ் - லூசியானா
- ➢. பிரித்தானியா - வடஅமெரிக்காவின் 13 குடியேற்றங்கள்.

(வேர்ஜினியா, மசாசூசெற்ஸ், நியூயோர்க், நியுஹம்சயர், மேரிலாந்து, கனக்டிகட், ஜோர்ஜியா, ரோட் தீவு, டெலவர், வட கரோலினா, நியூஜேர்சி, தென் கரோலினா, பென்சில்வேனியா)

**07. அமெரிக்காவில் முதலாவதாகவும், இறுதியாகவும் நிறுவப்பட்ட குடியேற்றங்களைக் குறிப்பிடுக.**

முதலாவது குடியேற்றம் - 1607 - வேர்ஜினியா
இறுதிக் குடியேற்றம் - 1733 - ஜோர்ஜியா

**08. பிரித்தானிய அமெரிக்க குடியேற்றங்களின் தன்மைகளைத் தருக.**

- ➢. பிரித்தானிய ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை இருந்தது.
- ➢. தாய் நாட்டுச் சட்டங்கள் குடியேற்ற நாடுகளில் செயற்படுத்தப்பட்டிருந்தது.
- ➢. குடியேற்றங்களின் நிர்வாகம் அவ்வக குடியேற்றங்களின ஆளுநரால் மேற்கொள்ளப்பட்டது.
- ➢. ஆளுநருக்கு உதவும் பொருட்டு குடியேற்றங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சட்டசபை இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. குடியேற்றங்களை நிறுவவந்தோர் அதற்கான அனுமதியை பிரித்ததானிய அரசிடம் பெற்றுக் கொள்ள வேண்டியும், அவர்களது சில நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டியிருந்தமை.

**09. அமெரிக்க குடியேற்றவாசிகள் சுதந்திரமாக, நிர்வாகத்தை முன்னெடுக்க உதவிய காரணி - களைத் தருக.**

➢. அமெரிக்காவுக்கும், பிரித்தானியாவுக்குமிடையே நீண்ட தூரம் இருந்தமை.

➢. வளர்ச்சியடைந்த தொடர்பாடல் வசதிகள் காணப்படாமை.

➢. அமெரிக்க குடியேற்ற நாடுகள் தொடர்பாக பிரித்தானியா இலகுவான அரசியற் கொள்கை -களைக் கடைப்பிடித்தமை.

➢. அவ்வக் குடியேற்றங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சட்டசபை இருந்தமை.

**10. அமெரிக்க சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்களைத் தருக.**

➢. பிரித்தானியர் குடியேற்ற நாடுகளுக்குப் பாதகமாகவும், தாய் நாட்டிற்குச் சாதகமாகவும் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கை.

✎. பிரித்தானியாவில் உற்பத்தி செய்யப் படுகின்ற பொருட்கள் குடியேற்றங்களில் உற்பத்தி செய்வதற்கு தடை விதிக்கப் பட்டமை.
(உ + ம் : இரும்பு, கம்பளி)

✎. குடியேற்றங்களில் உற்பத்தி செய்யப்படும் குறித்த சில பொருட்கள் பிரித்தானிய சந்தைக்கு மாத்திரம் வழங்கப்பட வேண்டும்.
(உ + ம் : புகையிலை, சீனி, பருத்தி, தேன், மெழுகு, கோதுமை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. குடியேற்றங்களுக்குத் தேவையான பொருட்களை பிரித்தானியாவினூடாகவே பெற வேண்டி ஏற்பட்டமை.

➢. ஏழாண்டுப் போரில் பிரித்தானியாவின் தோல்வியால் குடியேற்ற நாடுகள் மீது பொருளாதாரக் கட்டுப்பாடு விதித்தமையும், குடியேற்றவாசிகளின் எண்ணங்களைப் புரிந்து கொள்ளாமையும்.

➢. 1763 இன் பின்னர் புதிய வரி முறைகளை அறிமுகபபடுத்தியமை.
(1764 - கரும்புச்சட்டம், 1765 - முத்திரைச் சட்டம், 1773 - தேயிலை உரிமைச் சட்டம்)

➢ 1767 ஆண்டின் டவுண் சென் சட்டம் மூலமாக கண்ணாடி, தேயிலை, சாய வகை, கடதாசி போன்றவற்றிற்கு வரி விதித்தமை.

➢. குடியேற்றவாசிகளின் நீதியான போராட்டங்களைக கட்டுப்படுத்த பிரித்தானியா நடவடிக்கை எடுத்தமை.
(1770 - பொஸ்ரன் படுகொலை)

➢. சுதந்திரம் தொடர்பாக குடியேற்றவாசிகளிடையே காணப்பட்ட ஆர்வம்.

➢. பொஸ்டன் தேநீர் விருந்து அமெரிக்கச் சுதந்திரப் போரின் உடனடிக் காரணமாக அமைந்தது.

**11. பொஸ்டன் தேனீர் விருந்து என்பது பற்றிக் குறிப்பிடுக.**

1773ம் ஆண்டு டிசம்பர் மாதம் பொஸ்டன் துறைமுகத்தில் தரித்து நின்ற தேயிலையுடன் கூடிய கப்பலில் மாறுவேடத்தில் சென்ற பொஸ்டன் மக்கள் 342 தேயிலைப் பெட்டிகளை கடலில் வீசினார்கள். இதுவே பொஸ்டன் தேனீர் விருந்து என்று குறிப்பிடப்படுகின்றது. இதுவே அமெரிக்க சுதந்திரப்போரின் ஆரம்பமாக அமைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. **பிடெல்பியா மாநாட்டு தீர்மானங்களைக் குறிப்பிடுக.**

பிரித்தானியா பின்பற்றிய அடக்குமுறையில் ஆத்திரமடைந்த அமெரிக்க குடியேற்றங்களைச் சார்ந்த 12 பிரதிநிதிகள் 1774ம் ஆண்டு (ஜோர்ஜியா தவிர்ந்த) பிடெல்பியாவில் ஒன்று கூடினர். இதுவே பிடெல்பியா மாநாடு எனப்பட்டது.

**தீர்மானங்கள்**

- ➤. அமெரிக்க குடியேற்றங்கள் தொடர்பாக சட்டங்களை அமுல் செய்யவோ, வரி அறவிடவோ பிரிததானிய பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை எனத் தீர்மானம் செய்யப்பட்டது.
- ➤. பிரித்தானியப் பொருட்களை பகிஷ்கரிக்க முடிவெடுக்கப்பட்டது.
- ➤. பாதுகாப்பின் பொருட்டு குடியேற்ற வாசிகள் ஆயுதம் தரிக்க வேண்டும் எனவும் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.
- ➤. குடியேற்ற வீரர்களின் படையின் தலைவராக ஜோர்ஜ் வாஷிங்டன் நியமிக்கப்பட்டார்.

13. **அமெரிக்க சுதந்திரப்போராட்டத்தின் படிமுறைகளைத் தருக.**

- ➤. 1774ம் ஆண்டில் அமெரிக்கக் கண்டத்தின் முதலாவது பிடெல்பியா மாநாடு நிகழ்த்தப் பட்டமை.
- ➤. 1775ம் ஆண்டு இரண்டாவது அமெரிக்கக்கண்ட மாநாட்டில் நாணயம் அச்சிடல், போர் இராணுவம் அமைக்கத் தீர்மானித்தல்.
- ➤. 1776ல் குடியேற்றங்களில் ஒன்றிணைந்த பிரதிநிதிகள் சபையால் யூலை மாதம் 4ம் திகதி அமெரிக்க சுதந்திரம் பிரகடனம் வெளியிடப் -பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. **அமெரிக்க சுதந்திரப் போரில் பிரித்தானியாவுக்கு சார்பாக விளங்கிய காரணிகளைத் தருக.**

- ➢. பிரித்தானியப்படை பாரியளவிலானது.
- ➢. பிரித்தானியப்படை நன்கு பயிற்றப்பட்ட கட்டுப் பாடான படையாகும்.
- ➢. அமெரிக்கரிடம் கடற்படை இல்லாமையும், பிரித்தானியரிடம் உலகிலேயே மிகப் பெரிய கடற் படையாகக் காணப்பட்டமையும்.
- ➢. அமெரிக்காவில் பிரித்தானிய விசுவாசிகள் காணப்பட்டமையும், அமெரிக்கர்களின் இரகசி -யங்களை உளவறிந்தமையும்.

15. **அமெரிக்க சுதந்திரப் போரில் குடியேற்றவாசிகள் வெற்றி பெற்றமைக்கான காரணங்களைத் தருக.**

- ➢. அமெரிக்காவிற்கும், பிரித்தானியாவிற்கும் மிக நீண்ட இடைவெளி காணப்பட்டமை.
- ➢. ஜோர்ஜ் வாஷிங்டனின் தலைமைத்துவம். படைத்தளபதி மட்டுமல்லாது வீரர்களின் பசி, கோபம், வேதனை என்பனவற்றைச் சமாளிக்கக் கூடியவராகவும், தனது வேதனத்தை படை வீரர்களின் குடும்பத்திற்கு வழங்கியும் உதவினார்.
- ➢. ஆங்கிலேய இராணுவம் அமெரிக்கரின் புவியியல் அமைவிடம் பற்றிய விடயங்களை அறியாதிருந்தமை.
- ➢. 1778ல் பிரான்ஸ், 1779ல் ஸ்பானியா, ஒல்லாந்து ஆகிய நாடுகளும் பிரித்தானியாவுக்கு எதிராக குடியேற்றவாசிகளுக்கு உதவியது.
- ➢. குடியேற்றவாசிகள் கொரில்லாப் போரில் திறன் பெற்றிருந்தனர். இது ஆங்கிலேயப் படை வீரர்களுக்குச் சவாலாக அமைந்திருந்தமை.
- ➢. பிரித்தானியாவில் எட்மன்பேர்க், பொக்ஸ் முதலிய அரசியல் வாதிகள் பிரித்தானியரின் நடவடிக்கை -களைக் கண்டித்தமை.
- ➢. பிரித்தானியப் பேரரசின் பல பிரதேசங்களில் அரச விரோதப் போர்கள் ஆரம்பமாகியமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. இரஷ்யா, சுவீடன் போன்ற ஐரோப்பிய நாடுகள் பிரித்தானியாவுக்கு எதிராக நடுநிலை ஆதிக்க சபை ஒன்றை ஆரம்பித்தமை.
- ➢. தொடர்பாடல் குறைபாடுகள் மற்றும் அத்திலாந்திக் கடலைக் கடந்து பாரிய படையணியை அமெரிக்காவில் வைத்திருப்பது பிரித்தானியருக்குச் சுமையாக இருந்தமை.

16. அமெரிக்க சுதந்திரப் போரட்டத்தின் விளைவு -களைக் குறிப்பிடுக.

- ➢. "அனைத்து இனத்தவரும் சமமானவர்கள்" எனும் பதம் பிற்காலத்தில் உலகின் புரட்சிகளின் தலைப்பாக அமைந்துள்ளமை.
- ➢. ஐக்கிய அமெரிக்க நாடுகள் எனும் சுதந்திர அரசு உருவாகியமை.
- ➢. முழு மனித குலத்திற்கும் சுதந்திரத்தின் மேன்மையை எடுத்துக்காட்டிய சந்தர்ப்பமாக அமைந்தது.
- ➢. உலகின் முதலாவது எழுதப்பட்ட அரசியல் யாப்பு உருவானது.
- ➢. அடிப்படை மனித உரிமை பற்றிய உணர்வு உலகம் முழுவதும் ஏற்பட்டமை.
- ➢. பிரான்சியப் புரட்சிக்கு வழிகாட்டியாக அமைந்தது.
- ➢. அமெரிக்க சுதந்திரப் போராட்டம் ஏனைய உலக நாடுகளுக்கு உதாரணமாக அமைந்தது.

17. பிரான்சியப் புரட்சி என்றால் என்ன?

- ➢. 1789ம் ஆண்டு பிரான்சின் முடியாட்சிக்கு எதிராக அந்நாட்டு மக்கள் எழுச்சி பெற்று சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய எண்ணக் கருக்களை அடிப்படையாகக் கொண்டு முடியாட்சியைக் கவிழ்த்து புதிய ஆட்சியினை ஏற்படுத்தியமை.
- ➢. முடியாட்சி ஒழிக்கப்பட்டு பிரபுக்கள், திருச்சபை உரிமைகள் நீக்கப்பட்டு மனித உரிமைப் பிரகடனம் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. பிரான்சியப் புரட்சிக்கான அரசியல் காரணிகள் யாவை?

- ஆட்சியாளர்களின் சர்வதிகார ஆட்சி
  - பிரான்சை ஆட்சி செய்த பூர்பன் வம்சத்தைச் சேர்ந்த மன்னர்கள் அரச பதவியானது கடவுளால் கொடுக்கப்பட்டதெனக் கருதி தெய்வீக வழிக் கோட்பாட்டில் ஆட்சி செய்தமை.
  - சட்டம் நிர்வாகம், நீதி ஆகிய அனைத்து அதிகாரங்களும் அரசனிடமே குவிந்து காணப்பட்டது.
  - அதிகளவிலான அதிகாரங்களைக் கொண்டிருந்த 14ம் லூயி மன்னன் "நானே அரசு" எனும் கூற்றுக்கிணங்க ஆட்சி புரிந்தமை -யானது அக்கால மன்னர்களின சர்வதிகார ஆட்சிக்கு எடுத்துக் காட்டாகும்.
  - சர்வாதிகாரத்தின் அடையாளமாகப் பஸ்தீல் சிறைச்சாலை காணப்பட்டது. தனிப்பட்ட அரசியல் எதிரிகளை பழிவாங்க பஸ்தீல் சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டனர்.
- மன்னர்களின் ஆடம்பர வாழ்க்கை.
  - பாரிஸிலிருந்து 20 கிலோமீற்றர் தூரத்திலுள்ள வேர்செயில்ஸ் எனும் உல்லாச மாளிகையில் மன்னன் சுகபோக வாழ்க்கை நடாத்தி வந்தான். 14ம் லூயி மன்னனின் பின் 15ம், 16ம் லூயி மன்னர்களும் அம்மாளிகையிலேயே தமது காலத்தைக் கழித்தனா.
- பலவீனமான, திறமையற்ற ஆட்சி.
  - சிறப்பான சீர்திருத்தங்களை மேற்கொண்ட டே கொற், நெக்கர் போன்ற சிறந்த அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்தான்.
  - 15ம் லூயி மன்னன் கோழையாகவும், சோம்பேறியாகவும், ஒழுக்கமற்றவனாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கினான். இவன் காலத்தில் பல இந்தியக் குடியேற்றங்களும் கை நழுவிப் போனது.

- ✍. 16ம் லூயி மன்னன் ஆட்சி கொடுமையாகவும், ஊழல் நிறைந்ததாகவும் காணப்பட்டது.

➢. பாராளுமன்றம் நீண்ட காலமாகக் கூட்டப்படாமை.

- ✍. மக்கள் குறைகளைத் தீர்க்கும் ஸ்டேட் ஜெனரல் எனும் பிரான்சியப் பாராளுமன்றானது 175 ஆண்டுகளாகக் கூட்டப்படவில்லை.
- ✍. 16ம் லூயி மன்னரின் மனைவி மேரி ஆன்டொயினட்டு என்பவள் வெளிநாட்டைச் சேர்ந்தவள் அரசியலில் தலையிட்டமை.

**19. பிரான்சியப் புரட்சி இடம்பெற்றமைக்கான சமூகக் காரணிகளைத் தருக.**

➢. பிரபுக்கள், மதகுருமார்கள் அதிகளவு சலுகைகள் அதிகாரங்கள் அனுபவித்தமை.

- ✍. புரட்சியின் ஆரம்ப காலத்தில் மக்கள் தொகையினர் முப்பிரிவுகளாகக் காணப் பட்டனர். முதலாவது பிரிவில் குருமார்கள், இரண்டாது பிரிவினர் பிரபுக்களும், மூன்றாவது பிரிவில் விவசாயிகள் தொடக்கம் மத்திய வகுப்பினர் வரையும் காணப்பட்டனர்.
- ✍. மொத்தச் சனத்தொகையில் குறைந்தளவு வீதத்தினைக் கொண்ட முதலாவது பிரிவின் குருமார்கள் பலம் வாய்ந்தவர்களாகவும், சொத்துக்களுடன் கூடிய ஆடம்பர வாழ்வு வாழ்ந்து வந்தனர். அரசிடம் நன்கொடைகளைப் பெற்று வரி ஏதும் செலுத்தாது வாழ்ந்து வந்தனர்.
- ✍. இரண்டாவது பிரிவினரான பிரபுக்கள் நிலத்தில் பெரும்பகுதியைப் பெற்றிருந்தனர். யுத்தக் கடமைகளையும் மேற்கொண்டனர். விவசாயிகளின் நிலங்களிலிருந்து வரி அறவிடப்படும் உரிமை பெற்றிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. மூன்றாது பிரிவினரான விவசாயிகள் மக்கள் தொகையில் 92% ஆக இருந்தனர். இவர்கள், நேரடி வரிகள், சேவை வரிகள், நேரடி அற்ற வரிகளைச் செலுத்தினர்.
- ➢. மக்களின் வரிப்பணமானது ஆடம்பரமாக, உல்லாசமாக வாழ்வதற்குச் செலவழிக்கப்பட்டமை.
- ➢. மத்திய வகுப்பினர் தமது உரிமையை வேண்டி நின்றமை.
    - ✎. கல்வியால் உயர்ந்து, உழைப்புத்திறன் கொண்ட இவர்களுக்கு முக்கிய பதவிகள் கிடைக்கவில்லை. மாறாக கல்வியில் பின் தங்கியிருந்த பிரபுக்களுக்கு பதவிகள் சலுகைகள் என்பன வழங்கப்பட்டன.

**20. பிரான்சியப் புரட்சிக்கான பொருளாதாரக் காரணி -களைத் தருக.**

- ➢. வெளிநாட்டு யுத்தங்களால், பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்தனர். பிரித்தானிய, பிரான்ஸியருக்கான ஏழாண்டுப் போர், அமெரிக்க சுதந்திரப் போருக்கு பிரான்ஸ் உதவியமை போன்ற காரணங்களால் பிரான்சியப் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றது.
- ➢. அரசனதும், அரச குடும்பத்தினரதும் ஆடம்பரமான வாழ்க்கைக்கான அதிகமான செலவுகள் சூதாட்டம், கேளிக்கைகள் என்பனவற்றில் ஈடுபட்டு திறைசேரி காலியானமை.
- ➢. வினைத்திறன் அற்ற மோசமான வரி விதிப்பு.
    - ✎. மக்கள் தமது வருமானத்தின் 60%ஐ வரியாகச் செலுத்த வேண்டி இருந்தது. இவற்றுள் டெலி, கெபல், கெப்பிடேசன் வரிகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.
    - ✎. பிரான்சியப் பிரதேச ஆட்சிமுறை நிலவியதால் பிரதேச ரீதியில் வரி முறைச் சட்டங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டமை. உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத்திற்கும பொருளாதார அபிவிருத்திக்கும் இவ்வரிகள தடைக்கல்லாக அமைந்தன.

- ➢. வர்த்தக ஏகபோக உரிமைகள் அரசிடம் காணப் பட்டமை.
- ➢. அரச தலையீடில்லாப் பொருளாதார முறையை மக்கள் எதிர்பார்த்தனர். இதன் காரணமாக மத்திய வகுப்பினர் புரட்சிக்கு தலைமை தாங்கக் காரணமாகியது எனலாம்.

**21. பிரான்சியப் புரட்சிக்கான உடனடிக் காரணம் அல்லது பிரான்சியப் புரட்சி ஆரம்பித்த முறை -யினைத் தருக.**

- ➢. ஸ்டேட்ஜெனரல் கூட்டப்பட்டமை.
  - 175 ஆண்டுகளுக்கு பின் 1789ல் பிரான்சியப் பாராளுமன்றம் கூட்டப்பட்ட போது பொது மக்கள் குழு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
- ➢. டெனிஸ் மைதானச் சத்தியப்பிரமாணம் செய்யப் பட்டமை.

  பொது மக்களை உள்ளடக்கிய குழுவிற்கு இடமளிக்காததால் மத்திய வகுப்பைச் சேர்ந்த "மீராபோ" என்பவர், பாராளுமன்றத்திற்கு அருகிலிருந்த டெனிஸ்மைதானத்தில் ஒன்று கூடி புதிய அரசியலமைப்பைத் தயாரிக்காது வெளியேறப் போவதில்லை என உறுதியளித்தனர். இதுவே டெனிஸ் மைதான உறுதி மொழி என வரலாற்றில் இடம்பெற்றது.
- ➢. பஸ்தீல் சிறைச்சாலை உடைக்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. பிரான்சியப் புரட்சிக்கான வெளிவாரிக் காரணங் -களைத் தருக.

➢. தத்துவ ஞானிகளின் கருத்துக்களால் ஏற்பட்ட செல்வாக்கு பிரான்சியப் புரட்சிக்கு வழிவகுத்தது எனலாம். ரூசோ, மொண்டெஸ் கியூ, வோல் டேயர் ஆகிய தத்தவ ஞானிகள் வித்திட்டனர்.

- **மொண்டஸ் கியூ**

  1748ல் இவர் வெளியிட்ட "சட்டத்தின் சாரம்" என்ற நூலில் ஒருவரிடம் அதிகாரமானது குவிந்திருப்பது பொருத்தமற்றது எனவும் இது சர்வாதிகாரத்திற்கு வழி கோலும் என்றார். சட்டம், நிர்வாகம், நீதி ஆகிய மூன்று துறைகளுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் படவேண்டும் என்று வலு வேறாக்கல் கொள்கையை முன் வைத்தார்.

- **வோல்டேயர்**

  முடியாட்சியினதும், திருச்சபையினதும் சர்வாதிகார ஆட்சியை விமர்சித்தார். சுதந்திரமாகக் கருத்தை வெளியிடும் உரிமையைப் பற்றிய கருத்துக்களை வெளியிட்டார்.

- **ரூசோ**

  "சமூக ஒப்பந்தம்" எனும் நூலின் மூலமாக மக்களது சுதந்திரம் தொடர்பான எண்ணக் கருவை முன் வைத்தார். மன்னனுடைய அதிகாரங்கள் கடவுளால் கிடைக்கின்றன என்ற கருத்தை முற்றாக நிராகரித்தார்.

  அரசானது மக்களது எண்ணங்கள், தேவைகளை நிறைவேற்ற வேண்டுமெனவும், மேலும் மன்னனைப் பதவி நீக்கும் உரிமை மக்களிடமுண்டு எனவும் குறிப்பிட்டார். இவரது கருத்து மக்களின் சமத்துவம், மக்கள் ஆதிக்கம் என்ற எண்ணக்கருவிற்கு அடிப்படையிலானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. அமெரிக்கா சுதந்திரப் போரில் ஈடுபட்டமை.

- அமெரிக்காவிற்கு ஆதரவாக பண உதவி, படை உதவி வழங்கியதால் பிரான்சிற்கு அதிகளவு செலவு ஏற்பட்டமை.
- அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தில் அமெரிக்கா வெற்றியீட்டியது போன்று மன்னனின் சர்வதிகாரப் போக்குக்கு எதிராகப் போராட வேண்டிய மனோநிலையை அமெரிக்க சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய பிரெஞ்சு தலைவன் "லாபயட்" ஏற்படுத்தியமை.

**23. பிரான்சியப் புரட்சியின் விளைவுகளாவன யாவை? (முக்கியத்துவங்கள்)**

➢. 1791ம் ஆண்டு மனித அடிப்படை தொடர்பான பிரகடனம் உலகின் பல நாடுகளிலும் வெளியிடப் -பட்டது. இதன் பிரகாரம் அரசியல் யாப்பு தயாரிக்கப்ப்ட்டது.

➢. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் புதிய எண்ணக்கருத்துக்கள் தோற்றம் பெற்றன.

➢. பூர்பன் வம்சத்தினர் முடியாட்சி வீழ்சியுற்றது.

➢. பிரான்சில் அரசியல், பொருளாதார சமூக மாற்றங்கள் ஏற்பட்டன.

➢. விவசாயத் தொழில் புரிவோருக்கு சலுகைகள் கிடைக்கப் பெற்றன. நில உடமையுள்ள சிறு விவசாயம், வர்த்தகம் என்பன உருவானது.

➢. மக்களின் இறைமைத் தன்மை முக்கியத்துவம் பெற்றது. ஆட்சி செய்யும் உரிமையும், பொறுப்பும் மக்களுக்கே உரித்தானது என்ற உண்மைத் தன்மை வெளிப்பட்டது.

➢. உலகம் முழுவதும் சமூக அநீதியினால் துன்புற்ற மக்களுக்கு பிரான்சியப் புரட்சி ஆறுதல் அளித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. மனிதாபிமானக் கருத்துக்கள் தோற்றம் பெற்றன. சிறைச்சாலை சீர்திருத்தங்கள், சித்திரவதை ஒழிப்பு போன்ற கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.
- ➢. கல்வி முறை சார்பற்றதாக அமைந்தது. திறமைக்குரிய இடம் கிடைத்தது.
- ➢. மத்திய வகுப்பினர் அரசியல் அதிகாரம் பெற்றனர்.
- ➢. சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் எனும் கொள்கை வலுப்பெற்றது.
- ➢. பிரான்சில் உறுதியற்ற அரசியல் நிலை தோன்றியது. 1789 - 1799 இந்நிலை காணப்பட்டது. நெப்போலியன் பொனபாட் எனும் சிறந்த மன்னன் உருவாகி புதிய அரசியல் நிலைமை தோற்றுவிக்கப்பட்டது.

**24. இரஷ்யப் பரட்சி என்றால் என்ன?**

- ➢. சார் மன்னர்களின் அரசியல் போலித்தனத்துக்கும், குருட்டு நம்பிக்கைக்கும் சமாதி கட்டிய புரட்சியே இரஷ்யப் புரட்சியாகும்.
- ➢. 1917ம் ஆண்டு இரஷ்யாவின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகப் பாட்டாளி மக்களால் உணவு, நிலம், சமாதானம் எனும் கோஷங்களை எழுப்பி நடாத்தப்பட்ட புரட்சியாகும்.

**25. 1905 இரஷ்யப் புரட்சிக்கான காரணங்களைத் தருக.**

- ➢. கைத்தொழில் நெருக்கடி ஏற்பட்டமை
  - ☙. ரஷ்யாவில் 3000 தொழிற்சாலைகள் மூடப்பட்டன. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். விவசாயிகள் நிலச்சுவாந்தர்களைக் கொள்ளையிட்டனர்.
- ➢. 1905ல் ஜப்பானுடனான யுத்தத்தில் தோல்வியுற்றமை.
  - ☙. ரஷ்யக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டமையால், ஆவேசமுற்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வணபிதா காபொன் தலைமையில் அரசியல் உரிமைகள் கோரிச் சென்ற ஊர்வலம் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டமை.
- சார் 2ம் நிக்கலஸ் 1905 ஒக்டோபர் பிரகடனம் மூலம் பேச்சு சுதந்திரம், டூமா பாராளுமன்றத்தை அமைக்கும் சுதந்திரத்தை வழங்கினார்.

**26. 1917 மார்ச் புரட்சிக்குரிய காரணங்களைத் தருக.**

- 1917 மார்ச் மாதம் புடைவைத் தொழிற்சாலை ஒன்றில் தொடர்ந்து மூன்று நாட்கள் வேலை நிறுத்தப் போராட்டம் பாரிய போராட்டமாக மாறி புரட்சிக்குக் காரணமாகியது.
- 1914ல் விவசாயிகள் இரஷ்யா சார்பில் போரிட அழைக்கப்பட்டதால் விவசாயம் வீழ்ச்சியுற்று நாடு முழுவதும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது.
- பொருட்களின் விலைகள் பன்மடங்காக அதிகரிக்கப் பட்டதால் இராணுவத்தினரும் மக்களும் கிளர்சசி செய்தனர்.
- பாண் விலை அதிகரிப்பானது மக்களை மிகவும் பாதிப்படையச் செய்தது. வீதி முழுவதும் மக்கள் பாண் கேட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். சார் மன்னன் படையினரும் இணைந்து கொண்டனர்.
- பீட்டர்ஸ் போர்க்கில் சார் மன்னனின் ஆட்சிக்கு எதிராக ஆயுதம் தாங்கிய கலவரம் நிகழ்ந்தது.
- இதனைக் கட்டுப்படுத்த முடியாததால் மன்னன் 2ம் நிக்கலஸ் 1917 மார்ச் மாதம் 15ம் திகதி பதவி துறந்தான்.
- இதன் காரணமாக கெரன்ஸ்கி எனும் தலைவரது கிளர்ச்சி அணியிடம் ஆட்சி கை மாறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**27. கெரன்ஸ்கி தலைமையிலான ஆட்சிப் போக்கினைக் குறிப்பிடுக.**

- ➢. நாட்டின் அத்தியாவசிய தேவைகளுக்கான தீர்வு காணமுடியவில்லை.
- ➢. விவசாயிகளுக்கு நிலம், படைவீரர்களுக்கு அமைதி, நாட்டில் அனைவருக்கும் உணவு என்பவையே அத்தியாவசிய தேவையாகக் காணப்பட்டது.
- ➢. விவசாயிகள் நிலங்களை எரித்து, கொள்ளை -யடித்து, உடமைகளை அழித்து பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டனர்.
- ➢. புதிய அரசின் ஆட்சியாளர்கள் செல்வந்தருடன் இணைந்து செயற்பட்டமையால் ஏழைகளின் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகியது.
- ➢. அரசாங்கம் யுத்த செயற்பாடுகளை முன்னெடுத் -தமையால் படை வீரர்களின் எதிர்பார்ப்பும் நிறைவேறவில்லை.
- ➢. கெரன்ஸ்கி கொண்டு வந்த சீர்த்திருத்தங்களால் சகஜ நிலையை ஏற்படுத்த முடியாது போனது.
- ➢. இவ்வாட்சியில் மக்களின் எதிர்ப்பு அதிகரித்துச் சென்றது.

**28. 1917ஆம் ஆண்டு ஒக்டோபர் இரஷ்யப் புரட்சியின் போது உருவான அமைப்புக்களைக் குறிப்பிடுக.**

- ➢. **மெல்ஷவிக் கட்சி :**
  பல்வேறு சீர்திருத்தங்களின் மூலம் மக்களின் பிரச்சனைகளை தீர்க்க முடியும் என்று கருதிய பிரிவினர் ஆவர்.

- ➢. **பொல்ஷவிக் கட்சி :**
  பொதுவுடமைக் கருத்துக்களைக் கொண்ட சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் நோக்கமாகக் கொண்டோர் பொல்ஷவிக் எனப்பட்டனர். பொல்ஷவிக் வாதிகளில் முக்கிய தலைவர்களாக வி.ஐ. லெனின், ட்ரொஸ்கி ஆகியோர் விளங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. 1917ம் ஆண்டு இரஷ்யப் புரட்சிக்கான காரணங்களை சுருக்கமாகத் தருக.

- ➢. உணவுத்தட்டுப்பாடு
- ➢. விவசாயிகளின் நிலக் கோரிக்கை.
- ➢. அரசாங்க ஊழல்கள்.
- ➢. படை வீரர்கள் கலகம்.
- ➢. முதலாம் உலக யுத்தத் தோல்விகள்.
- ➢. லெனினின் இரகசிய வருகை.
- ➢. லெனினின் தலைமைத்துவம், திட்டமிடல் பிரசாரம்.

30. 1917ம் அண்டு ஒக்டோபர் புரட்சி வெற்றி பெற்றமைக்கான காரணங்கள் யாவை?

- ➢. லெனினும், ட்ரொஸ்கியும் தலைமை தாங்கியமை.
- ➢. அமைதி, நிலம், பாண் என்பன புரட்சியின் சுலோகமாக விளங்கியமை. படையினருக்கு அமைதி, (சமாதானம்) விவசாயிகளுக்கு நிலம், மக்களுக்கு பாண் (உணவு).
- ➢. லெனின் இரஷ்யாவில் உருவாகும் சோஷலிசப் புரட்சி ஐரோப்பா முழுவதும் பரவும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியமை.
- ➢. பொல்ஷவிக் கட்சியினர் பீட்டோ கிராட்டை முற்றுகையிட்டனர். வின்ரர் மாளிகையைச் சூழ்ந்து பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.
- ➢. சோவியத் தேசிய காங்கிரஸ் லெனின் தலைமையில் கூடி பொதுமக்கள் ஆணையாளர் சபைக்கு அதிகாரமளித்தது. லெனின் அதனது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

31. 1917 இரஷ்ய புரட்சியின் விளைவுகளைத் தருக.

- ➢. லெனினின் தலைமையிலான பொல்ஷவிக் கட்சியினர் அரசை உருவாக்கினர்.
- ➢. பொதுவுடமைவாதக் கொள்கைகள் செயல் ரீதியாக செயற்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. லெனின் தலைமையிலான புதிய அரசு ஜேர்மனி -யுடனான யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தியது.
- ➢. நிலமானிய முறையின் கீழிருந்த தனிப்பட்ட நிலவுடமையை நீக்கியது.
- ➢. விவசாயிகளுக்கு பாரிய விவசாயப் பண்ணை -களை உருவாக்க முடிந்தது.
- ➢. இரஷ்யாவின் வங்கி, போக்குவரத்து தொழிற்சாலைகள் என்பன அரசுடமையாக்கப் பட்டன.
- ➢. சார் மன்னர்களின் ஆட்சி ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் பிதிநிதிகள் கொண்ட சோவியத் சபைகள் அமைக்கப்பட்டன.
- ➢. இரஷ்யப் புரட்சியின் பின் இரஷ்யா "சோவியத் சமவுடமைக் குடியரசு" எனும் பெயரில் சமவுடமைக் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட நாடாக மாறியது.

**32. சமவுடமைக் கொள்கை என்றால் என்ன?**

- ➢. சமுதாயத்தின் செல்வம் தொடர்பான பொது உரிமை அனைத்துப் பிரசைகளுக்கும் உரித்தாகும்.
- ➢. தனது திறமையை மேம்படச் செய்யும் பொருட்டு சமமான சந்தர்ப்பம் வழங்கல்.
- ➢. உற்பத்தியின் பயனை அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளித்தல்.
- ➢. தனிநபர் சேவையை விட சமூக முன்னேற்றத் - -திற்கும, தேவைகளுக்கும் முன்னுரிமை வழங்கல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 08

## உலக மகா யுத்தங்களும் இணக்கப்பாடுகளும்.

**01. முதலாம் உலக மகாயுத்தம் என்பதன் பொதுவான கருத்தை எழுதுக.**

- 1914 - 1918 காலப்பகுதிகளில் நிகழ்ந்தது.
- ஐரோப்பாக் கண்டத்தில் முதன் முதலில் இரு நாடுகளுக்கிடையில் ஆரம்பித்த சிறு பிரச்சினையே உலக மகாயுத்தமாக மாறியது.
- ஆறு கண்டங்களைச் சேர்ந்த 30 நாடுகளில் இப்போர் நிகழ்ந்தது.
- ஐரோப்பிய நாடுகளில் இடம்பெற்ற யுத்தம், அவற்றின் குடியேற்ற நாடுகளிலும் நிகழ்ந்தது.
- ஆரம்பத்தில் உலக மகாயுத்தம் என அழைக்கப் பட்டது. பின்னர் 2ம் உலக மகாயுத்தம் இடம் பெற்றதனால் இந்த யுத்தம் 1ம் உலக மகாயுத்தம் என அழைக்கப்பட்டது.
- 2ம் உலக மகாயுத்தத்திற்கு 1ம் உலக மகா யுத்தமும் காரணமாகும்.

**02. 1ம் உலக மகாயுத்தத்திற்கான காரணங்களைத் தந்து விளக்குக.**

- ஜேர்மனிக்கும், பிரான்சுக்கும் இடையிலான பகைமை.
  - பிஸ்மார்க் ஏறத்தாழ 350க்கு மேற்பட்ட சிற்றரசுகளை ஒன்றிணைத்து ஜேர்மனி எனும் நாடொன்றை உருவாக்க முனைந்தான்.
  - 1870ம் ஆண்டளவில் பிரான்சிற்கு சொந்தமான அல்சேஸ்லொரைன் எனும் நிலக்கரிச் சுரங்கங்களைக் கொண்ட வளம் மிக்க பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தான் இழந்த பிரதேசங்களை மீளப்பெற பிரான்ஸ் ஜேர்மனியுடன் முரண்பட்டு நின்றது.

➢. பிரான்சை ஐரோப்பியாவில் தனிமைப்படுத்தும் பிஸ்மார்க்கின் கொள்கை.

- ஜேர்மனிக்கு எதிராக பிரான்சுடன் ஏனைய நாடுகள் இணைவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தன.
- 1873ல் இரஷ்யா, ஆஸ்திரியா, ஜேர்மனி, ஆகிய மூன்று நாடுகளையும் இணைத்து "மூன்று பேரரசுகளின் சங்கம்" ஒன்றை உருவாக்கினான்.
- 1882ல் ஆஸ்திரியா, ஜேர்மன், இத்தாலி என்பவற்றை இணைத்து "மத்திய வல்லரசுகளின் நட்புக் கூட்டு" என்னும் அமைப்பை உருவாக்கினான.
- முதலாம் உலக யுத்தத்தில் ஐரோப்பா இரு அணிகளாகப் பிரிவதற்கு பிஸ்மார்க்கின் இவ்வகையான உடன்படிக்கைகளே காரணமாயிற்று.

➢. ஐரோப்பா இரு அணிகளாகப் பிரிவடைந்தமை.

- பிஸ்மார்க் பிரான்சைத் தனிமைப்படுத்தும் இராஜதந்திரக் கொள்கைகளைக் கடைப் பிடிக்க, பிரான்சும், ஜேர்மனிக்கு எதிரான சக்தியை உருவாக்க நாடுகளுடன் கூட்டணியை உருவாக்கியது. இவ்வாறாக ஐரோப்பாவில் முரண்பாடான இரு அணிகள் உருவாகின.
- 1882ல் ஜேமனி, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகள் இணைந்து அணியை உருவாக்கியது.
- 1907ல் பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் இணைந்து முக்கூட்டுஅணி உருவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✎. எனவே ஜேர்மனி தலைமையில் ஆஸ்திரியா, ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடுகள் மத்திய ஐரோப்பிய வல்லரசு நாடுகள் எனவும், (அச்சு நாடுகள்) பிரான்ஸ் தலைமையில் பிரித்தானியா, இரஷ்யா மற்றும் அமெரிக்கா முதலான நாடுகள் நட்பு நாடுகள் எனவும் இரு அணிகளாகப் பிரிந்தன.

➤. குடியேற்ற நாடுகளைப் பெறுவதில் ஏற்பட்ட போட்டி.

- ✎. ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் குடியேற்றங்களை அமைப்பதில் போட்டி ஏற்பட்டன.
- ✎. ஐரோப்பிய நாடுகளில் பிரித்தானியர்களுக்கே அதிக குடியேற்றங்கள் இருந்தன.
- ✎. மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதிலும், முடிவுப் பொருட்களைச் சந்தைப்படுத்தவும் குடியேற்ற நாடுகள் தேவையாகவிருந்தன.
- ✎. ஐக்கிய ஜேர்மனி உருவான பின் கைத்தொழில் வளர்ச்சி கண்டதன் விளைவாக தனது முடிவுப் பொருட்களைச் சந்தைப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இவ்வாறான வர்த்தக சந்தைகளை ஜேர்மனி தேடியமை குறிப்பாக பிரித்தானியாவுக்கு அச்சுறுத்தலாகியது.

➤. ஜேர்மனியப் பேரரசன் 2ம் கைசர் வில்லியத்தின் செயற்பாடுகள்.

- ✎. ஜேர்மனின் ஐக்கியத்துக்காகப் பாடுபட்ட பிஸ்மார்க் பலமானதொரு ஜேர்மனியை உருவாக்குவதில் நிறைவு கண்டான். ஜேர்மனிக்கு வெளியே குடியேற்றங்கள் உருவாவதை அவன் விரும்பவில்லை.
- ✎. 1887ல் ஆட்சிக்கு வந்த பேரரசர் கைசர் வில்லியம் பிஸ்மார்க்கின் நோக்கங்களுக்கு மாறாக குடியேற்றங்கள் உருவாக்க விரும்பினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பேர்ளின் - பக்தாத் புகையிரதப் பாதையை அமைப்பதில் துருக்கிக்கு உதவினான்.
- கடற்படைப் பலத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தான்.
- பிரித்தானியாவின் கப்பல்கள் போன்று "டொரநோட்." கப்பல்களை அமைத்தான்.
- கீல் கால்வாயை ஆழமாக்கினான்.
- இத்தகைய வெளிநாட்டுக் கொள்கையானது ஐரோப்பாவில் யுத்தச் சூழலை உருவாக்கியது.

➢. ஆயுதப் போட்டிகளும், தேசிய வாதமும் வளர்ச்சியடைந்தமை.

- 19ம் நூற்றாண்டின் காலப்பகுதியில் ஐரோப்பிய நாடுகள் தமது தேசிய பலத்தை விருத்தி செய்வதற்கு ஆயுத பலத்தில் நம்பிக்கை கொண்டன.

  (ஜேர்மன், பித்தானியா, பிரான்ஸ், இரஷ்யா)

- ''ஆயுதபலத்தால் 5 வருடங்களில் பெற்றவைகளைப் பாதுகாக்க மேலும் 50 வருடங்கள் ஆயுதம் தரித்த நிலையில் இருக்க வேண்டிவரும் என ஜேர்மனிய படைத்தளபதி "வொன் வோல் கே" யின் கூற்றிலிருந்து ஆயுத பலம் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கை தெளிவாகின்றது.
- தேசிய வாதம் எழுச்சி பெற்றது. தேசிய வாதம் என்பது நமது நாட்டின் மீது பற்றுக் கொள்வதும், ஏனைய நாடுகளை ஒழிப்பதுமாகும்.
- இந்நிலையானது இனங்களுக்கிடையே மோதல்களை ஏற்படுத்துவதற்கான பின்புலத்தை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. சரஜிவோ சம்பவம். (ஆஸ்திரிய முடிக்குரிய இளவரசனின் கொலை)
  - ✍. உலக மகாயுத்ததிற்கான உடனடிக் காரணமாக இச்சம்பவமே குறிப்பிடப்படுகின்றது.
  - ✍. இளவரசர் பிரான்ஸிஸ் பேர்டினனும், அவனது மனைவியும் பொஸ்னியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட வேளையில் சரஜிவோ நகரில் வைத்து கொலை செய்யப் பட்டனர். (1914 யூன் 28ம் திகதி சேபியர் இருவரினால் மேற்கொள்ளப்பட்டது.)
  - ✍. இதற்காக ஆஸ்திரியா தனக்கான சூழ்ச்சி என நிபந்தனைகள் பல விதித்து சேர்பியாவிடம் நட்ட ஈடு கோரியது. இதனை சேர்பியா நிராகரிக்க, 1914 யூலை 20ம் திகதி ஆஸ்திரியா சேர்பியாவுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்தது.

**03. முதலாம் உலகப் போரில் ஈடுபட்ட நாடுகளைக் குறிப்பிடுக.**

**நட்பு அணி நாடுகள் :**
பிரான்ஸ், பிரித்தானியா, இரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா

**அச்சு நாடுகள் (மத்திய ஐரோப்பிய வல்லரசு) :**
ஜேர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, துருக்கி, பல்கேரியா, ஹங்கேரி

**04. 1914ல் முதலாவது உலக யுத்தம் ஆரம்பித்த வேளையில் ஐக்கிய அமெரிக்கா பங்கு கொள்ளா -மைக்குரிய காரணங்ளைத் தருக.**

- ➢. இக்கால கட்டத்தில் ஐக்கிய அமெரிக்கா நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்தமை.
- ➢. அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சன் "அமெரிக்கா நிலையிலும், செயலிலும் நடுநிலைமையைக் கடைப்பிடிக்கும்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. அமெரிக்கர்களில் பெரும்பான்மையினர் யுத்தத்தை விரும்பவில்லை. இது ஐரோப்பிய யுத்தம் எனவும், அமெரிக்கா பங்கு பெற அவசியமில்லை எனவும் கூறியமை.

**05. 1917ல் அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டமைக்கான காரணத்தைக் கூறுக.**

- ➢. கடற்படைப் போட்டியில் ஈடுபட்ட ஜேர்மனி நீர்மூழ்கிக் கப்பல் அமெரிக்கர்களின் லூசித்தானியா எனும் பயணிகள் கப்பல்களை மூழ்கடிக்கச் செய்தது. இதில் 1098 பேர் மூழ்கடிக்கப்பட்டனர். (1915 மே 7ம் திகதி)
- ➢. இச்சம்பவம் காரணமாக ஐக்கிய அமெரிக்கா ஜேர்மனிக்கு எதிராக நட்பு நாடுகளுடன் இணைந்து கொண்டது.
- ➢. 1916ல் நடைபெற்ற தேர்தலில் யுத்தத்திற்கு ஆதரவான குடியரசுவாதிகள் வெற்றியீட்டியமை.
- ➢. அமெரிக்காவில் ஜேர்மனியின் உளவுச்சதிகள் அம்பலமானமை.

**06. முதலாம் உலக யுத்தத்தில் ஐரோப்பிய மத்திய வல்லரசு அணி / ஜேர்மனி தோல்வி அடைந்த -மைக்கான காரணங்களைத் தருக.**

- ➢. ஐக்கிய அமெரிக்கா நட்பு நாடுகள் அணியில் சேர்ந்து கொண்டமை.
  - ➢. படைபலம், ஆயுதபலம், பண பலம் கொண்ட அமெரிக்கா இணைந்து கொண்டதால் எதிரணிக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது.
  - ➢. ஐக்கிய அமெரிக்கா ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என அச்சு நாடுகளுக்கு எதிரான உலக அபிப்பிராயத்தை திரட்டியமை.
  - ➢. ஜேர்மனியைச் சார்ந்த நாட்டுப் படையினரின் மனோபலம் குன்றியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. ஜேர்மனியானது ஏறத்தாழ 27 நாடுகளுடன் யுத்தம் செய்ய வேண்டி இருந்தது.

➢. இத்தாலி நட்பு அணியின் பக்கம் சார்ந்தமை.

- ஜேர்மனியைச் சார்ந்திருந்த இத்தாலி ஓர் ஆண்டு கழித்து நட்பு அணியின் பக்கம் சார்ந்ததால் ஜேர்மனியின் போர் இரகசியங்கள் எதிராளிகளுக்கு தெரிய வந்தமை.

➢. நட்பு அணியினரின் இராணுவ பலம்.

- பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் பலம், ஐக்கிய அமெரிக்கர்களின் பணம், படை பலம், பிரித்தானிய கடற்படை வலிமை என்பன ஒன்று சேர்ந்து கொண்டமை.

➢. ஜேர்மனி எதிர்நோக்கிய உள்நாட்டுப் பிரச்சினைகள்

- ஜேர்மனியின் துறைமுகங்கள், கப்பல் பாதைகள் என்பனவற்றை நட்பு அணி நாடுகள் முற்றுகையிட்டன. இதனால் உணவு நெருக்கடி ஏற்பட்டது.
- இதனால் உள்நாட்டுக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. கலவரங்கள் இடம் பெற்றன.
- ஜேர்மனியின் கடற்படையினர் கிளர்ச்சி செய்து பேரரசனை நீக்குமாறு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

07. 1ம் உலக யுத்தத்தின் விளைவுகள் யாவை?

➢. யுத்தத்தில் ஐரோப்பிய மத்திய வல்லரசு நாடுகள் (அச்சு நாடுகள்) தோல்வியைத் தழுவ நட்பு நாடுகள் வெற்றி கண்டன.

➢. யுத்த ஆயுத பாவனையால் பெரும் தொகை மனித உயிர்களும், சொத்துக்களும் அழிந்தன.

- 10 இலட்சம் மக்கள் ஊனமுற்றனர்.
- 10 மில்லியனுக்கும் மேற்பட்ட படை வீரர்கள் - மரணமடைந்தனர்.
- தொழிற்சாலைகளும் பட்டினக் குடியேற்றங்கள் பலவும் அழிவுற்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஐக்கிய அமெரிக்கா உலக வல்லரசாக மாறும் நிலை உருவானது. ஆயுத விற்பனை, உணவு விற்பனை மூலம் பெருந்தொகையான பணத்தைச் சம்பாதித்துக் கொண்டது.

- புதிய அரசுகள் தோற்றம் பெற்றமை. (பின்லாந்து, போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, ஹங்கேரி, யூகோஸ்லாவியா, ருமேனியா)

- வேர் செயில்ஸ் உடன்படிக்கை மூலம் ஜேர்மனிக்கு கடும் தண்டனை வழங்கப்பட்டதுடன், பலவந்தமான உடன்படிக்கையும் திணிக்கப்பட்டது.

- ஐரோப்பாவில் நிலவிய சர்வாதிகார ஆட்சி ஒழிக்கப்பட்டது. (ஜேர்மன் பேரரசு, ஆஸ்திரியா, ஹங்கேரியப் பேரரசு, துருக்கிய பேரரசு)

- பழைய நகரங்கள் சிலவற்றின் பெயர் மாற்றங்கள் நிகழ்ந்தன. மொசப்பத்தேமியா - ஈராக், கொன்ஸ்தாந்திநோபிள் - இஸ்தான்புல்.

- எதிர்காலத்தில் இத்தகையதான பேரழிவிலிருந்து உலகைப் பாதுகாக்கும் பொருட்டு சர்வதேச சங்கம் உருவானது. உலக சமாதானம், ஜனநாயகம் என்பனவற்றைப் பாதுகாப்பதே இதன் குறிக்கோளாக விளங்கியது.

**08. வேர்செயில்ஸ் உடன்படிக்கை மூலம் ஜேர்மனிக்கு விதிக்கப்பட்ட தண்டனைகளைத் தருக.**

- வெற்றி பெற்ற நாடுகளுக்கு பெருந்தொகையான பணத்தை நட்டவீடாகக் கொடுக்க வேண்டிய நிலை ஜேர்மனிக்கு ஏற்பட்டது.

- யுத்த நஷ்ட ஈடாக 33 மில்லியன் டொலர் பணத்தைச் செலுத்த வேண்டுமென தண்டனை விதிக்கப்பட்டது.

- பிரான்சிடமிருந்து ஜேர்மனி கைப்பற்றிய அல்சேஸ், லொறைன் பிரதேசங்கள் பிரான்சிடம் திருப்பிக் கையளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. இராணுவத்தை வைத்துக் கொள்ளல், மற்றும் போர்த் தளபாடங்களைத் தயாரிக்கும் விதத்தில் ஜேர்மனிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

ஃ. இராணுவப்படைவீரர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும்.

ஃ. கட்டாய இராணுவ சேவை நிறுத்தப்பட வேண்டும்.

ஃ. யுத்தக் கப்பல்கள், நீர் மூழ்கிக் கப்பல்கள் தயாரிப்பு முற்றாக தடை செய்யப்பட்டது.

➢. யுபென், மல்டெட் பிரதேசங்கள் பெல்ஜியத்துக்கு வழங்கப்பட்டது.

➢. செல்லி பிரதேசம் டென்மார்க்குக்கும், மேலும், சில பிரதேசங்கள் பெல்ஜியத்துக்கும் கொடுக்க வேண்டி இருந்தது.

➢. ஆஸ்திரியா ஜேர்மனியுடன் இணைந்து தடை செய்யப்பட்டது.

➢. ஜேர்மனியில் டன்சிக் துறைமுகம் சுதந்திர துறைமுகமாக்கப்பட்டது.

➢. ஜேர்மனியின் வசமிருந்த அனைத்து குடியேற்ற நாடுகளையும் நட்பு நாடுகள் பங்கிட்டுக் கொண்டன.

**09. வேர்செயில்ஸ் மாநாட்டில் கலந்து கொண்ட முக்கிய நான்கு தலைவர்ளையும், நாடுகளையும் தருக.**

➢. பிரித்தானியப் பிரதமர் - லொயிட் ஜோர்ஜ்

➢. இத்தாலிய பிரதமர் - விக்டோரியா ஓர்லான்டோ

➢. பிரான்ஸ் பிரதமர் - ஜோர்ஜஸ் கிளமன்றோ

➢. ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி - வூட்ரோ வில்சன்

(இறுதியில் இத்தாலி விலகிக் கொள்ள ஏனைய மூன்று தலைவர்களுமே முடிவுகளை எடுத்தனர்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டதற்கான நோக்கங்கள யாவை?

➢. நாடுகளுக்கிடையே தோன்றும் கருத்து வேறுபாடுகளை, பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளுதல்.

➢. எதிர்காலத்தில் யுத்தம் ஒன்று மீண்டும் ஏற்படுவதைத் தவிர்த்தல்.

➢. சர்வதேச புரிந்துணர்வையும், ஒத்துழைப்பையும் கட்டியெழுப்புதல்.

➢. சிறிய நாடுகளின் சுதந்திரம், சுயாதீனம் என்பன -வற்றைப் பாதுகாத்தல்

➢. மனிதகுல ஒற்றுமை மூலம் உலக சமாதானத்தைப் பேணுதல்.

குறிப்பு :
1919ல் நடாத்தப்பட்ட பரிஸ் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் சமாதானம் பாதுகாப்பு என்பனவற்றை நிலைநிறுத்த சர்வதேச அமைப்பொன்று அவசியம் என உணரப்பட்டது. ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சனின் 14 அம்சத் திட்டத்தின் அடிப்படையில 1920ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் திகதி சர்வதேச சங்கம் உருவானது. ஆரம்பத்தில் 42 நாடுகள் அங்கம் வகித்தன.

11. சர்வதேச சங்கம் சமாதானத்திற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

➢. சங்கம் உருவாகிய 20 வருட காலம் போர் நிகழாமல் சமாதானத்தைப் பேணியது.

 - 1921ல் சுவீடனுக்கும், பின்லாந்துக்கும் இடையிலான அலந்தீவுப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தது.
 - 1925ல் கிரீசுக்கும், பல்கேரியாவுக்கும் இடையே ஏற்பட்ட எல்லை முரண்பாட்டைத் தீர்த்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❧. 1926ல் ஈராக் - துருக்கி ஆகிய நாடு நாடுகளுக்கிடையேயான மொசூல் எண்ணெய் வயலுக்காக ஏற்பட்ட பிரச்சனையை சமரசம் செய்து வைத்தது.

➢. அரசியல் துறையல்லாது சமூக பொருளாதாரத் துறைகளிலும் சேவைகள் பல ஆற்றியது.

- ❧. யுத்ததினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்க நடவடிக்கை எடுத்தது.
- ❧. நிதி நிலைமை மோசமடைந்திருந்த கிரீஸ், ஹங்கேரி, ஆஸ்திரியாவுக்கு பொருளாதார உதவிகளை வழங்கியது.

➢. சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டது.

- ❧. போரின் பின்னரான தொற்று நோய்களை அழிக்கவும், சட்ட விரோதமான அடிமை வியாபாரத்தையும், போதைப் பொருள் வர்த்தகத்தையும், ஒழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

➢. முதலாம் உலக யுத்தத்தின் பின் சர்வதேச சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பின் கீழிருந்த குடியேற்ற நாடுகள் குறித்த மேற்பார்வை நடவடிக்கைகளை வெற்றிகரமாகச் செய்தமை.

**12. சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங் -களைத் தருக.**

➢. அங்கத்துவ நாடுகள் சங்கத்திலிருந்து விலகியமை.

- ❧. அங்கத்ததுவ நாடுகள் சர்வதேச சங்கத்திலிருந்து விலகியமை.
- ❧. சர்வதேச சங்கத்தை உருவாக்க முன்னின்ற ஐக்கிய அமெரிக்கா விலகியமை.
- ❧. சங்கத்தின் சில கொள்கைகளை அமெரிக்கரின் செனட் சபை விரும்பவில்லை. இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தின் கொள்கைகளைப் பாதுகாப்ப-தற்கான அவசியம் அதற்கு இருக்கவில்லை.

- ➢. ஜேர்மனி, இரஷ்யா ஆகிய நாடுகளுக்கு அங்கத்துவம் வழங்கப்படாமையும் பல நாடுகள் விலகியமை.
  - ✍. இச்சங்கத்தின் உறுப்பு நாடுகள் பட்டியலில் 55 நாடுகளுக்கு அங்கத்துவம் வழங்கப்பட்ட போதிலும் ஆரம்பத்தில் உலகில் பெரும் நிலப்பரப்பைக் கொண்ட வல்லரசாகிய இரஷ்யாவுக்கும், போர்க்குற்றவாளிகளான ஜேர்மனிக்கும் அங்கத்துவம் மறுக்கப்-பட்டிருந்தது.
  - ✍. 1926ல் ஜேர்மனி சங்கத்தில் இணைந்த போதிலும் 1933ம் ஆண்டு ஹிட்லர் ஜேர்மனியைச் சங்கத்திலிருந்து விலகச் செய்தான்.
  - ✍. இரஷ்யா 1934ல் இணைந்து 1939ல் விலகியது.
  - ✍. 1920ல் இத்தாலி சங்கத்தில் இணைந்து 1937ல் முசோலினி இத்தாலியை விலக்கிக் கொண்டார்.
  - ✍. ஜப்பான் 1920ல் சங்கத்தில் சேர்ந்து 1933ல் விலகியது.
- ➢. சங்கத்திடம் நிலையான படையணி ஒன்று இல்லாமை.
  - ✍. சர்வதேச சங்கம் எடுத்த தீர்மானங்களைச் செயற்படுத்தவும், தீர்மானங்களை நிர்ப்பந்தப் படுத்திச் செயலாற்றத் தேவையான சக்தி அதனிடம் இல்லாதிருந்தது.
  - ✍. 1931ல் ஜப்பான் மஞ்சூரியாவை ஆக்கிரமித்தது.
  - ✍. 1935ல் இத்தாலி அபிசீனியாவை ஆக்கிரமித்தது.
  - ✍. 1936ல் ஜேர்மனி றைன் பிரதேசத்தை ஆக்கிரமித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1938ல் ஆஸ்திரியா செக்கோ ஸ்லோவாக்கியாவை ஆக்கிரமித்தது.
- 1939ல் இரஷ்யா பின்லாந்தை ஆக்கிரமித்தது.

➤. படைபலப் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியாமல போனமை.

- அங்கத்துவ நாடுகள் ஆரம்பத்தில் பாதுகாப்புக்காக மட்டுமே படைகளை வைத்திருப்பது என உறுதியளிக்கப்பட்டது. ஆனால் இவை பின்பற்றப்படவில்லை.

➤. சுயநலப்போக்கு மேலோங்கிக் காணப்பட்டமை.

- அங்கத்துவ நாடுகள் அடுத்தவரின் நலனுக்காக தமது நேரத்தையும், பணத்தையும செலவிடுவதை விரும்பவில்லை.

➤. உலக வல்லரசுகளின் தலைவர்களிடையே ஒற்றுமை காணப்படாமை.

**13. இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கான காரணிகளைத் தந்து விளக்குக.**

➤. ஜேர்மனியில் ஹிட்லரின் எழுச்சியும், நடவடிக்கைகளும்.

- வைமர் அரசிடம் காணப்பட்ட குறைபாடும் ஹிட்லர் அதிகாரத்தினைப் பெறுவதற்கு வழி வகுத்தது.
- சிறந்த நாவன்மையும், ஆளுமையும் பொருந்திய ஹிட்லர் நாட்டு மக்களிடையே நாட்டுப்பற்றைத் தூண்டினான்.
- வேர்செயில்ஸ் உடன்படிக்கையின்படி ஜேர்மனியின் வருமானம் முழுவதையும் நட்டவீட்டை வழங்குவதில் செலவழிக்க வேண்டியிருந்தது என மக்கள் மனதில் விழிப்புணர்வை ஊட்டினார்.
- வேர்செயில்ஸ் உடன்படிக்கை ஜேர்மன் மக்களின் சுயமரியாதைக்கு இழுக்கு எனவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அவமானப்படுத்தப்பட்டதாகவும் ஜேர்மனியரை உணரச் செய்தார்.

- ஹிட்லரின் ஆரிய இனக் கொள்கையையும் பல பாகங்களாகப் பிரிந்த மக்கள் ஒன்று படுத்த வேண்டுமென்ற கொள்கையும், மக்கள் ஆதரவையும், இராணுவ பலத்தையும் பெற்றுக் கொடுத்தது.
- 1934ல் சர்வதேச சங்கத்திலிருந்து விலகியமையும், இரணுவ பலத்தைப் பெருக்கியமையும்.
- 1938ல் ஆஸ்திரியாவை ஜேர்மனியுடன் இணைத்து நாஸிச ஆட்சியை ஆரம்பித்தமை.
- 1936ல் றைன்லாந்து கைப்பற்றப்பட்டமை., ஜப்பானுடன் இணைந்து கொண்டு கம்பியூனிஸ எதிர்ப்பு உடன்படிக்கை மேற் கொண்டமை.
- 1937ல் ஸ்பானிய உள்நாட்டு யுத்தத்தில் ஜேர்மனியின் புதிய ஆயுதங்களைப் பரீட்சித்தமை.
- 1939 மியுனிச் உடன்படிக்கையை மீறிச் செக்கோசிலோவாக்கியாவைக் கைப் -பற்றியமை.

➤. இத்தாலியில் முசோலினியின் செயற்பாடுகள்.

- முதலாம் உலகப் போரில் வெற்றியடைந்த அணியில் இத்தாலி இருந்த போதிலும் எதிர்பார்த்த நன்மை எதுவும் கிடைக்கவில்லை.
- யுத்தத்தின் பின்னர் உணவுத் தட்டுப்பாடு, வேலையில்லாப் பிரச்சனை, வேலை நிறுத்தப் போராட்டம் போன்றன உருவாகின. இந்நிலையில் முசோலினி எழுச்சி பெற்று பாசிசவாதத்தின் அடிப்படையில் எழுச்சி அடையச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இத்தாலியின் இராணுவ கடற்படைப் பலத்தை அதிகரித்தான்.
- 1936ல் எத்தியோப்பாவைக் கைப்பற்றினான்.
- சர்வதேச சங்கம் தடைகளை ஏற்படுத்தியதால், அதிலிருந்து ஜேர்மனியை விலக்கிக் கொண்டான்.

➢. ஜப்பானின் . நடவடிக்கைகள்.

- 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் எழுச்சி கண்டு உற்பத்திப் பொருட்களுக்கு தேவையான சந்தையைப் பெறவேண்டிய தேவை ஏற்பட்டதால், ஐரோப்பிய நாடுகளே ஆசிய நாடுகளில் அதிகளவு குடியேற்றங்களை வைத்திருந்தமையால் அவற்றுடன் முரண்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.
- இதன் விளைவாக 1934ல் ஜப்பான் வட சீனாவின் மஞ்சூரியாவைக் கைப்பற்றியது.
- இதனால் சர்வதேச சங்கத்திலிருந்து விலகி ஆசிய நாடுகளின் ஆக்கிரமிப்பாளராக மாறியது.

➢. சர்வதேச சங்கத்தின் பலவீனமும் தோல்வியும்.

**14. 2ம் உலக யுத்தத்தின் உடனடிக் காரணியாக அமைந்தது எது?**

➢. போலந்தின் மீது 1939ம் ஆண்டு ஜேர்மனி மேற்கிலிருந்து போலந்தின் மீது படையெடுத்தது.

➢. செப்ரெம்பர் 3ல் போலந்தை பாதுகாப்பதற்கு ஒப்பந்தம் செய்த பிரித்தானியாவும், பிரான்சும் ஜேர்மனி மீது யுத்தப் பிரகடனம் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. இராண்டாம் உலகப்போரின் இரு அணி நாடுகளை வேறுபடுத்தி எழுதுக.

➢. நேச நாடுகள் அணி :

பிரித்தானியா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, இரஷ்யா.

➢. அச்சு நாடுகள் அணி :

ஜேர்மனி, இத்தாலி, யப்பான், பல்கேரியா, ருமேனியா.

16. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பரவலை எழுதுக.

ஜேர்மனி :

➢. கி.பி. 1939 செப்பெரம்பர் மாதம் ஹிட்லர் போலந்து நாட்டை ஆக்கிரமித்தான்.

➢. போலந்து நாட்டைப் பாதுகாக்க ஒப்பந்தம் செய்த பிரித்தானியா, மற்றும் பிரான்ஸ் ஜேர்மனிக்கு எதிரான யுத்தப் பிரகடனத்தை விடுத்ததுடன் யுத்தத்தில் பிரவேசித்தன.

➢. 4 வாரங்களுக்குள் ஜேர்மனி போலந்தைத் தோற்கடித்தது.

➢. அதனைத் தொடர்ந்து நோர்வே, டென்மார்க், பெல்ஜியம் ஆகிய நாடுகளை ஜேர்மனி கைப்பற்றியது.

➢. 1940ம் ஆண்டு பிரான்ஸைத் தாக்கி அதன் தலைநகர் பாரீஸ் நகரைக் கைப்பற்றியது.

➢. ஹிட்லர் இரஷ்யா மீது வடலெனின் கிராட் மொஸ்கோவை இலக்கு வைத்து படையெடுப்புக்களை மேற்கொண்டான்.

➢. எதிர்பாராமல் யுத்தம் நீடித்ததால் ஜேர்மனியப் படைகள் இரஷ்யாவில் ஏற்பட்ட மழை, பனியால் கஷ்டப்பட்டுத் தோல்வியைத் தழுவியது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாலி :

➢. முசோலினி தனது எல்லை கடந்து பிரான்ஸை அடிபணிய வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டான்.

➢. இவ்வாறாக ஜேர்மனியும், இத்தாலியும் பிரான்சை அடிபணிய வைத்தபின் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி பிரான்ஸ் ஜேர்மனியின் கட்டுப் பாட்டில் வந்தது.

ஜப்பான் :

➢. ஜப்பானிய தளபதி யமமேற்ரோவினல் பேர்ள் துறைமுகம் தாக்கப்பட்டது. 353 ஜப்பானிய விமானங்கள் இத்தாக்குதலை மேற்கொண்டன. 2மணி நேரத்தில் அமெரிக்கரின் 150 விமானங்கள், 5 யுத்தக் கப்பல்கள் அழிக்கப்பட்டதுடன், 2300 படைவீரர்கள் கொல்லப்பட்டனர்.

ஐக்கிய அமெரிக்கா :

➢. 1945ம் ஆண்டு ஆகஸ்ட் 6ம் திகதி அமெரிக்கப் போர் விமானம் B29 எனோலாகே "சின்னப்பையன்" என்ற பெயர் கொண்ட அணுகுண்டை ஹிரோசிமா மீது வீசியது. 80,000 பேர் கொல்லப்பட்டனர்.

➢. ஆகஸ்ட் 9ம் திகதி நாகசாகி மீது 2வது அணுகுண்டு "பாற்பானை" (குண்டுமனிதன்) வீசியது.

➢. ஜப்பானிய மன்னன் ஹிரோஹித்தோ ஆகஸ்ட் 14ம் திகதி எவ்வித நிபந்தனையுமின்றிச் சரணடைந்தார்.

(அமெரிக்கா, 2வது உலகமாக யுத்ததில் ஈடுபட்டதற்கான காரணமாக மேற்குறிப்பிட்ட இச்சம்பவத்தை எடுத்துக்காட்டலாம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17. அச்சு நாடுகள் யுத்தத்தில் தோல்வியுற்றமைக்கான காரணிகளைத் தருக.**

- ➢. யுத்த தந்திரோபாயத் தவறுகள் ஏற்பட்டமை.
- ➢. மூலப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டமை.
- ➢. நேச நாடுகள் ஆரம்பத்தில் ஏற்பட்ட தோல்விகளி -லிருந்து கற்றுக் கொண்டவை.
- ➢. அச்சு நாடுகள் எதிரிகளைக் குறைத்து மதிப்பிட்டமை.
- ➢. ஐக்கிய அமெரிக்கா, இரஷ்யா, பிரித்தானியா போன்ற நாடுகளின் எதிர்ப்பு.

**18. ஜேர்மனி படைகள் இரஷ்யாவில் தோல்வி அடைந்த முறையை எழுதுக.**

- ➢. கடும்குளிரின் பருவம் ஆரம்பமாகும் வரை ஜேர்மனிப் படைகளைத் தக்க வைத்தமை.
- ➢. ஜேர்மனிப் படைகள் நீண்ட கடுங்குளிர் பருவத்திற்கு ஆயத்தமாக இருக்காமை.
- ➢. கடும்குளிர் பருவத்தில் குளிரும், உணவுத் தட்டுப்பாடும், நோய்களும் ஜேர்மனியப் படையினருக்கு இழப்பை ஏற்படுத்தியமை.
- ➢. படையினரைப் பின்வாங்கும் சாதூரியம் ஹிட்ல -ரிடம் இல்லாமையால் ஜேர்மனியப் படை இரஷ்யாவிடம் தோல்வி கண்டது.

**19. 2ம் உலக மகா யுத்தத்தில் ஜேர்மனி அடிபணிந்தது பற்றி எழுதுக.**

- ➢. இரஷ்யப் படைகள் கிழக்கு ஐரோப்பாவில் நாசிசப் படைகளை முன்னேறிச் சென்றன.
- ➢. பிரான்ஸ் மற்றும் அமெரிக்கப் படைகள் மேற்குத் திசையில் தாக்குதல்களை நடாத்தின.
- ➢. இரு திசைகளிலும் நெருங்கி வந்த படைகள் பேர்ளின் நகருக்குள் புகுந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்த ஹிட்லரும் அவனது கட்டளைத் தளபதிகள் பலரும் தற்கொலை செய்து கொண்டனர்.
- ➢. இதன் மூலம் 1945 மே மாதம் ஜேர்மனி நிபந்தனையின்றி சரணடைந்தது.

20. 2ம் உலக மகா யுத்தத்தில் ஜப்பான் ஆசிய நாடுகளைக் கைப்பற்றியமை பற்றி எழுதுக.
    - ➢. ஜப்பான் தனது போர்ப்பலத்தை நிருபித்து சிங்கப்பூர், மலேசியா, பர்மா, ஹொங்கொங் முதலிய குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றியது.
    - ➢. அடுத்து போர்ணியோ, சுமாத்திரா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளையும் கைப்பற்றியது.
    - ➢. 1942ம் ஆண்டளவில் இலங்கை, இந்தியா தவிர்ந்த முழு தென் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளையும் ஜப்பான் கைப்பற்றியது.
    - ➢. 1942ம் ஆண்டு ஏப்ரல் 5ம் திகதி கொழும்புக்கும், ஏப்ரல் 7ம் திகதி திருகோணமலைக்கும் ஜப்பானியரால் குண்டு வீசப்பட்டது.
    - ➢. இதனால் ஜப்பான் இலங்கையை ஆக்கிரமிக்கலாம் எனப் பிரித்தானிய படை அணிகள் இலங்கைக்கு நகர்த்தப்பட்டன.
    - ➢. எனினினும் இலங்கையில் எவ்வித மோதல்களும் இடம்பெறவில்லை.

21. 2ம் உலக மகா யுத்தத்தின் விளைவுகளைத் தருக.
    - ➢. ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற அச்சு நாடுகள் தோல்வியைத் தழுவின.
    - ➢. அதிகளவு உயிர்ச்சேதம் ஏற்பட்ட யுத்தமாகக் கருதப்பட்டது. சுமார் 50 மில்லியன்களுக்கும் அதிகமான மனித உயிர்கள் கொல்லப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் அழிக்கப்பட்டன.
- ஜேர்மனி, போலந்து, ஹங்கேரி ஆகிய நாடுகளில் பல மில்லியன் கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டனர்.
- பிரான்சும், பிரித்தானியாவும் உலக வல்லரசு நிலையிலிருந்து இறங்கியது.
- ஜேர்மனி கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி என இரண்டாகப் பிரிந்தது.
- பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் வசமிருந்து இலங்கை, இந்தியா, இந்தோனேசியா உள்ளிட்ட குடியேற்ற நாடுகள் பலவும் சுதந்திரமடைந்தன.
- ஐக்கிய அமெரிக்காவும், இரஷ்யாவும் உலக வல்லரசுகளாக எழுச்சி பெற்றன.
- ஐக்கிய அமெரிக்கா ஜனநாயகத்தின் பாதுகாவல -னாகவும், சோவியத் இரஷ்யா சமவுடைமையின் பாதுகாவலனாகவும் விளங்கின.
- அழிவுக்குள்ளான ஐரோப்பிய நாடுகளைக் கட்டி எழுப்புவதற்காக ஐக்கிய அமெரிக்காவில் அரச செயலாளர் சேர். ஜோன். மார்ஷல் என்பவரால் "மார்ஷல் திட்டம்" எனும் உதவித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- முதலாளித்துவ வாத நாடுகளுக்கும், சமூகவுடைமை வாத நாடுகளுக்கும் இடையில் ஆயுதங்கள் பயன்படுத்தப்படாத பனிப்போர் (கெடுபிடிப்போர்) இடம்பெற்றன.
- உலக சமாதானத்தை நிலை நாட்ட ஐக்கிய நாடுகள் சபை உருவானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றத்திற்கான பின்னணிகளைச் சுருக்கமாக விளக்குக.

➢. அத்திலாந்திக் பிரகடனம் : (1941)

✎. 2ம் உலக மகாயுத்தம் இடம்பெற்ற வேளையிலேயே பிரித்தானியப் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வேல்ட் மற்றும் அச்சு நாடுகளுக்கு எதிரான 26 நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி 1941 ஆகஸ்ட் மாதம் அத்திலாந்திக் சாசனத்தில் கையொப்பமிட்டனர்.

✎. இச்சாசனத்தின பிரகாரம் சர்வதேச ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல் நாடுகளின் சுயாதீனம் மற்றும சுயாதி பத்தியத்தை பாதுகாப்பது தொடர்பான கவனம் செலுத்தப்பட்டது.

➢. மொஸ்கோ மாநாடு (1943)

✎. 1943 ஒக்டோபர் மாதமளவில் இரஷ்யா, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, சீனா முதலிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் உலக சமாதானத்தை ஏற்படுத்து -வதற்கான பேச்சுவார்த்தையை மொஸ்கோ நகரில் கூடி பிரகடனம் ஒன்றை வெளியிட்டனர்.

➢. தெஹ்ரான் மாநாடு (1943)

✎. பிராங்ளின் ரூஸ்வேல்ட் (ஐக்கிய அமெரிக்கா ஜனாதிபதி) வின்சன்ட் சேர்ச்சில் (பிரித்தானியப் பிரதமர்), ஜோசப் ஸ்ராலின் (இரஷ்யத் தலைவர்) ஆகியோர் தெஹ்ரான் நகரில் ஒன்று கூடி, உலக சமாதானத்தை நிலை நாட்ட உலக அமைப்பொன்றை உருவாக்க வேண்டும் என்ற யோசனையை ஏற்றுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. சான்பிரான்சிஸ்கோ மாநாடு (1945 ஒக்டோபர் 24ம் திகதி)

- 50 நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தை உருவாக்கிக் கைச்சாத்திட்டனர். அதனைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபை செயற்படத் தொடங்கியது.
- இதன் காரணமாகவே ஒக்டோபர் மாதம் 24ம் திகதி ஐக்கிய நாடுகள் தினமாகக் கொண்டாடப் படுகிறது.

**23. ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களாவன யாவை?**

➢. சர்வதேச சமாதானத்தையும், பாதுகாப்பையும் நிலை நிறுத்துதல்.

➢. நாடுகளுக்கிடையிலான நட்புறவை வளர்த்தல்.

➢. மனித அடிப்படை உரிமைகள், சுதந்திரங்களை உறுதிப்படுத்துவதனூடாக சர்வதேச ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல்.

➢. பொருளாதார , சமூக கலாசாரப் பிணக்குகளைத தீர்த்தல்.

➢. இப்பொதுக் குறிக்கோளை அடைவதற்காக சர்வதேச நிலையமாகச் செயற்படல்.

**24. ஐக்கிய நாடுகள் சபையின் ஆறு முக்கியமான ஸ்தாபனங்கள் பற்றி விளக்குக.**

(1) பொதுச்சபை
(2) பாதுகாப்புச் சபை
(3) சமூக பொருளாதார சபை
(4) நம்பிக்கைப் பொறுப்புச் சபை
(5) சர்வதேச நீதிமன்றம்
(6) பொதுச் செயலகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) பொதுச் சபை

- ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஓர் அமைப்பாகும். ஒவ்வொரு அங்கத்துவ நாட்டுக்கும் ஒரு வாக்குரிமையுண்டு.
- தற்போதய அங்கதத்துவ நாடுகளின் எண்ணிக்கை ஜுலை 09 / 2013 இல் உள்ள நிலவரப்படி (தெற்கு சூடான் சுதந்திரம் பெற்று ஐ.நா.வில் இணைந்ததுடன்) 193 நாடுகள் உள்ளன.
- பொதுச் சபையில் அனைத்து நாடுகளும் சம அந்தஸ்து உடையவையாக விளங்கும்.
- ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் மாதம் இச்சபை கூடும்.

➢. **கடமைகளும் அதிகாரங்களும்.**

- சர்வதேச சமூகத்தின் சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும் தேவையான எந்தவொரு பிரச்சினை குறித்தும் பேச்சு வார்த்தை நடாத்தல், சிபாரிசுகளை முன் வைத்தல்.
- அங்கத்துவ நாடுகளின் பொருளாதார, சுகாதார, மனித உரிமைகள் போன்ற துறைகளில் முற்னேற்றத்திற்கான ஆலோசனைகளை முன் வைத்தல்.
- ஐக்கிய நாடுகளின் வரவு செலவுத்திட்டத்தை ஆராய்ந்து அனுமதி வழங்குவதோடு வழங்க வேண்டிய உதவி நிதியை அங்கத்தவரிடையே பகிர்ந்து ஒதுக்குதல்.
- பாதுகாப்புச் சபையின் சிபாரிசுப்படி பாதுகாப்புச் சபை, சமூகப் பொருளாதார சபை, நம்பிக்கைப் பொறுப்புச் சபை என்பவற்றிற்கு அங்கத்தினரைத் தெரிவு செய்தல்.
- பொதுச் செயலாளர், சர்வதேச நீதிபதிகளை நியமித்தல்.
- புதிய அங்கத்துவ நாடுகளைச் சேர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பாதுகாப்புச் சபை

☞. இதில் 15 நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றன. 5 நாடுகள் நிரந்தர உறுப்பு நாடுகள். 10 நாடுகள் நிரந்தரமற்ற உறுப்பு நாடுகள் ஆகும். இவற்றின் உறுப்புரிமைக் காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

☞. ஐக்கிய அமெரிக்கா, சோவியத் யூனியன், பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், சீனா ஆகிய ஐந்து நாடுகளுமே நிரந்தர உறுப்புரிமை பெற்ற நாடுகளாகும்.

➤. கடமைகளும் அதிகாரங்களும்.

☞. சர்வதேச சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும் பாதகமான முறையில் அமையும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தலும், அவற்றைச் சமாதானமான முறையில் தீர்த்து வைப்பதற்கான வழிகளை மேற்கொள்ளுதல.

☞. யுத்த நெருக்கடிகளைத் தீர்த்தல், யுத்த நிறுத்த ஏற்பாடுகளை மேற்கொள்ளல், பொதுச் செயலாளரை சமாதான முயற்சியில் ஈடுபடுத்தல.

☞. நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு "வீற்றோ" எனப்படும் தீர்மானங்களை இரத்து செய்யும் அதிகாரமுண்டு.

(3) சமூக பொருளாதார சபை

☞. 54 உறுப்பினர்களைக் கொண்டது. உறுப்பினர் -களின் பதவிக்காலம் 3 ஆண்டகளாகும்.

☞. ஒவ்வொரு ஆண்டுக்கும் 18 நாடுகள் விலகிக் கொள்ள புதிய 18 நாடுகள் இணைந்து கொள்ளும்.

☞. ஒவ்வொரு வருடமும் இரண்டு மாதக் கூட்டத் தொடர் நியூயோர்க்கிலும் ஜெனிவாவிலும் நடைபெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. கடமைகளும் அதிகாரங்களும்.

- சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் உலக மக்களின் பொருளாதார, சமூக கலசார, கல்வி மற்றும் சுகாதார அபிவிருத்தியை மேற்கொள்வது.
- இணை நிறுவனங்களினூடாக தனது செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- ஆணைக்குழுக்கள் நியமித்து செயற்படுதல் (உ + ம் : மனித உரிமைகள் ஆணைக்குழு)

➢. பொருளாதார சபையின் கீழ் இயங்கும் சில நிறுவனங்களாவன.

- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)
- உணவு விவசாய ஸ்தாபனம் (FAO)
- ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசார மையம் (UNESCO)
- சர்வதேச நாணய நிதியம் (IMF)
- ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நிதியம் (UNICEF)
- ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP)
- ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (UNPFA)
- உலக உணவுத்திட்டம் (WFP)
- ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி மையம். (UNIDO)
- புனரமைப்புக்கும், அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (IBRD)
- வர்த்தகம், அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாடு. (UNCTAD)
- வர்த்தக தீர்வை பற்றிய ஐக்கிய நாடுகளின் மாநாடு (ILO)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) நம்பிக்கைப் பொறுப்புச் சபை

- ➢. ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட பிரதேசங்களை நிர்வகித்தல்.
- ➢. ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்ட காலத்தில் 11 நாடுகள் இதன் கீழ் இருந்தன.
- ➢. 1944ல் சகல நம்பிக்கைப் பொறுப்பு பிரதேசங்களும் சுதந்திரத்தை நிலை நாட்டியமையால் இச்சபை செயலற்றுக் காணப்பட்டது.
- ➢. 2005ல் உலகத்தலைவர் மாநாட்டில் இவ்வமைப்பினை அகற்றுவதற்கான தீர்மானங்கள் நிறைவேறியது.

(5) சர்வதேச நீதிமன்றம்

- ➢. 9 ஆண்டுகளுக்கு நிச்சயிக்கப்பட்ட 15 நீதிபதிகளைக் கொண்டது.
- ➢. நெதர்லாந்தின் ஹேக் நகரில் இது அமைக்கப் பட்டுள்ளது.
- ➢. ஐக்கிய நாடுகள் சபையின் பிரதானமான நீதிமன்றமாக விளங்குதல், ஐக்கிய நாடுகள சபையின் பல்வேறு நிறுவனங்களுக்குத் தேவையான சட்ட ஆலோசனை வழங்குதல்.
- ➢. அங்கத்துவ நாடுகளுக்கிடையே தோன்றும் சிக்கல்களுக்கு சட்டரீதியான தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல்.

(6) பொதுச் செயலகம்.

- ➢. ஐக்கிய நாடுகளின் சபையின் பிரதான நிர்வாக அலுவலகம் ஆகும்.
- ➢. ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.
- ➢. இதன் தலைவர் பொதுச் செயலாளர் ஆவார். இவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. சர்வதேச சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் எந்தவொரு பிரச்சினைகளையும் பாதுகாப்புச் சபைக்கு முன்வைப்பதற்கு செயலாளர்களுக்கு அதிகாரமுண்டு.
- ➢. இதன் பல கிளைச் செயலகங்கள் உலகெங்கும் இயங்கி வருகின்றன.
- ➢. அவற்றின் அங்கத்தவர்கள் 9 ஆயிரம் ஆகும்.

**25. ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர்கள் பட்டியலைத் தருக.**

| | செயற்பெயர் | பதவிக்காலம் |
|---|---|---|
| 1. | ட்ரிக்வலி (நோர்வே) | 1946 - 1952 |
| 2. | டெக்ஹமர்சல் (சுவீடன்) | 1953 - 1961 |
| 3. | யூதான்ற் (பர்மா) | 1962 - 1971 |
| 4. | கூர்த்வால்கயிம் ஆஸ்திரியா) | 1972 - 1981 |
| 5. | ஜாவிர் பெரஸ்டி குவெல்யா சிவெலிபா (பேரு) | 1982 - 1991 |
| 6. | பூத் ரோஸ் சாலி (எகிப்து) | 1992 - 1996 |
| 7. | கோபி ஹனான் (கானா) | 1997 - 2001 |
| 8. | பாங்கிமூன் (தென்கொரியா) | 2007 - 2016 |
| 9. | அந்தோனியோ குத்தரேசு | 2017 முதல் |

**26. ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்தை பாதுகாக்க எடுத்த நடவடிக்கைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

- ➢. எதிர்காலச் சந்ததியினரை யுத்த அபாயத்திலிருந்து பாதுகாப்பதற்காக ஆணு ஆயுத ஆணைக் குழுவை அமைத்து நிர்வகித்து வருகின்றமை.
- ➢. சர்வதேச பிணக்குகளுக்கு தீர்வு கண்டுள்ளது.
- ➢. சுயஸ் கால்வாய் நெருக்கடி
  எகிப்திய ஜனாதிபதி கமால் அப்துல்நாசர் சுயஸ்கால்வாய் தேசிய மயமாக்கிய போது இங்கிலாந்து, பிரான்ஸ், இஸ்ரேலுடன் ஏற்பட்ட பிரச்சனைக்கு சுமூகமாகத் தீர்வு கணடது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ➢. வளைகுடா நெருக்கடி

- ஈராக்கின் எல்லையில் காணப்பட்ட ருமெய்லா கனிய எண்ணெய் வயலிலிருந்து குவைத் எண்ணெய் அபகரித்ததாக ஈராக் குற்றம் சாட்டி எழுந்த பிரச்சினையே இதுவாகும்.
- ஈராக் குவைத்தை ஆக்கிரமித்து உலகமகா யுத்தத்திற்கு அடுத்த பெரிய யுத்தமாக இது கருதப்பட்டது. பேரழிவுகள் ஏற்பட்டன.
- ஐக்கிய நாடுகள் தலையிட்டு இந்த நெருக்கடிக்கு சுமுகமான தீர்வினைக் கண்டது.

## ➢. கியூபாவின் ஏவுகணை நெருக்கடி

- கியூபாவில் ஏற்பட்ட புரட்சிகாரணமாச அங்கிருந்து அமெரிக்காவிற்குத் தப்பிச் சென்ற ஒரு குழுவினர் அமெரிக்காவில் யுத்தப் பயிற்சி பெற்று பிடல் கஸ்ரோவின் சமவுடமை அரசுக்கு எதிராக ஆயுத அணியாக திரும்பி வந்தனர்.
- கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா உதவி வழங்குவதாகக் கூறி, அந்நாட்டைத் தாக்கக்கூடிய ஏவுகணைகளை 1962 ஒக்டோபர் இரஷ்யா கியூபாவிற்குப் பொருத்தியது.
- இதன் காரணமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோன் F. கென்னடியின் கட்டளைப்படி கியூபா முற்றுகையிடப்பட்டு, இரஷ்யாவை இலககு வைத்து ஏவுகணைகள் பொருத்தப்பட்டன.
- இப்பிரச்சினையானது ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் தலையீட்டினால் தீர்க்கப்பட்டது.
- சமாதானப் படைகளை அனுப்பி நெருக்கடி -களைத் தீர்த்தது.
  (கொங்கோ, சைபிரஸ், மத்திய கிழக்கு நாடுகள், சோமாலியப் பிரச்சினைகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. குடியேற்ற வாதத்திற்கெதிரான சுதந்திரப் போராட்டங்களுக்கு உதவி புரிந்துள்ளது. (உ + ம் : ஆபிரிக்க நாடுகளின் சுதந்திரப் போராட்டம்)

➢. நிறபேதத்திற்கு எதிரான கொள்கைப் பிரச்சினையைத் தீர்க்க உதவியது, (உ + ம் : தென்னாபிரிக்காவில் இனவாதத்துக்கு எதிரான தடைகள்)

**27. தற்காலத்தில் உலக சமாதானத்தைப் பாதுகாப்ப -தற்காக ஐக்கியநாடுகள் சபையானது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் தருக.**

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்திற்கு எதிராகச் செயற்படும் நாடுகளுக்கு பொருளாதாரத் தடைகளை விதிப்பதன் மூலம் அத்தீர்மானத்தை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட நாடுகளை இணக்கத்திற்குட்படுத்த முடியும்.

➢. அணு ஆயுதக் குறைப்பு செய்தல்.

➢. அணு ஆயுதங்களைக் குறைக்கவும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குமாக அணு ஆயுதக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

➢. சமாதானப் படைகளை அனுப்பி வைத்தல். இரு பிரிவினரிடையே கடுமையான மோதல்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தில் நிலைமையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையானது தனது சமாதானப் படைகளின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 05
## கணிப்பீட்டுப் பயிற்சி
## பிரித்தானியரின் கீழ் இலங்கையில் சமூக மாற்றங்கள்

➢. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

✍. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் D வரையிலான தகவல்களைப் பயன்படுத்தி 1ம், 2ம் வினாக்களுக்கு விடை தருக.

A - புதிய மத்தியதர வகுப்பினரின் தோற்றம்
B - ஆங்கிலக் கல்வி அறிமுகம்
C - புதிய நகர்கள் தோற்றம்
D - மிஷனரிகளின் செயற்பாடு

01. பெருந்தோட்டத்துறை மூலம் இடம்பெற்ற கலாசார மாற்றத்திற்கு வழிவகுத்தது.
(1) A,C (2) B,D (3) C,D (4) A,D

02. பெருந்தோட்டத்துறை மூலம் இடம்பெற்ற சமூக மாற்றத்திற்கு வழியமைக்காதது எனக் கருதக் கூடியது.
(1) A (2) B (3) C (4) D

✍. பிரித்தானியர் வருகை முன் இலங்கையில் நிலவிய பொருளாதார முறையினதும் மீதும் (மரபு ரீதியானது), பிரித்தானியர் ஆட்சியின் போதான பொருளாதாரச் சீர்த்திருத்தங்களும் வழங்கப் பட்டுள்ளன. அவ்விடயங்களின் அடிப்படையில் 3ம், 4ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A - சுயதேவைப் பூர்த்தியினைக் கொண்ட பொருளாதார முறை.

B - சம்பளத்திற்கு உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் உருவானமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C - உழைப்புப் பரிமாற்ற முறையான அத்தம் முறை காணப்பட்டமை.

D - வர்த்தகப் பொருளாதார முறை

03. இலங்கையின் மரபு ரீதியான பொருளாதார முறையுடன் தொடர்புடைய இரண்டினைக் குறிக்கும் விடைத் தொகுதி.

(1) A,D (2) A,C (3) B,C (4) B,D

04. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியின் போது ஏற்பட்ட பொருளாதாரத்துடன் தொடர்புடைய இரண்டினைக் குறிக்கும் விடைத்தொகுதி.

(1) A,B (2) B,C (3) A,D (4) B,D

05. பிரித்தானியர் ஆட்சியினால் ஏற்பட்ட பொருளாதார விளைவு அல்லாதது.

(1) பெருந்தெருக்கள், புகையிரத அமைப்பு மற்றும் தொடர்பாடல், உட்கட்டமைப்புத் துறை வளர்ச்சியடைந்தமை.

(2) பெருந்தோட்டத் தொழிலாளர், நகர்புறத் தொழிலாளர் என்ற வர்க்கப் பிரிவுகள் தோன்றின.

(3) இறக்குமதி, ஏற்றுமதி பொருளாதார முறை ஆரம்பமானது.

(4) தேசிய வருமானம் அதிகரித்தமை.

✍. இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சியில் ஏற்பட்ட விளைவுகளைக் கருதுக. அவ்விடயங்களின் அடிப்படையில் 6ம், 7ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A - ஏற்றுமதி வர்த்தகப் பயிர்களின் அறிமுகம்

B - தொழிலாளர் வர்க்கம் தோன்றல்

C - ஆங்கில மொழி மூலம் கல்வி

D - மேலைத்தேய ஆடை அணிகள்

E - மத்திய வகுப்பினர் தோற்றம் பெறல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பிரித்தானியர் ஆட்சியில் ஏற்பட்ட சமூக மாற்றங்-களைக் குறிக்கும் விடைத்தொகுதி

(1) A,B (2) B,C (3) B,D (4) B,E

07. பிரித்தானியர் ஆட்சியல் ஏற்பட்ட கலாசார மாற்றங்களைக் குறிக்கும் விடைத்தொகுதி.

(1) B,D (2) C,D (3) A,D (4) D,E

08. பிரித்தானியர் ஆட்சியினால் ஏற்பட்ட அரசியல் மாற்றம் தொடர்பானது.

(1) கட்டாய அரசாங்க சேவை நீக்கம்
(2) மானிய முறை ஒழிப்பு
(3) பிரதிநிதித்துவ அரசாங்கம் அறிமுகம்
(4) அரச ஏகபோக உரிமையை நீக்குதல்

ஃ. பின்வருவனவற்றைக் கருதுக.

A - ஜோர்ஜ்பேட்
B - எட்வேட் பாண்ஸ்
C - கம்பளை சிங்கப்பிட்டி
D - பேராதனைப் பூங்கா
E - ஜேம்ஸ் ரெய்லர்

09. மேற்தரப்பட்டவைகள் கோப்பிச் செய்கை தொடர்பானது. அவற்றைப் பொருத்தமான முறையில் சோடியாக்கிப் பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.

(1) A,C (2) B,C (3) E,C (4) C,E

10. 19ம் நூற்றாண்டு கோப்பிச் செய்கையின் விருத்தியில் செலவாக்குச் செலுத்தாத காரணியென எதனைக் கருதுவீர்?

(1) 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் சீர்த்திருத்தங்கள்
(2) ஐரோப்பிய சந்தையில் கோப்பிக்கான கேள்வி அதிகரித்தமை.
(3) கோப்பிச் செய்கை மூலம் அதிகளவு இலாபம் பெற முடிந்தமை.
(4) பிரித்தானியர் பின்பற்றிய சுதந்திரக் கொள்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பிரித்தானியர் ஆட்சியின் காரணமாக ஏற்பட்ட விளைவுகளுள் தவறானது என நீர்க் கருதுவது.
(1) பாராளுமன்ற ஆட்சிமுறைமை
(2) புதிய தொழில் வாய்ப்புக்கள் தோன்றின.
(3) மரபு ரீதியான தன்னிறைவுப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது.
(4) கைத்தொழில் புரட்சியின் நன்மைகளை இலங்கையும் பெற்றமை.

12. தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் தொழிற்சங்கங்கள் அமைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டவர்.
(1) A.E. குணசிங்க (2) S.A. விக்கிரமசிங்க
(3) கோ. நடேசு ஐயர் (4) கொல்வின் ஆர்.டி.சில்வா

13. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் நன்மையாக அமையாதது.
(1) இலங்கை தேசிய வருமானம் அதிகரித்தது
(2) மலையக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது
(3) புதிய தொழில் வாய்ப்புக்கள் தோன்றின.
(4) உட்கட்டமைப்பு துறைகள் வளர்ச்சியடைந்தமை.

✍. **பின்வருவனவற்றைக் கருதுக.**
A - புதிய தொழில் வாய்ப்புக்கள் தோன்றியமை
B - ஆங்கில மிஷனரிக் கல்வி
C - வர்த்தக வகுப்பு கல்வி வகுப்பு உருவானமை.
D - தொழிலாளர் வர்க்கம் உருவானமை.
E - மேலைத்தேய கலாசாரம் பரவியமை.

14. மத்தியதர வகுப்பினரின் உருவாக்கத்துடன் தொடர்பு -பட்ட விடைத்தொகுதியை தொடர்புபடுத்துக.
(1) A,B,D (2) A,B,E
(3) B,C,D (4) A,B,C


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. நிரல் A யினையும், நிரல் B யினையும் பொருத்தமாகத் தொடர்புபடுத்தி சரியான ஒழுங்கினைத் தெரிவு செய்க.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. வெள்ளவத்தை நெசவாளர் வேலைநிறுத்தம் | A. 1912 |
| 2. 20,000 தொழிலாளர் பொது வேலைநிறுத்தம | B. 1932 |
| 3. துறைமுக தொழிலாளர் வேலை நிறுத்தம் | C. 1923 |
| 4. புகையிரத ஊழியர் வேலை நிறுத்தம் | D. 1920 |

நிரல் 'A"யில் தொழிலாளர் இயக்கங்களின் வேலை நிறுத்தமும், நிரல் 'B" யில் அவை இடம்பெற்ற ஆண்டுகளும் தரப்பட்டுள்ளன. சரியான முறையில் பொருத்திப் பெறப்படும் விடையைத் தெரிவு செய்க.

(1). B,C,D,A (2). C,B,D,A

(3). A,D,B,C (4). D,A,B,C

16. தொழிலாளர் வர்க்கம் தோன்றியமைக்கான காரணி அல்லாதது.

(1) பாரிய முதலீட்டுச் செயற்பாடுகள்

(2) கட்டற்ற வர்த்தகக் கொள்கையால் ஏற்பட்ட வர்த்தக வளர்ச்சி

(3) துறைமுகத் தொழில் வளர்ச்சி

(4) புதிய வருமான வரிகள் தோன்றியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 06
## கணிப்பீட்டுப் பயிற்சி
## இலங்கை சுதந்திரமடைதல்

➢. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. சோல்பரி யாப்பின் (1947) முக்கிய அம்சம் என நீர் கருதமுடியாதது பின்வருவனவற்றுள் எது?
   (1) இங்கிலாந்து முடியின் பிரதிநிதியாக ஆளுனர் நாயகம் நியமிக்கப்பட்டார்.
   (2) இரு சபைகள் கொண்ட பாராளுமன்றம் உருவாக்கப்பட்டமை.
   (3) பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் ஆகும்
   (4) பிரதமர் தலைமையிலான அமைச்சரவை அமைக்கப பட்டது.

02. "சோல்பரி யாப்பின் பிரகாரம் பாராளுமன்றம் பிரதிநிதிகள் சபை, செனற் சபை என இரு சபைகளைக் கொண்டது" இவற்றின அங்கத்தவர்களின் எண்ணிக்கைகள் முறையே.
   (1) 95, 25 (2) 105, 30
   (3) 101, 30 (4) 95, 26

03. சோல்பரி யாப்பினால் இலங்கைக்கு கிடைத்த நன்மையென நீர் கருதுவது.
   (1) பிரித்தானிய மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யும் உரிமை காணப்பட்டமை.
   (2) சோல்பரி யாப்பில் ஓரளவு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது
   (3) செனற் சபை எதிர்பார்த்தவாறு சிறுபான்மை -யினருக்கு பாதுகாப்பு வழங்கியது.
   (4) இலங்கையின் கட்சி அரசியல் முறை வளர்ச்சிக்கு உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. இலங்கையில் முதலாவது கட்சியும், அதனை ஆரம்பித்தவரும் முறையே.

(1) லங்கா சமசமாஜக் கட்சி - N.M.பெரேரா

(2) இலங்கை கொம்யூனிச கட்சி - S.A.விக்கிரமசிங்க

(3) ஐக்கிய தேசியக் கட்சி - D.S.சேனநாயக்க

(4) தமிழரசுக் கட்சி - S.J.V.செல்வநாயகம்

05. சோல்பரி யாப்பில் இங்கிலாந்தின் (பிரித்தானிய) முடிக்குரிய பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர்.

(1) பிரதம மந்திரி (2) ஆளுனர் நாயகம்

(3) பிரதம நீதியரசர் (4) தேசாதிபதி

**கீழே A,B,C,D,E ஆகியவற்றில் தரப்பட்டுள்ள சோடிகளை அடிப்படையாகக் கொண்டு 6-8 வரையான வினாக்களுக்கு விடைத் தருக.**

A - 1 டொனமூர் யாப்பு - 2 சர்வஜன வாக்குரிமை

B - 1 தேசிய அரசுப் பேரவை - 2 பாராளுமன்றம்

C - 1 குறூமக்கலம் - 2 கல்விகற்ற இலங்கையர் தெரிவு

D - 1 மனிங் யாப்பு - 2 இனவாரிப்பிரதிநிதித்துவம் நீக்கம்

06. முதலாவதும், இரண்டாவதும் ஒரே இயல்பைக் காட்டும் சோடி

(1) A (2) B (3) C (4) D

07. இரண்டாவது விடயத்தின் செயற்பாடுகளுக்கு முதலாவது விடயம் காரணமாக அமைந்த சோடி.

(1) A (2) B (3) C (4) D

08. முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் எதுவித தொடர்பில்லாத சோடி

(1) A (2) B (3) C (4) D


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✎. தரப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி 9ம்,10ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| வருடம் | சீர்திருத்தம் | தலைவர்கள் |
|---|---|---|
| A - 1947 | D - 1ம் குடியரசு யாப்பு | G - ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க |
| B - 1972 | E - 2ம் குடியரசு யாப்பு | H - சோல்பரிப் பிரபு |
| C - 1978 | F - சோல்பரி யாப்பு | I - J.R.ஜெயவர்த்தன |

09. மக்களிடம் இறைமை எனப்படும் உயர் அதிகாரம் வழங்கப்படல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்படல் தொடர்பான விடைத்தொகுதி.
(1) A,F,H (2) B,E,G (3) C,E,I (4) C,E,G

10. ஓரங்க சபையான தேசிய அரசுப பேரவையுடனும், அடிப்படை மனித உரிமைகள் வழங்கல் என்பவற்றுடன் தொடர்புபட்ட விடைத்தொகுதி
(1) B,D,H (2) B,D,I (3) C,D,I (4) B,D,G

11. இலங்கைப் பாராளுமன்றத்தில் இரு மன்ற முறைமை எந்த யாப்பு மூலம் நீக்கப்பட்டது.
(1) 1931 - டொனமூர்
(2) 1972 - குடியரசுயாப்பு
(3) 1978 - குடியரசுயாப்பு
(4) 1947 - சோல்பரி

12. பின்வருவனவற்றில் தவறான தொகுதியைத் தெரிவு செய்க.
(1) 1951, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, S.W.R.D பண்டாரநாயக்க
(2) 1947, புரட்சிகர சமசமாஜக் கட்சி, பிலிப் குணவர்த்தன
(3) 1921, தொழிலாளர் கட்சி, A.E.குணசிங்க
(4) 1958, இலங்கை தமிழ் காங்கிரஸ், S.J.V.செல்வ நாயகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨. 1972ம், 1978ம் குடியரசு யாப்புகளில் அடங்கியுள்ள அம்சங்கள் தரப்பட்டுள்ளன. இத்தகவல்களைக கொண்டு 13ம், 14ம் வினாக்களுக்கு விடை தருக.

A - நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி
B - தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறை
C - விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை
D - பெயரளவிலான ஜனாதிபதி
E - ஸ்ரீ லங்கா எனப்பெயரிடப்பட்டமை
F - மக்கள் தீர்ப்பு

13. 1972 ஆம் ஆண்டு யாப்பில் முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் எனக் கருதப்படக்கூடியது.
(1) A,C,E (2) B,D,E (3) A,D,F (4) B,D,F

14 1978 ஆம் ஆண்டு யாப்பில் முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் எனக் கருதப்படக்கூடியது.
(1) A,B,F (2) B,E,F (3) A,C,F (4) A,C,E

15. 1978 ஆம் ஆண்டு குடியரசு யாப்பின்படி உரிமை மீறலின் போது முறைப்பாடு செய்யப்படும் இடம்.
(1) மனித உரிமைக் கழகம் (2) ஜனாதிபதி
(3) பிரதமர் (4) ஒம்புட்ஸ்மன்

16. சோல்பரி யாப்பின் கீழ் பிரித்தானிய முடியின் முதலாவது ஆளுனர் நாயகமாக நியமிக்கப்பட்டவர் யார்?
(1) ஒலிவர் குணதிலக (2) ஹென்றி மேசன் மூர்
(3) சோல்பரி பிரபு (4) வில்லியம் கோபல்லாவ

17. மகாவலி அபிவிருத்தி திட்டம் துரித மகாவலி திட்டமாக முன்னெடுக்கப்பட்டது பின்வரும் எத்தலைமையிலாகும.
(1) R.பிரேமதாஸ
(2) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க
(3) டட்லி சேனநாயக்க
(4) J.R.ஜெயவர்த்தன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. துரித மகாவலித் திட்டத்தின் கீழ் உருவான நீர்த்தேக்கம் அல்லாதது.
   (1) கொத்மலை நீர்த்தேக்கம்
   (2) விக்டோரியா நீர்த்தேக்கம்
   (3) ரந்தெனிகல நீர்த்தேக்கம்
   (4) உடவளவை நீர்த்தேக்கம்

19. துரித மகாவலித் திட்டத்திற்கு உதவி செய்த நாடுகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. தவறான தொடர்பைத் தெரிவு செய்க.
   (1) கொத்மலை நீர்த்தேக்கம் - சுவீடன்
   (2) விக்டோரியா நீர்த்தேக்கம் - பிரித்தானியா
   (3) ரந்தெனிகல நீர்த்தேக்கம் - மேற்கு ஜேர்மனி
   (4) உடவளவை நீர்த்தேக்கம் - சீனா

20. சுதந்திரம் பெறமுன்னர் உருவாக்கப்பட்ட குடியேற்றத் திட்டமல்லாதது.
   (1) கொத்மலைக் குடியேற்றம்
   (2) மின்னேரியா குடியேற்றம்
   (3) நாச்சதுவ குடியேற்றம்
   (4) மினிப்பே குடியேற்றம்

21. 1948 ஆம் ஆண்டுக்குப் பின் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை மேம்படுத்த மேற்கொண்ட நடவடிக்கையினுள் அடக்க முடியாதது.
   (1) காணி உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் பெருந்தோட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்டன.
   (2) தென்னை ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீ லங்கா தேயிலை அபிவிருத்திச் சபை என்பன நிறுவப்பட்டமை.
   (3) இறப்பர் மீள் நடுகைத்திட்டம், புதிய நடுகைக்கு உதவி புரியும் திட்டம் என்பன அறிமுகப்படுத்தப் பட்டது.
   (4) அகலவத்தையில் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. 1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி பெற்றமைக்கான காரணம்.

(1) சிங்களத்தை அரசாங்க மொழியாக மாற்றுதல் பிரதான தொனிப்பொருளாக இருந்தமை.

(2) தனிக்கட்சி ஆதிக்கத்தினை மாற்றி இரு கட்சிப்போக்கை மக்கள் விரும்பாமை.

(3) இடதுசாரிகளுடன் இணைந்து கொள்ளாமை.

(4) கூட்டுச்சேராது தனித்து நின்று போட்டியிட்டமை.

23. இதுவரை காலம் இலங்கையில் எத்தனை பே நிறைவேற்று அதிகாரம் கோண்ட ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ளனர்?

(1) 4 (2) 6 (3) 5 (4) 7

ஆ. பின்வருனவற்றைக் கருதுக.

A - முகவர் அஞ்சல் நிலையங்கள் அமைக்கப் பட்டமை.

B - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது.

C - ரெலெக்ஸ் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது.

D - கொழும்பு - யாழ்ப்பாணம் விமானம் மூலம் தபால் சேவை.

24. மேற்தரப்பட்டவைகள் இலங்கையின் தொலைத் தொடர்பாடல் துறையிலே ஏற்பட்ட அபிவிருத்திகளைக் காட்டுகின்றன. அவற்றின் கால ஒழுங்கினைக் காட்டும் சரியான விடைத்தொகுதி.

(1) D,C,A,B (2) D,B,A,C

(3) D,C,B,A (4) C,D,B,A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. நிரல் 'A''யில் கல்வித்துறையில் அரசாங்க நடவடிக்கைகளும், நிரல் 'B'' யில் ஆண்டுகளும் தரப்பட்டுள்ளன. சரியான முறையில் பொருத்திப் பெறப்படும் விடையைத் தெரிவு செய்க.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. இலவசக் கல்விச் திட்டம் | A. 1956 |
| 2. புலமைப்பரிசில் திட்டம் | B. 1980 |
| 3. இலவச பாடநூல் விநியோகம் | C. 1945 |
| 4. பாடசாலை சீருடை வழங்குதல் | D. 1993 |

(1). C,B,A,D (2). C,A,B,D (3). C,B,D,A (4). D,A,B,C

26. 1978ல் அமைக்கப்பட்ட பாரிய கொழும்பு பொருளாதார ஆணைகுழுவினால் அமையப்பெற்ற சுதந்திர வர்த்தக வலயங்கள் அமையப் பெற்ற இடமாக அல்லாதது.

(1) குண்டகசாலை (2) கட்டுநாயக
(3) பியகம (4) கொக்கலை

27. விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் குறைபாடாக விளங்குவது.

(1) சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவ வாய்ப்பு நீக்கப்படும்
(2) கட்சிச் சர்வாதிகாரம் ஏற்படும்
(3) கூடியளவிலான ஜனநாயகத் தன்மை எனக் கொள்ளமுடியாது
(4) நிலையான அரசாங்கத்தை அமைக்க முடியாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 07
## கணிப்பீட்டுப் பயிற்சி
## உலகில் இடம் பெற்ற பிரதான புரட்சிகள்

➤. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. "பிரதிநிதித்துவமின்றேல் வரியும் இல்லை" என்ற கோசத்துடன் எழுந்த புரட்சி.

(1) பிரான்சியப் புரட்சி (2) அமெரிக்கப் புரட்சி
(3) ரஷ்யப் புரட்சி (4) சீனப் புரட்சி

02. ரஷ்யப் புரட்சியுடன் தொடர்பற்ற விடயம்.

(1) அமைதி, நிலம், பாண் என்பன புரட்சியின் சுலோகமாக விளங்கியமை.
(2) ரஷ்யாவில் 3000 தொழிற்சாலைகள் மூடப்பட்டமை.
(3) பஸ்தீல் சிறைச்சாலை உடைக்கப்பட்டமை.
(4) வணபிதா காபொன் தலைமையில் அரசியல் உரிமைகள் கோரிச் சென்ற ஊர்வலம் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டமை.

03. உலகில் ஏற்பட்ட ஜனநாயக உரிமையை வென்றெடுக்கும் புரட்சியாக அமைந்த புரட்சி எது?

(1) ரஷ்யப் புரட்சி (2) பிரான்சியப் புரட்சி
(3) அமெரிக்கப் புரட்சி (4) கைத்தொழில் புரட்சி

04. "சமூக ஒப்பந்தம்" என்ற நூலின் மூலம் மக்களின் சுதந்திரம் தொடர்பான எண்ணக்கருவை முன்வைத்தவர்.

(1) மொன்டஸ் கியூ (2) வோல்ரயர்
(3) ரூசோ (4) கென்ரஸ்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. "பிரான்சில் சாதாரண குடிமக்கள் தமது வருமானத்தில் 60% வரியாகச் செலுத்த வேண்டியிருந்தது" பிரான்சிய வரி வகைகளில் அடங்காதது.

(1) டெலி (2) கெபல்

(3) கெப்பிடேசன் (4) ரெவன்யூ

**✍. உலகில் இடம்பெற்ற பிரபல புரட்சிகளுக்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இத்தகவல்களைக் கொண்டு 6 தொடக்கம் 8 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

A - அரசனதும் அரச குடும்பத்தினரதும் ஆடம்பரச் செலவுகள்.

B - பிரித்தானியர் பின்பற்றிய தாய்நாட்டுக்குச் சார்பான பொருளாதாரக் கொள்கை

C - குடியேற்றவாதிகளின் நீதியான போராட்டங்களைக் கட்டுபடுத்த பிரித்தானியர் எடுத்த நடவடிக்கை

D - வர்த்தக ஏகபோக உரிமை அரசுக்கு உரியதாக இருந்தமை.

E - குருமார்கள் சமூக அமைப்பில் பலம் வாய்ந்தவர் -களாக இருந்தனர்.

06. மேற்குறித்தவற்றுள் பிரான்சியப் புரட்சியுடன் தொடர்பான விடைத்தொகுதி

(1). A,B,C (2). B,D,E (3). A,D,E (4). C,D,E

07. மேற்குறித்தவற்றுள் அமெரிக்கப் புரட்சியுடன் தொடர்பான விடைத்தொகுதி

(1). B,C (2). A,B (3). B,D (4). A,C

08. மேற்தரப்பட்டவற்றுள் பொருளாதாரக் காரணியாக உள்ளது.

(1). A (2). B (3). C (4). D

**✍. பின்வருவனவற்றைக் கருதுக.**

A - பிடெல்பியா மாநாடு

B - பொஸ்டன் தேனீர் விருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C - ரெனிஸ் மைதானச் சத்தியப்பிரமாணம்
D - பஸ்தீல் சிறைச்சாலை தாக்கப்பட்டமை.
E - சார் மன்னனுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய கலவரம்

09. மேற்தரப்பட்டவற்றுள் அமெரிக்கப் புரட்சியுடன் தொடர்பான விடைத்தொகுதி
(1). A,B (2). B,C (3). D,E (4). A,B,C

10. பிரான்சியப் புரட்சி தொடர்பான விடைத்தொகுதி
(1). A,B (2). B,C (3). C,D (4). D,E

11. ரூசோவின் கருத்துக்களின் அடிப்படையில் எழுந்தது எது?
(1) 1789ல் ஸ்டேட் ஜெனரல் கூட்டப்பட்டது.
(2) "மிராபோ தலைமையில் கூடி அரசியலமைப்பை தயாரிக்காமல் போவதில்லை" என உறுதி மொழி ரெனிஸ் மைதானத்தில் எடுக்கப்பட்டமை.
(3) 1791ல் மனித உரிமைப் பிரகடனம் வெளியிடப் பட்டது
(4) பஸ்தீல் சிறைச்சாலை உடைக்கப்பட்டது

12. அமெரிக்கப் புரட்சி, பிரான்ஸியப் புரட்சி, ரஷ்யப் புரட்சி ஆகியவற்றுக்கு தலைமை தாங்கிய தலைவர்கள் முறையே,
(1) ஜோர்ஜ் வாஷிங்டன், லபாயட், லெனின்
(2) ஜோர்ஜ் வாஷிங்டன், மிராபோ, ரொஸ்கி
(3) லெனின், லபாயட், வின்சன்ட் சேர்ச்சில்
(4) வூட்ரோ வில்சன், ஒலன்டோ, டிறிக்வலீ

13. பின்வரும் கூற்றுக்களின் தவறான கூற்றினைத் தெரிவு செய்க.
(1) கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக எழுந்த புரட்சி ரஷ்யப் புரட்சியாகும்.
(2) சமாதானம், நிலம், பாண் என்ற கோசத்துடன் எழுந்த புரட்சி ரஷ்யப் புரட்சியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோசத்துடன் எழுந்த புரட்சி பிரான்சியப் புரட்சியாகும்.
(4) பொருளாதார நோக்குடைய கைத்தொழிற் புரட்சி முதன் முதலில் பிரித்தானியாவில் ஆரம்பமானது.

14. பின்வருவனவற்றில் அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களில் ஆங்கிலேயர் குடியேற்றங்களின் தொகுதியுள்ள விடையாக அமைவது.
(1) பேரு, பனாமா, மெக்சிக்கோ, வேர்ஜினியா, நியுயோர்க்
(2) நியுஹம்சயர், வட கரோலினா, பென்சில் வேனியா, மேரிலாந்து, ஜோர்ஜியா
(3) பிரேசில், லூசியானா, ரோட்தீவு, டெலவர், நியுஜேர்சி
(4) மசாசூ செற்ஸ், தென் கரோலினா, பனாமா, பிரேசில், பேரு

15. வட அமெரிக்காவில் பிரித்தானியர் நிறுவிய முதல், இறுதிக் குடியேற்றமாக அமைவது.
(1) வேர்ஜினியா, நியுயோர்க்
(2) ஜோர்ஜியா, மேரிலாந்து
(3) பேரு, பனாமா
(4) வேர்ஜினியா, ஜோர்ஜியா

16. "சகல இனத்தவரகளும் சமமானவர்கள்" என்ற சுதந்திரப் பிரகடனம் உருவாவதற்கு வழி காட்டிய புரட்சியானது யாது?
(1) பிரான்சியப் புரட்சி (2) ரஷ்யப் புரட்சி
(3) அமெரிக்கப் புரட்சி (4) புரட்டஸ்தாந்து புரட்சி

17. அமெரிக்க சுதந்திரப்போர் வெற்றி பெற்றமைக்கான காரணம் அல்லாதது.
(1) ஜோர்ஜ் வாஷிங்டனின் தலைமைத்துவம்
(2) பிரான்சு, ஸ்பானியா, ஒல்லாந்து ஆகிய நாடுகள் குடியேற்ற வாசிகளுக்கு உதவி புரிந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) அத்திலாந்திக் கடலைக் கடந்து பாரிய படையணியை அமெரிக்காவில் வைத்திருப்பது பிரித்தானியருக்கு சுமையாக மாறியமை.

(4) மொண்டஸ்கியூ, வோல்ர்யர், ரூசோ ஆகியோரின் புரட்சிக் கருத்துக்கள்.

18. பிரான்ஸியப் புரட்சிக்கான பொருளாதார காரணம் அல்லாத விடயம் எது?

(1) வினைத்திறனற்ற வரி முறை காணப்பட்டமை.

(2) பிரபுக்கள் நிலத்தின் பெரும்பகுதியை பெற்றிருந்தனர்

(3) அரச தலையீடில்லாத பொருளாதார முறைமை மத்திய வகுப்பினர் எதிர்பார்த்தமை.

(4) ஏகபோக வர்த்தக உரிமை அரசுக்கு உரியதாக இருந்தமை.

19. 1905ல் ரஷ்யப் புரட்சிக்குக் காரணமாகக் கருத முடியாதது.

(1) கைத்தொழில் நெருக்கடி ஏற்பட்டமை

(2) 1905ல் ஜப்பானுடனான யுத்தத்தில் ரஷ்ய தோல்வியுற்றமை.

(3) சார் 2ம் நிக்கலஸின் 1905 ஒக்டோபர் பிரகடனம்

(4) ஸ்டேட் ஜெனரல் கூட்டப்பட்டமை.

20. பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புபட்ட தலைவன் யார்?

➤ இஸ்க்ரா (தீப்பொறி) என்ற பத்திரிகையை வெளியிட்டவர்

➤ செய்யவேண்டியது என்ன? என்ற நூலை வெளியிட்டவர்

➤ பொல்ஸ்விக் கட்சியினூடாக ''எல்லா அதிகாரங்களும சோவியத்திற்கே'' எனும் சுலோகத்தை தாரக மந்திரமாகக் கொண்டவர்.

(1) V.I. லெனின் (2) கென்ரஸ்கி

(3) ரொஸ்கி (4) கோபர்சேவ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 08
## கணிப்பீட்டுப் பயிற்சி
### உலக மகா யுத்தங்களும் இணக்கப்பாடுகளும்

➢. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

௯. கீழே A,B,C,D ஆகியவற்றினால் தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற்கொண்டு 1 தொடக்கம் 3 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | |
|---|---|---|
| A | 1. போர் முரண்பாடுகள் | 2. சூழல் மாசுபடுதல் |
| B | 1. நாசிசவாதம் | 2. ஹிட்லர் |
| C | 1. மார்ஷல் திட்டம் | 2. ஐக்கிய அமெரிக்கக குடியரசு |
| D | 1. முதலாம் உலக மகாயுத்தம் | 2. ஐக்கிய நாடுகள் சபை |

01. முதலாவதன் விருத்தி இரண்டாவதன் அதிகரிப்புக்குக் காரணமானதெனக் காட்டும் விடை.
(1). A (2). B (3). C (4). D

02. முதலாவதிற்கும், இரண்டாவதிற்கும் இடையில் எதுவித தொடர்பையும் காட்டாத விடயச்சோடி.
(1). A (2). B (3). C (4). D

03. முதலாவதன் விருத்தியுடன் இரண்டாவது பல மடைவதனைக் காட்டும் விடயச் சோடி.
(1). A (2). B (3). C (4). D

04. இரண்டாம் உலக மகாயுத்தத்தில் கொழும்பு, திருகோணமலை ஆகிய நகரங்களின் மீது விமானத் தாக்குதல் நடாத்திய நாடு எது?
(1) ஐக்கிய அமெரிக்கக் குடியரசு
(2) ஜேர்மனி
(3) ஜப்பான்
(4) இத்தாலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்க.

A - லூசித்தானியா கப்பல் தாக்கப்படல்.

B - சர்வதேச சங்கம் ஸதாபிக்கப்படல்

C - பேர்ள் துறைமுகம் தாக்கப்படல்

D - ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்தல்

மேற்குறிப்பிட்டவற்றை கால ஒழுங்கில் தருக.

(1). A,B,C,D (2). A,B,D,C

(3). A,C,B,D (4). B,A,D,C

06. ஐக்கிய நாடுகளின் செயலாளரை தெரிவு செய்ய சிபாரிசு செய்யும் சபை.

(1) பொதுச்சபை

(2) பாதுகாப்புச்சபை

(3) சர்வதேச நீதிமன்றம்

(4) நமபிக்கை பொறுப்புச் சபை

07. இரண்டாவது உலகயுத்தத்துக்கு உடனடிக் காரணியாக அமைந்தது.

(1) அல்சேஸ் - லொறைன் பிரச்சினை

(2) சரஜிவோ நிகழ்ச்சி

(3) ஹிட்லர் போலந்தைக் கைப்பற்றியமை

(4) பேர்ள் துறைமுகம் தாக்கப்படல்

08. பின்வருவனவற்றுள் இரண்டாம் உலக யுத்தத்தின் ஒரு விளைவு எனக் கருதப்படுவது எது?

(1) சர்வதேச சங்கத்தின் தோற்றம்

(2) ஐக்கிய நாடுகள் சபை தோற்றம்

(3) வேர் செயில்ஸ் உடன்படிக்கை

(4) ஐரோப்பாவின் பேரரசுகள் பல அழிந்தமை.

09. முதலாம் உலக மகாயுத்தத்தில் ஐக்கிய அமெரிக்கா பங்குபெறுவதற்கான உடனடிக் காரணம்.

(1) 1916ல் நடைபெற்ற தேர்தலில் யுத்தத்திற்கு ஆதரவான குடியரசுவாதிகள் வெற்றியீட்டியமை.

(2) நீர்மூழ்கிக் கப்பலின் மூலமாக லூசிதானியா கப்பல் தாக்குதலுக்குள்ளானமை.

(3) பேர்ள் துறைமுகம் தாக்கப்பட்டமை.

(4) அமெரிக்காவில் ஜேர்மனியில் உளவுச் சதிகள் அம்பலமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நிரந்தர உறுப்பு நாடுகளை தன்னகத்தே கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு எது?

(1) பொதுச்சபை

(2) பாதுகாப்புச்சபை

(3) சமூக பொருளாதாரச்சபை

(4) நம்பிக்கைப் பொறுப்புச்சபை

11. முதலாம் உலக மகாயுத்தத்தில் மத்திய ஐரோப்பிய நாடுகளின் நட்பு கூட்டு அணியில் இணைந்து கொண்டு பின் பிரிந்து சென்று முக்கூட்டு நட்பு அணியில் இணைந்து கொண்ட நாடு.

(1) ரஷ்யா (2) ஜேர்மனி

(3) ஆஸ்திரியா (4) பிரான்ஸ்

12. முதலாம் உலக மகாயுத்த கால முடிவில் உலக சமாதானத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தை தோற்றுவிக்க முன்னின்ற தலைவர்.

(1) தியோடர் ரூஸ்வெல்ட்

(2) பிராங்னின் ரூஸ்வெல்ட்

(3) ஜோசப் ஸ்டாலின்

(4) வூட்ரோ வில்சன்

13. இரண்டாம் உலகமகா யுத்தத்தில் "அச்சு நாடுகளின்" கூட்டணி.

(1) ரஷ்யா, ஜப்பான், ஜேர்மனி

(2) பிரான்ஸ், ஜப்பான், ஜேர்மனி

(3) ரஷ்யா, இத்தாலி, ஜேர்மனி

(4) ஜேர்மனி, இத்தாலி, யப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. கீழ் கண்ட விடயங்களுடன் தொடர்புடைய நபர்.
- "கெஸ்ரபோ" இரகசியப் பொலிஸ் உருவாக்கம்.
- S.S. படையணி உருவாக்கம்
- நேஷனல் ஒப்சேவர் பத்திரிகை உருவாக்கம்

(1) முசோலினி (2) ஹிரோஹித்தோ
(3) ஹிட்லர் (4) ஜோசப் ஸ்டாலின்

பின்வருவனவற்றைக் கருதுக.

A - சரஜிவோ கொலை (ஆஸ்திரிய இளவரசன் பிரான்சிஸ் பேர்டின் அவனது மனைவி கொலை)
B - ஜேர்மனியின் ஹிட்லரின் எழுச்சியும், அவரின் செயற்பாடுகளும்.
C - ஜப்பானின் நடவடிக்கைகள்

15. மேல் உள்ள கூற்றுக்களில் 2ம் உலக மகா யுத்தத்துடன் தொடர்புடைய விடயங்களாக அமைவன,
(1). A யும் B யும் (2). A யும் C யும்
(3). B யும் C யும் (4). A யும் B யும்

16. பின்வரும் கூற்றுக்களுள் 2ம் உலகமகாயுத்ததுடன் தொடர்பற்றது,
(1) 2ம் உலகமகா யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் அமெரிக்காவினால் ஹிரோஷிமோ நகர் மீது அணுகுண்டு வீசப்பட்டமை.
(2) சர்வதேச சங்கம் உருவாக்கம் நிகழ்ந்தது
(3) கொழும்பிலும், திருகோணமலையிலும் ஜப்பானியரால் குண்டு வீசப்பட்டது.
(4) ஜப்பான் பேர்ள் துறைமுகத்தின் கடற்படை முகாமை குண்டு வீசித் தாக்கியமை.

17. கூட்டுச்சேரா (அணிசேரா) நாடுகளின் அமைப்பு நிறுவப்படுவதற்குத் தலைமையேற்றுச் செயற்பட்ட தெற்காசிய அரச தலைவர் யார்?
(1) மார்ஷல் டிட்டோ (2) ஜவஹர்லால் நேரு
(3) அப்துல்கமால் நாசர் (4) ரீகுவாங்யு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. ஹிட்லரின் அரசியல் சிந்தனை.

(1) நாசிசவாதம் (2) முதலாளித்துவம்

(3) பாசிசவாதம் (4) சமூகவுடைமை வாதம்

19. ஜேர்மனியர்கள், தூய ஆரியர்களின் வழிவந்த ஓர் உன்னதமான இனத்தவர் என்ற கருத்தைக் கொண்ட ஜேர்மனிய அரசியற் கோட்பாடு.

(1) பாசிசம் (2) பயனுடைய வாதம்

(3) மானிட வாதம் (4) நாசிசம்

20. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையிலுள்ள நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள விஷேடமான அதிகாரம் யாது?

(1) 5 வருட காலத்துக்கு பொதுச்செயலாளரை நியமிக்கும் அதிகாரம்

(2) உறுப்பு நாடுகளில் தகராறுகள் ஏற்படுமிடத்து ஆயுதப் படைகளை அனுப்பும் அதிகாரம்.

(3) இயற்கை அனர்த்தங்கள் நிகழும் உறுப்பு நாடுகளுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்கு ஒப்புமை வழங்குதல்.

(4) எந்த மசோதாவையும் நிராகரிக்கும் அதிகாரத்தை பயன்படுத்தும் உரிமை.

21. நிரல் 'A"யில் உளவுத் தாபனங்களின் பெயர்களும், நிரல் 'B" யில் அவை தொடர்பான நாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை ஒப்பிட்டு பெறப்படும் விடையின் ஒழுங்கு முறையைத் தருக.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. K.G.B உளவுச் சேவை | A. ஐக்கிய அமெரிக்கா |
| 2. மத்திய உளவுத் தாபனம் (C.I.A) | B. இந்தியா |
| 3. மொசாட் அமைப்பு (MOSSAD) | C. இஸ்ரேல் |
| | D. ரஷ்யா |

(1). D,A,C (2). B,C,D (3). C,A,B (4). A,D,C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. கீழ்வரும் நிறுவனங்கள் அமைக்கப்பட்ட வரலாற்று வரிசைக் கிரமம் எது?

A. ஐக்கிய நாடுகள் சபை
B. தெற்காசிய பிராந்திய நாடுகளின் கூட்டுறவு (சார்க் அமைப்பு)
C. சர்வதேச சங்கம்
D. அணிசேரா நாடுகள் அமைப்பு

(1). C,A,D,B (2). A,C,B,D
(3). D,C,A,B (4). C,D,A,B

23. "எனது போராட்டம்" எனும் நூலில் ஜேர்மனிய நாசிசவாதம் குறித்து அவர் தமது கருத்தை வெளியிட்டவர்.

(1) முசோலினி (2) ஹிட்லர்
(3) பிராங்லின் ரூஸ்வேல்ட் (4) ஹிரோஹித்தோ

24. சர்வதேச சங்கம் உருவாவதற்கு முனைப்புடன் செயலாற்றியவர்.

(1) பிராங்லின் ரூஸ்வேல்ட்
(2) வூட்ரோ வில்சன்
(3) லொயிட் ஜோர்ஜ்
(4) ஹிட்லர்

25. ஆயுத பலத்தால் 5 வருடங்களில் பெற்றவைகளைப் பாதுகாக்க மேலும் 50 வருடங்கள் ஆயுதம் தரித்த நிலையில் இருக்க வேண்டி வரும் எனக்கூறிய ஜேர்மனியர்.

(1) வொன்வோல்கே (2) பிஸ்மார்க்
(3) ஹிட்லர் (4) கைசர் வில்லியம்

26. ஹிட்லரினால் உருவாக்கப்பட்ட பொலிஸ் பிரிவின் பெயர்.

(1) கெஸ்டபோ (2) S.S.படை (3) C.I.A (4) K.G.B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௩. பின்வருவனவற்றைக் கருதுக.

- செயலாளரை நியமித்தல்
- சர்வதேச நீதிமன்றத்திற்கு நீதிபதிகளை நியமித்தல்.
- ஐக்கிய நாடுகள் சபைக்கு புதிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்ளல்

27. இப்பணிகள் ஐக்கிய நாடுகள் சபையின் எந்நிறுவனத்திற்குரியதாகும்?
(1) பொதுச்சபை
(2) பாதுகாப்புச் சபை
(3) பொருளாதார சமூகச்சபை
(4) சர்வதேச நீதிமன்றம்

28. ஐக்கிய அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர்.
(1) பிராங்ளின் ரூஸ்வெல்ட்
(2) வின்ஸ்டன் சேர்ச்சில்
(3) யோசப் ஸ்டாலின்
(4) ஜோர்ஜ் வாஷிங்டன்

29. பின்வரும் நாடுகளுள் அச்சு நாடுகள் அணியைச் சார்ந்தது.
(1) இத்தாலி (2) பிரித்தானியா
(3) ரஷ்யா (4) பிரான்ஸ்

30. முதலாம் உலக யுத்த நிறைவின் பின் வேர்சேல்ஸ் உடன்படிக்கை சம்பந்தமான பேச்சுவார்த்தையில் பங்கு கொண்ட நாடுகளும், தலைவர்களும் நிரல் ‘A”, நிரல் ‘B” என்பவற்றில் தரப்பட்டுள்ளன.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. ஐக்கிய அமெரிக்கா | A. விக்டோரியா ஒலண்டோ |
| 2. பிரித்தானியா | B. கிளெமன்ஷோ |
| 3. பிரான்ஸ் | C. வூட்ரோ வில்சன் |
| 4. இத்தாலி | D. லொயிட் ஜோர்ஜ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௩௦. நிரல் "A" யும், நிரல் "B" யும் சரியாகப் பொருத்திப் பெறப்படும் விடையின் ஒழுங்கினைத் தெரிவு செய்க.

(1). C,D,B,A
(2). C,B,D,A
(3). C,A,B,D
(4). B,C,D,A

31. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு அமைப்பில் வீட்டோ அதிகாரங்களைக் கொண்டுள்ள நாடுகளின் தொகுதி.

(1) ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா
(2) இத்தாலி, ஜேர்மனி, ரஷ்யா
(3) பிரித்தானியா, சீனா, ஆஸ்திரியா
(4) ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ்

32. இரண்டாம் உலகப்போரில் ஹிட்லர் பின்வரும் எந்நாட்டுடன் படையெடுத்த போது கடும் தோல்வி ஏற்பட்டது.

(1) இத்தாலி
(2) ரஷ்யா
(3) பிரித்தானியா
(4) போலந்து

33. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் குடியேற்ற நாடுகளுக்கு சுதந்திரம் வழங்குவதில் ஐக்கிய அமெரிக்கா முனைப்பாக நின்றதற்கான காரணம்,

(1) அந்நாடுகளின் ஜனநாயக சுதந்திரத்தை உறுதி செய்வதற்காகும்.
(2) அந்நாடுகளில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்துவதற்காகும்.
(3) ஐரோப்பாவில் குடியேற்ற நாடுகளாகக் கொண்டிருந்த வல்லரசுகளின் பலத்தைக் குறைத்து உலக அரங்கில் முதன்மை பெறுவது.
(4) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடியேற்ற நாடுகளின் பொருளாதார அபிவிருத்தின்கு உதவி வழங்கி அவற்றின் நன்மதிப்பைப் பெறல்.

Arasady Public Library
Municipal Council
Class No:
Acc No:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௩. பின்வருவனவற்றைக் கருதுக.

- இனவாதத்தை வெளிப்படுத்தல்
- ஆயுதமேந்திய வன்முறைக்கு அடிப்படையாய் அமைதல்
- அரசாங்கத்திற்கும், ஆட்சியாளருக்கும் கடவுளின் ஆசிர்வாதத்தை வேண்டல்
- சர்வாதிகார ஆட்சிமுறைமையை அடிப்படை எண்ணக்கருவாகக் கொள்ளல்.

34. மேற்குறித்த இயல்புகளைக் கொண்ட இரு அரசியல் கொள்கைகளாகப் பின்வரும் எவற்றைக் கருதலாம்.
(1) தாராண்மைவாதமும், பொதுவுடைமைவாதமும்
(2) பாசிசவாதமும், பொதுவுடைமைவாதமும்
(3) தாராண்மைவாதமும், நாசிசவாதமும்
(4) நாசிசவாதமும், பாசிசவாதமும்

35. தனது இனம் தூய ஆரியர்களிடமிருந்து வரும் உலகத்தில் மிக உயர்ந்த மனித இனமென மக்களை நம்பவைக்கச் செயற்பட்ட அரசுத்தலைவர் பின்வருவோரில் யார்?
(1) இத்தாலியின் பெனிற்றோ முசோலினி
(2) அடொல்ப் ஹிட்லர்
(3) வினாடி மீர் லெனின்
(4) மாவோ - சே - துங்

36. வேர்செயில்ஸ் உடன்படிக்கையின் பிரகாரம் ஜேரமனிக்கு வழங்கப்பட்ட தண்டனைகளுள் பிழையானக கூற்று
(1) போர்க் கப்பல்கள் 6 ஆகக் குறைக்கப்பட்டது.
(2) யுத்த கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் தயாரிப்பு முற்றாக தடைசெய்யப்பட்டது.
(3) ரயின்லாந்தில் ஜேர்மன் படைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.
(4) ரஷ்ய நாட்டுக்கு பெருந்தொகையான பணத்தினை நட்ட ஈடாக செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**37.** 2ம் உலகயுத்தத்தின் பின் கெடுபிடி யுத்தத்தில் (பனிப்போர்) ஈடுபட்ட இருபெரும் வல்லரசு நாடுகள்.

(1) ரஷ்யா - ஐக்கிய அமெரிக்கா

(2) சீனா - இங்கிலாந்து

(3) ரஷ்யா - பிரித்தானியா

(4) இந்தியா - சீனா

**38.** 2ம் உலக மகா யுத்தத்தில் ஜேர்மனி தோல்வி அடைந்தமைக்கு பிரதான காரணம்.

(1) இத்தாலியின் செயற்பாட்டால் ஜேர்மனி, ஆஸ்திரியாவிற்கு இடையில் இருந்த போர் இரகசியங்கள் எதிரிகளின் கைகளுக்கு சென்றமை.

(2) ஐக்கிய அமெரிக்கா அச்சு நாடுகளுக்கு எதிராக உலக அபிப்பிராயத்தை ஒன்று திரட்டியது.

(3) நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டமையும் அதனால் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சியும்

(4) நேச நாடுகள் ஆரம்பத் தோல்வியிலிருந்து கற்றுக் கொண்டவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிப்பீட்டுப் பயிற்சிகளுக்கான விடைகள்.

## அலகு 05
## பிரித்தானியரின் கீழ் இலங்கையில் சமூக மாற்றங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 02. | 3 | 03. | 2 | 04. | 4 |
| 05. | 2 | 06. | 4 | 07. | 2 | 08. | 3 |
| 09. | 1 | 10. | 4 | 11. | 3 | 12. | 3 |
| 13. | 2 | 14. | 4 | 15. | 1 | 16. | 4 |

## அலகு 06
## இலங்கை சுதந்திரமடைதல்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 02. | 3 | 03. | 4 | 04. | 1 |
| 05. | 2 | 06. | 2 | 07. | 1 | 08. | 4 |
| 09. | 3 | 10. | 4 | 11. | 2 | 12. | 4 |
| 13. | 2 | 14. | 3 | 15. | 4 | 16. | 2 |
| 17. | 4 | 18. | 4 | 19. | 4 | 20. | 1 |
| 21. | 4 | 22. | 1 | 23. | 2 | 24. | 3 |
| 25. | 2 | 26. | 1 | 27. | 4 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 07
## உலகில் இடம் பெற்ற பிரதான புரட்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 02. 3 | 03. 2 | 04. 3 |
| 05. 4 | 06. 3 | 07. 1 | 08. 4 |
| 09. 1 | 10. 3 | 11. 3 | 12. 1 |
| 13. 1 | 14. 2 | 15. 4 | 16. 3 |
| 17. 4 | 18. 2 | 19. 4 | 20. 1 |

## அலகு 08
## உலகயுத்தங்களும் இணக்கப்பாடுகளும்

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 02. 4 | 03. 2 | 04. 3 |
| 05. 2 | 06. 2 | 07. 3 | 08. 2 |
| 09. 2 | 10. 2 | 11. 1 | 12. 4 |
| 13. 4 | 14. 3 | 15. 3 | 16. 2 |
| 17. 2 | 18. 1 | 19. 4 | 20. 4 |
| 21. 1 | 22. 1 | 23. 2 | 24. 2 |
| 25. 1 | 26. 1 | 27. 1 | 28. 4 |
| 29. 1 | 30. 1 | 31. 1 | 32. 2 |
| 33. 3 | 34. 4 | 35. 2 | 36. 4 |
| 37. 1 | 38. 4 | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று விளக்கப்படங்களும் குறிப்புக்களும்.

## S.J.V.செல்வநாயகம்



- இவரால் ஆரம்பிக்கப்பட்ட கட்சி தமிழ் அரசுக் கட்சியாகும்.
- இக்கட்சி சமஷ்டிக்கட்சி எனவும் அழைக்கப்பட்டது.
- 1949ம் ஆண்டு தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்தார்.
- இவர் சிறந்த வக்கீலாகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும பதவி வகித்தார்.
- 1947ம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பாக காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிப் பெற்றார்.
- 1957ல் பண்டா செல்வா ஒப்பந்தத்தையும், 1965ல் டட்லி செல்வா ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தி தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமைகளை பெற்றுத்தர முனைந்தவர் ஆவார்.

## A.E.குணசிங்க



- தொழிலாளர் உரிமைக்காக போராடிய பெருந்தலைவர் ஆவார.
- 1923ல் பிரித்தானியருக்கெதிரான 20,000 தொழிலாளர்களைக் கொண்ட பொது வேலை நிறுத்தம் ஒன்றினை இவர் தலைமையில் மேற்கொண்டார்.
- 1922 ஆம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் சங்கத்தை அமைத்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவர் ஆரம்பித்த கட்சியின் பெயர் தொழிலாளர் கட்சியாகும்.
- சர்வசன வாக்குரிமைக்காக குரல் கொடுத்தவரும் இவரேயாவார்.
- தொழிலாளர் உரிமைக்காக போராட்டங்கள் நடத்துதல், சம்பள உயர்வு, தொழில் நிலையை மேம்படுத்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டிருந்தார்.
- இவர் தலைமையில் தலை வரிக்கு எதிராக கல்லுடைக்கும் போராட்டம் நிகழ்த்தப்பட்டது.

டட்லி சேனநாயக்க



- D.S.சேனநாயக்காவின் புதல்வரான இவர் இலங்கையின் இரண்டாவது பிரதம மந்திரியாவார்.
- 26.03.1952ல் சோல்பரி பிரபுவினால் பிரதம மந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- 1953ல் அரிசி விலையேற்றத்தாலும், மானியங்கள் நிறுத்தப்பட்டதாலும் இவர் இராஜினாமா செய்தார்.
- மீண்டும் 1957ல அரசியலில் நுழைந்து 1960ல பொதுதேர்தலில் வெற்றிப் பெற்று மீண்டும் பிரதமரானார் தொடர்ந்து 4 மாதங்களில் பின்னர் மீண்டும் இராஜினாமா செய்தார்.
- பின்னர் 1965ல் சிங்கள, தமிழ் போன்ற ஆளுங்கட்சியின் ஆதரவுடன் 1970 வரை பிரதமராக இருந்தார்.
- இவரது முயற்சியினால் இலங்கை தனது பொருளாதாரத்தில முன்னேற்றம் கண்டது என்று கூறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**D.S.சேனநாயக்கா**



- இவர் டொனமூர் அரசுக் கழகத்தில் விவசாய காணி நிர்வாகக் குழுவின் தலைவராக கடமையாற்றினார்.
- 1947 ஆம் ஆண்டு தேர்தலின் பின் இவர் இலங்கையின் முதலாவது பிரதமராக பதவி வகித்தார்.
- இவர் 1935ல் "விவசாயமும் தேசத்தின் நீர்வளமும்" என்ற நூலை வெளியிட்டார்.
- இலங்கையின் முதலாவது பல்நோக்குத் நீர்ப்பாசனத் திட்டமான கல்லோயாத் திட்டத்தினை உருவாக்கினார்.
- இவர் "தேசபிதா" என்ற அடைமொழி கொண்டு அழைக்கப்பட்டார்.

வில்லியம் கோபல்லாவ



- இவர் சோல்பரி யாப்பின்படி இருந்த ஆளுநர் நாயகம் பதவிக்கு பதிலாக புதிய அரசியல் யாப்பின்படி பெயரளவு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

**D.B.** விஜயதுங்க



- இவர் இலங்கையின் மூன்றாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- முன்னாள் ஜனாதிபதி R.பிரேமதாஸ அவர்களின் அகாலமரணத்தைத் தொடர்ந்து இடைக்கால ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாா.
- இவர் 1993 -1994 ஆண்டு வரை ஏறத்தாழ ஓராண்டே பதவி வகித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரிகா பண்டாரநயக்கா குமாரதுங்க



➢. இவர் இலங்கையின் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாவார்.

➢. இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதி ஆவார்.

➢. இவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவராகவும் இருந்தார்.

➢. இவரது தந்தை S.W.R.D. பண்டாரநாயக்க, தாய் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க.

➢. இவரது கணவர் பிரபல நடிகரும், அரசியல்வாதியுமான விஜயகுமார ரணதுங்க ஆவார்.

➢. 1994ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

➢. 2005 - 11 - 19 வரை இருதடவைகள் ஜனாதிபதியாக பதவி ஏற்றார்.

மஹிந்த இராஜபக்ஷ



➢. இவர் இலங்கையின் 5வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டார்.

➢. இவர் 2005-11-19ல் ஜனாதிபதி -யாகப் பதவி ஏற்றார். மேலும் 2015-01-09 வரையும் இருதடவைகள் பதவி ஏற்றார்.

➢. இவர் இலங்கை பாராளுமன்றத்தில் 13வது பிரதமராகவும் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

➢. இவர் பாதுகாப்பு அமைச்சர், நிதி அமைச்சர், சட்ட அமைச்சர், கப்பல் துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும் பணியாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்திரிபால சிறிசேன



- இவர் இலங்கையின் ஆறாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக விளங்குகின்றார்.
- இவர் 2015-01-09 இல் ஜனாதிபதி-யாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- 100 நாள் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தினார்.
- இவர் பாதுாப்பு அமைச்சர், மகாவலி அபிவிருத்தி சுற்றாடல் அமைச்சர், புத்தசாசன அமைச்சர் போன்ற பதவிகளை வகித்திருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க



- ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவராக 1994 முதல் பதவி வகித்து வருகிறார்.
- 1977 முதல் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தார்.
- 1993 - 1994 வரையும் பின்னர் 2001 - 2004 வரையும் பதவி வகித்திருந்தார்.
- 2015 ஜனவரி 9ம் திகதி முதல் பிதம மந்திரியாக பதவிவகித்துவருகின்றார்.
- இவர் இலங்கையின் 16வது பிரதமர் ஆவார்.

கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா



- இவரும் இடதுசாரிக் கட்சியின் ஒருவராவார்.
- 1943ல் பொல்ஸ்வின் லெனின் கட்சியை ஆரம்பித்தார்.
- 1947ம் ஆண்டுத் தேர்தலில் இக் கட்சி 05 ஆசனங்களைப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின்சன்ட் சேர்ச்சில்



- இவர் பிரித்தானிய பிரதமர் ஆவார்.
- நாவான்மை, தந்திரபுத்தி, வல்லமை படைத்த தலைவனாக விளங்கினார்.
- இங்கிலாந்து (பிரித்தானியா) மக்களை உற்சாகமூட்டி யுத்தத்தில் பங்கு கொள்ள வைத்தமை.
- என்னால் உங்களுக்குத் தரக்கூடியது இரத்தமும், கடின உழைப்பும், கண்ணீரும், வியர்வையுமே" என்று கூறினார்.
- 1941ல் 2ம் உலகயுத்தம் நடைபெற்ற வேளையில் அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட்டுடன் 1941 ஆகஸ்ட் மாதம் அத்திலாந்திக் பிரகடனத்தில் கைச்சாத்திட்டார்.
- உலக சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கு தெஹ்ரான் மாநாடு (1945) சான்பிரான்சிஸ்கோ மாநாடு (1945) ஆகியவற்றில் கலந்து ஐக்கிய நாடுகள் சபை உருவாவதில் முக்கிய பங்காற்றினார்.

லியோன் ட்றொஸ்கி



- இரஷ்யப் புரட்சியில் லெனினுடன் இணைந்து ஈடுபட்டவர்.
- 1912ல் தொழிலாளர் தலைமையில் ஆட்சி ஏற்பட வேண்டும் என்ற நோக்குடன் லெனினுடன் சேர்ந்து பொல்ஷவிக் கட்சியை ஆரம்பித்தலில் முக்கிய பங்காற்றினார்.
- 1917 ஒக்டோபர் புரட்சியில் தொழிலாளருடன் இணைந்து புரட்சிகர அரசாங்கங்கத்தை அமைப்பதற்கு உதவினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 ஆம் லூயி மன்னனின் மனைவி மோரி ஆன்டனோயிட்டும் பிள்ளைகளும்



- 16 ஆம் லூயி மன்னனின் மனைவியாகிய இவள் ஆஸ்திரியா நட்டைச் சேர்ந்தவர்.
- தேவையற்றவிதத்தில் மன்னின் அதிகாரத்தையும், பலவீனத்தையும் பயன்படுத்தி அரசியலில் தலையிட்டாள்.
- ஆடம்பரமான மாளிகையில் வாழ்ந்து ஆடம்பரக் கோளிக்கைகளில் பொழுதைப் போக்கினாள்.
- பிரான்சு மக்கள் பாணுக்கு போராடிய போது கேக்கைச் சாப்பிடுங்கள் எனக் கூறினாள்.
- பிரான்சிய மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டாள்.

பிரான்சு பேடினன் இளவரசன்



- அஸ்திரியா முடிக்குரிய இளவரசன் ஆவான்.
- இவன் சேர்பியாவில் வைத்து கொல்லப்பட்டான்.
- இவன் கொலையுடன் தொடர்பு பட்டவர்கள் பொஸ்னிய கறுப்புக்கை இயக்க உறுப்பினர் ஆவார்கள்.
- சேர்பியா கொலைக்கு மன்னிப்பு கோரியது. ஆனால் ஒசுத்திரியாவின் எந்த நிபந்தனையையும் ஏற்கவில்லை.
- இதன் காரணமே முதலாம் உலக மகாயுத்ததிற்கான உடனடிக் காரணமாக அமைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைசர் வில்லியம்



- 1888ல் ஜேர்மனியின் பேரரசன் ஆனான்.
- பரந்த ஜேர்மன் பேரரசு ஒன்றை உருவாக்க முயன்றான்.
- பிஸமார்க்கின் நோக்கங்களுக்கு மாறாக ஜேர்மனிக்கு குடியேற்றங்-களை உருவாக்க விரும்பினான்.
- பேர்ளின - பக்தாத் புகையிரதப் பாதையை அமைப்பதற்கு துருக்கியருக்கு உதவியதன் மூலம் பிரித்தானியர்களுக்கு அச்சுறுத்தலாக விளங்கினான்.
- கடற்படையை கூட்டியதுடன், டொரநோட் கப்பல்களை அமைத்தான். கீல் கால்வாயை ஆழமாக்கினான்.
- 1ம் உலக மகாயுத்ததிற்கு இவனது செயற்பாடுகளே முக்கிய பங்களித்தன.

## ரூசோ



- மக்களின் சுதந்திரம் தொடர்பான எண்ணக்கருவை தனது "சமூக ஒப்பந்தம்" என்ற நூலின் ஊடாக வெளியிட்டார்.
- மன்னன் மக்களின் நலன் கருதி செயற்பட வேண்டும், அவ்வாறன்றி சர்வாதிகாரமாக ஆட்சி செய்யும் மன்னனைத் துரத்துவது மக்களது உரிமை எனக் குறிப்பிட்டார்.
- இவரின் தத்துவக் கருத்துக்கள் பிரான்சியப் புரட்சிக்கு காரணமாக அமைந்தது எனலாம்.
- சுதந்திரமாகப்பிறந்த மனிதன் எங்கும் அடிமைச்சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளான் என்பது இவரது பிரசித்தி பெற்ற கூற்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- இவர் "சட்டத்தின் சாரம்" என்ற நூலின் ஆசிரியர் ஆவார்.
- இவரின் நூலில் தனிப்பட்ட ஒருவரிடம் அதிகாரங்கள் குவிந்திருப்பது பொருத்தமற்றது எனவும், இது சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும எனவும் விளக்கினார்.
- இவரின் கருத்து பிரான்சியப் புரட்சிக்கு பெரும் பங்களிப்பு செய்தது.
- சர்வாதிகார ஆட்சித் தவிர்ப்புக்கு இவர் முன் வைத்த கொள்கை வலுவேறாக்கம் ஆகும்.

16ஆம் லூயி மன்னன்



- இவன் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அனைத்து அதிகாரங்களையும் கொண்ட மன்னன் ஆவான்.
- பூர்போன் வம்சத்தைச் சேர்ந்தவன்.
- இவனது மனைவி மேரி ஆன்டனோயிட் ஆவாள்.
- 1789 ஆம் ஆண்டு பிரான்சியப் புரட்சி ஏற்பட இவனது செயற்பாடுகளே காரணமாக இருந்தது.

பெனிடோ முசோலினி



- இவரின் தாயகம் இத்தாலி ஆகும்.
- இரண்டாம் உலக யுத்தத்தில் இத்தாலியை வழிநடாத்திய பாசிசத் தலைவராவார.
- 1922இல் பாசிசவாத கொள்கையைக் கொண்டு பாசிசக் கட்சியை உருவாக்கினார். தனிக்கட்சி சர்வாதிகார ஆட்சியே பாசிசவாதம் ஆகும்.
- இவரால் உருவாக்கப்பட்ட ஆயுதப்படை "கருஞ்சட்டை இராணுவம்" என்று அழைக்கப்பட்டது.
- இறுதியாக 1943ல் தீவிரவாதிகளினால் தூக்கிலிடப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி.ஐ.லெனின்



- ➢. இவர் ரஷ்யாவில் போல்ஸ்விக் கட்சியை உருவாக்கி அதற்கு தலைமை தாங்கிய ரஷ்யத் தலைவர் ஆவார்.
- ➢. 1917 ஆம் ஆண்டு இடம்பெற்ற அக்டோபர் புரட்சிக்கு / (ரஷ்யபுரட்சி) தலைமைதாங்கிய தலைவராவார்.
- ➢. இப்புரட்சியின் பின்னர் ரஷ்யா சோவியத் சமவுடைமை குடியரசு என்ற பெயரில் அறிமுகமானது.
- ➢. இவர் கார்ல் மார்க்ஸின் கம்யூனிசக் கொள்ளையைச் செயற்படுத்தினார்.
- ➢. இவரால் "தீப்பொறி" என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது.

அடோல்ப் ஹிட்லர்



- ➢. இவரின் தாயகம் ஆஸ்திரியாவாக இருந்தபோதும் ஜேர்மனியில் ஆட்சி செய்த நாசிசத் தலைவர் ஆவார்.
- ➢. இவரால் உருவாக்கப்பட்ட கொள்கை நாசிசவாதம் எனப்பட்டது.
- ➢. இவர் "எனது போராட்டம்" என்ற நூலினை எழுதினார்.
- ➢. இரண்டாம் உலக யுத்தம் ஏற்படக் காரணமாக இருந்ததோடு அறுபது இலட்சம் யூதர்களை மிலேச்சத் -தனமாக கொலை செய்த சர்வாதிகாரியாவார்.
- ➢. இவரிடம் எஸ்.எஸ் என்ற இராணுவப்படையும், கெஸ்டபோ என்னும் இரகசிய பொலிஸ் படையும் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டோமன் பிஸ்மார்க்



- இவர் 19 ஆம் நூற்றாண்டில் ஜேர்மன் மொழி பேசிய 350 சிறிய நாடுகளை ஒன்றிணைத்து ஜேர்மனியை உருவாக்கிய திறமையான தலைவர் ஆவார்.
- 1870ல் ஐக்கிய ஜேர்மனியை உருவாக்கி அதனை பலம் வாய்ந்த நாடாக மாற்றுவதற்காக பிரான்சுடன் யுத்தத்தில் ஈடுபட்டார். இதனால் பிரான்சும் ஜேர்மனியும் பரஸ்பர பகைமை நாடுகளாகின.


இங்கிலாந்தின் கியூ மாளிகை




- வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாளிகையில் வைத்து கியூ கடிதம் எழுதப்பட்டது.
- ஒல்லாந்து இளவரசன் ஒரேஞ்வில்லியம் பிரான்சியரின் ஆக்கிரமிப்புக்கு அஞ்சி பிரித்தானியரைத் தஞ்சமடைந்தான்.
- இங்கிலாந்தில் உள்ள இம்மாளிகையில் வைத்து எழுதப்பட்ட கடிதமே கியூ கடிதமாகும்.
- இலங்கையில் உள்ள ஆளுநர் பன் எங்கல் பக்குக்கு எழுதப்பட்டது. இது பிரித்தானியருக்குச் சாதகமாக எழுதப்பட்டது.
- இதன் மூலமாகவே பிரித்தானியா இலங்கையை குடியேற்ற நாடு ஆக்குவதற்கு வாய்ப்பாக மாறியது எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பேர்ள் துறைமுகத்தை தாக்குதல்



ஹிட்லரின் படையொன்றினால் அழித்தொழிக்கப்பட்ட கிராமமொன்றில் இறந்துபோன சிறுவர்களை ஞாபகமூட்டுவதற்காக நிர்மாணிக்கப்பட்ட நினைவுச் சின்னம்.




ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றக் கட்டடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேர்சேல்ஸ் மாளிகை




வேர்சேல்ஸ் மாளிகையின் முன்பக்க வாயில்



வேர்சேல்ஸ் மாளிகையின் உட்புறம்



வேர்சேல்ஸ் மாளிகையின் படுக்கை அறை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர்சேல்ஸ் மாளிகை வளாகப்பூங்கா




பொஸ்டன் தேனீர் விருந்து



ஐக்கிய நாடுகள் சபையின் சின்னம்




இலங்கையின் உச்ச நீதிமன்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொல்கொல்ல அணை




கொத்மலை நீர்த்தேக்கம்



விக்டோரியா நீர்த்தேக்கம்



ரந்தெனிகல நீர்த்தேக்கம்



Class No
Acc No 534
Arasady Public Library
Municipal Council
Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 534

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

534

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பூபாலசிங்கம் புத்தகசாலை
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.எண் : 011 2422321, 0112435713
மின்னஞ்சல் : Poobalasingham202@gmail.com

pbd
101003042
VARALARU G 11 PART -2
(SIRUKURIPU)
Rs. 200.00